REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

2022 மே 2 திங்கட்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

1932 - 2022

வரு. 90 இல. 101 | Monday 02, May, 2022 | 16 பக்கங்கள் | 40/-

சிவப்பரிசி, நாட்டரிசி மற்றும் சம்பா;

## சலுகை விலையில் ச.தொ.சவில் அரிசி



இந்திய கடன் வசதியின் கீழ் இறக்குமதி செய்யப்படும் அரிசியை சதொச மற்றும் பல்பொருள் அங்காடிகள் மூலம் சலுகை விலையில் நுகர்வோருக்கு விற்பனை செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார். 06

## பிரதமர் பதவி குறித்து ஜனாதிபதி எடுக்கும் தீர்மானத்தை ஏற்க தயார்

### ஜனாதிபதிக்கு பிரதமர் மஹிந்த அறிவித்துள்ளார்



பிரதமர் பதவி தொடர்பில் தாம் எடுக்கும் எந்தவொரு தீர்மானத்தையும் ஏற்றுக்கொள்ளத் தயார் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அறிவித்துள்ளார். பிரதமர் தனது நிலைப்பாட்டை நேற்று காலை ஜனாதிபதியிடம் தெரிவித்ததாக பிரதமர் அலுவலகத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.


சர்வகட்சி இடைக்கால அரசாங்கத்தை நியமிப்பதற்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை இராஜினாமா 06

பாரிய ஊர்வலங்கள், அணிவகுப்புகள் இன்றி

## பிரதான கட்சிகளின் மேதின கூட்டங்கள் நேற்று கொழும்பில்!

### SLPP நுகேகொடையில்; SJB சுதந்திர சதுக்கத்தில்

லோரன்ஸ் செல்வநாயகம்



முக்கிய அரசியல் கட்சிகளின் மேதினக் கூட்டங்கள் நேற்று கொழும்பில் பல்வேறு பகுதிகளிலும் நடைபெற்றதுடன் பாரிய ஊர்வலங்கள் கொண்டாட்டங்கள் இன்றி மட்டுப்படுத்தப்பட்ட 06



பொதுஜன முன்னேற்ற தொழிற்சங்கத்தின் மேதின கூட்டம் நேற்று நுகேகொடையில் நடைபெற்றது. இதில் பெரும் திரளான மக்கள் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு மாநில அரசு இலங்கைக்கு நன்கொடையாக

# 40,000 மெ. தொன் அரிசி உட்பட மருந்து, அத்தியாவசிய பொருட்கள்

### 120 கோடி ரூபாவுக்கும் அதிகளவு பெறுமதியானவை


லோரன்ஸ் செல்வநாயகம்

இந்திய, தமிழ்நாடு மாநில அரசாங்கம் இலங்கைக்கு 120 கோடி ரூபா பெறுமதியான அத்தியாவசிய பொருட்களை நன்கொடையாக வழங்குவதற்கு தீர்மானித்துள்ளது. அதற்கிணங்க 40 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி, மருந்துப் பொருட்கள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களை படகுகள் மூலம் இலங்கைக்கு அனுப்பி வைப்பதற்கு தமிழ்நாடு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்திய மத்திய அரசின் அனுமதி கோரப்பட்டுள்ள நிலையில் அந்த அனுமதி கிடைத்ததும் இலங்கைக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார். அந்த வகையில் மேற்படி அத்தியாவசிய பொருட்களில் 40 ஆயிரம் மெட்ரிக் தொன் அரிசி, 06



## மக்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்க வேண்டும்



நிதியமைச்சரிடம் ரணில் விக்கிரமசிங்க வேண்டுகோள் 03

## மக்கள் போராட்டத்தை காட்டிக் கொடுக்க முடியாது

### பிரேமதாச நினைவேந்தலில் சஜித் உரை




மோசடி, இலஞ்சம், ஊழல் நிர்வாகத்திலிருந்து விடுவிப்பதற்காகக் கொண்டுவரப்படும் மோசடியான தந்திரோபாயமே இடைக்கால அரசாங்கமாகும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

இதனூடாக, இந்நாட்டைக் கட்டியெழுப்புவதற்குப் பதிலாக 06

## சட்டவிரோதமாக Gas விற்ற இருவர் கைது

### ராஜகிரிய பகுதியில் STF அதிரடி




உரிமம் இன்றி சட்டவிரோதமான முறையில் லிட்ரோ எரிவாயுவை தாங்கிகளில் சேமித்து வைத்து விற்பனை செய்த இருவரை விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

ராஜகிரிய மிரிஹான பிரதேசத்தில் நேற்று முன்தினம் (30) மேற்கொள்ளப்பட்ட விசேட 06

## ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்!

### வவுனியாவில் மூவர் கைது

வவுனியா விசேட நிருபர்



ஊடகவியலாளர்கள் மீது வவுனியாவில் தாக்குதல் மேற்கொண்ட குற்றச்சாட்டில் எரிபொருள் நிரப்பு நிலைய முகாமையாளர் உட்பட மூவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, நேற்று முன்தினம் (30) மாலை வவுனியா 06

பாராளுமன்ற பிரதி சபாநாயகர் பதவி;

## ரஞ்சித் சியம்பலாபிட்டிய பதவியிலிருந்து இராஜினாமா



பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய பாராளுமன்ற பிரதி சபாநாயகர் பதவியிலிருந்து இராஜினாமா செய்துள்ளார்.

அடுத்த பாராளுமன்ற அமர்வில் புதிய பிரதி சபாநாயகர் நியமிக்கப்படுவார் என பாராளுமன்ற உறுப்பினர் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார். 06

இளம் மாணிக்க வியாபாரி

## மொஹமட் ஸஜான் காலமானார்

(அஜ்வாத் பாஸி)



பேருவளை, சீனன்கோட்டையைச் சேர்ந்த இளம் மாணிக்க வியாபாரியான மொஹமட் ஸஜான் (வயது 34) சனிக்கிழமை இரவு (30) காலமானார். சமூக சேவையாளரான இவர், நேற்று 06

சிறந்த புதிய உத்தியோகத்தர்கள் தெரிவு;

## நீண்ட காலத்தின் பின்னர் உதிக்கவுள்ள உதய சூரியன்

### TULF செயலாளர் நாயகம் சங்கிரி பெருமிதம்



நீண்ட காலத்தின் பின்னர் மீண்டும் உதய சூரியன் உதிக்கவுள்ளது. சிறந்த கட்சி உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். இதன் ஊடாக எதிர்வரும் காலங்களில் தமிழர் விடுதலை கூட்டணி மீண்டும் பிரகாசிக்க உள்ளது என தமிழர் விடுதலை கூட்டணி அணியின் செயலாளர் நாயகம் வீ. ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார். 06

எரிபொருள் விநியோக நடவடிக்கை;

## நாடு முழுவதும் இராணுவம் கண்காணிப்புகளில்



எரிபொருள் விநியோக நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்காக நாடு முழுவதும் இராணுவத்தினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

பிரதான எரிபொருள் நிரப்பு நிலையங்களிலிருந்து வெளியேறும் எரிபொருள் பௌசர்கள் உரிய முறையில் எரிபொருள் நிரப்பு நிலையங்களை 06






மருந்துகளின் விலை அதிகரிப்பு;

## புதிய வர்த்தமானியை இரத்து செய்ய கோரிக்கை



03

## இந்தியாவில் அகதிகளாக 90,000 இலங்கைத் தமிழர்கள்



தமிழகத்தில் 108 முகாம்களில் 58, 843 பேர் 03






## அலரி மாளிகைக்கு முன்பாக ஏற்பட்ட அமைதியின்மை



அலரி மாளிகைக்கு முன்பாக நடத்தப்பட்டு வரும் அரசாங்கத்திற்கு எதிரான போராட்டக் களத்தில் தற்போது அமைதியின்மை ஏற்பட்டுள்ளது.

ஜனாதிபதி மற்றும் பிரதமர் உள்ளிட்ட அரசாங்கத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து நாடளாவிய ரீதியில் பொதுமக்கள் கிளர்ந்தெழுந்து போராட்டங்களை நடத்தி வருகின்றனர். இந்த நிலையில் கொழும்பு 06

2.5 கோடி ரூபா பெறுமதியான

## 130 kg கேரள கஞ்சா கிளிநொச்சியில் மீட்பு


பரந்தன் குரூப் நிருபர்



கிளிநொச்சியில் இராணுவப் புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 130 கிலோ நிறையுடைய கேரள கஞ்சா மீட்கப்பட்டுள்ளது. குறித்த கஞ்சா பொதிகள் இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்டு வெளி இடங்களிற்கு அனுப்பும் நோக்குடன் பூநகரி வேரவில் பிரதேசத்தில் உள்ள பற்றைக்குள் மறைக்கப்பட்டுள்ளதாக சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. குறித்த சுற்றிவளைப்பில் மீட்கப்பட்ட கஞ்சா பொதிகளின் பெறுமதி இலங்கை மதிப்பில் 2.5 கோடி ரூபா என மதிப்பீடப்பட்டுள்ளது. 06

## சிங்கப்பூரில் புதிய ரக ஓமிக்ரோன்!

### இருவரிடம் இனங்காணப்பட்டது



வேகமாகப் பரவும் ஓமிக்ரோன் வகை கொரோனாவின் புதிய துணை ரகத் தொற்று, சிங்கப்பூரில் இருவரிடம் கண்டறியப்பட்டுள்ளது. இதுகுறித்து அந்த நாட்டு அதிகாரிகள் கூறியதாவது,

புதிய வகை கொரோனாக்களைக் கண்காணிக்கும் சுகாதாரத் துறை அமைச்சக திட்டத்தின் கீழ், இருவருக்கு பிஏ.2.12.1 ரக ஓமிக்ரோன் வகைக் கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளது உறுதி செய்யப்பட்டுள்ளது. அந்த இருவருக்கும் கொரோனா உறுதி செய்யப்பட்ட 06

## பஸ்ஸும் ஆட்டோவும் நேருக்கு நேர் மோதி மூவர் ஸ்தலத்தில் பலி

லோரன்ஸ் செல்வநாயகம்



பொலன்னறுவை –மட்டக்களப்பு பிரதான வீதியின் மனம்பிடியவில் பஸ் ஒன்று முச்சக்கர வண்டியுடன் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் தம்பதி உட்பட மூவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்த விபத்தில் 70 வயதான முச்சக்கர வண்டி சாரதி ஒருவரும் அவரது 62 வயது மனைவியும் 72 வயதுடைய பெண் ஒருவரும் உயிரிழந்துள்ளனர். உயிரிழந்தவர்கள் அரலகங்வில பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். 06







# கொட்டகலையில் இ.தொ.கா வின் மேதினக் கூட்டம்

## தமிழக பா.ஜ.க தலைவர் அண்ணாமலை பிரதம அதிதி







ஹற்றன் சுழற்சி நிருபர்

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தோட்ட தலைவர், தலைவிமார்கள் மற்றும் வாலிப காங்கிரஸ் இளைஞர்கள் ஆகியோர் கலந்து கொண்ட மேதினக்கூட்டம், கொட்டகலை சீ.எல்.எப். வளாகத்தில் நேற்று (01) இடம்பெற்றது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த மேதினக் கூட்டத்திற்கு தமிழக பா.ஜ.க தலைவர் அண்ணாமலை பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

இ.தொ.கா பொது செயலாளரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் மற்றும் இ.தொ.காவின் தவிசாளர் மருதபாண்டி ராமேஷ்வரன், இ.தொ.காவின் தலைவர் செந்தில் தொண்டமான், கட்சியின் முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினர்கள், பிரதேச சபை தலைவர்கள், உறுப்பினர்கள், முக்கியஸ்தர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

இந்த மே தின கூட்டத்திற்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தோட்ட தலைவர், தலைவிமார்கள் மற்றும் வாலிப காங்கிரஸ் இளைஞர்கள், யுவதிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வின் ஆரம்பத்தில், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஆரம்பகால தொழிற்சங்கவாதியும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான அமரர். கே.ராஜலிங்கத்தின் உருவப்படம் திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது.

இதன்போது, மேதினத்தில் கலந்து கொண்ட தமிழக பா.ஜ.க தலைவர் அண்ணாமலைக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸினால் நினைவுச்சின்னம் ஒன்றும் வழங்கி வைக்கப்பட்டது.

அத்தோடு, தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு புலமைபரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டதோடு, மூத்த தலைவர், தலைவிமார்களுக்கு கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெற்று கலை, கலாசார நிகழ்வுகளும் இடம் பெற்றன.

# இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸை எக்காலத்திலும் அசைக்க முடியாது



மலையக மக்கள் இந்த நாட்டில் சம உரிமையுடன் வாழ்வதற்கான சூழ்நிலையை உருவாக்கிய எமது பெருந்தலைவர்களின் கொள்கை வழியிலேயே இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தொடர்ந்து பயணிக்கிறது என தெரிவித்த இ.தொ.கா. தலைவர் செந்தில் தொண்டமான், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸை யாராலும் எக்காலத்திலும் அசைக்க முடியாது எனவும் தெரிவித்தார்.

கொட்டகலையில் நேற்று நடைபெற்ற இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் மே தின கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸானது, பல தசாப்தங்களாக மலையக மக்களின் நலன் கருதி சேவையாற்றி வந்துள்ளது. மறைந்த தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமான் , இந்த நாட்டில் மலையக மக்கள் வாழ்வதற்கான உரிமையைப் பெற்றுக்கொடுத்தார். அவ்வாறே, மறைந்த தலைவர் ஆறுமுகன் தொண்டமான் , மலையக மக்கள் இந்த நாட்டில் சம உரிமையுடன் வாழ்வதற்கான சூழ்நிலையை உருவாக்கினார்.

அப்பெருந் தலைவர்களுடைய கொள்கைகளுடனேயே இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பயணம் தொடரும்.

இ வ் வ ா ற ா ன நிலையில், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸை யாராலும் எக்காலத்திலும் அசைக்க முடியாது. ஓர் அரசியல் கட்சிக்கான ஆதரவை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மீளப் பெறுவதாயின், அது தொடர்பில் பல முறை கலந்துரையாடியே தீர்மானிக்குமே தவிர, அவசரத்திலோ அல்லது பதற்றத்திலோ அவ்வாறான தீர்மானமொன்றை கட்சி ஒருபோதும் எடுக்காது. தற்போதைய அரசாங்கத்துடனும் சரி, அதற்கு முன்னரான அரசாங்கத்துடனும் சரி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் நீண்ட காலம் பயணித்திருக்கிறது. அந்தப் பயணங்கள் மலையக மக்களின் நலனுக்கான தொலைதூர நோக்கத்துடன் கூடிய நீண்டநாள் பயணங்களாகவே இருந்திருக்கின்றன. இன்றைய சூழ்நிலையில் நாடு எதிர்கொண்டிருக்கும் பொருளாதார நெருக்கடி காரணமாக, எதிர்வரும் காலங்கள் மிகவும் தீர்மானமிக்கதாக அமைந்திருக்கும். இவ்வாறான சூழ்நிலையில், நாம் அனைவரும் சிந்தித்துச் செயற்பட வேண்டிய கட்டத்துக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம்.

இலங்கையின் மலையகப் பிரதேசத்துக்கு விஜயம் செய்த ஒரேயொரு பிரதமர் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் மாத்திரமே. அவ்வாறே, தமிழக பா.ஜ.க தலைவர் திரு.அண்ணாமலை அவர்களும் மலையகத்துக்கான விஜயத்தை மேற்கொண்டிருப்பது, எமது உறவை மேலும் பலப்படுத்தியுள்ளதுடன் மகிழ்ச்சியையும் நம்பிக்கையையும் அளித்திருக்கிறது.

எதிர்காலத்தில் இந்திய அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டங்களில் மலையக மக்களும் உள்ளடக்கப்படுவார்கள் என்ற நம்பிக்கை இன்று வலுப்பெற்றிருக்கிறது. இலங்கையிலுள்ள தமிழ் மக்களின் பிரச்சினைகளை நேரடியாக ஆராய்ந்து, அவற்றுக்குத் தேவையான உதவிகளைச் செய்வதற்காக, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களால் தமிழக பா.ஜ.க தலைவர் திரு. அண்ணாமலைக்குப் பொறுப்பளிக்கப்பட்டுள்ள நிலையில், அவரின் இலங்கைக்கான முதல் விஜயம் மலையகத்துக்கும் மலையக மக்களுக்கான உதவிகளை மேற்கொள்வதற்கும் முன்னெடுக்கப்பட்டுள்ளமை பெரும் மகிழ்ச்சியளிக்கிறது என்றார்.

# பொருளாதார பிரச்சினைக்கு IMFஐ மாத்திரம் நாடுவது தீர்வாகாது

## செங்கொடி சங்கத்தின் ஆலோசகர் மேனகா கந்தசாமி வலியுறுத்து

ஹட்டன் விசேட நிருபர்




பொருளாதார பிரச்சினையை தீர்ப்பதற்காக அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தை நாடியுள்ளது. சர்வதேச நாணய நிதியத்தை நாடுவது எமது பிரச்சனைக்கான தீர்வு அல்ல. ஆகக்குறைந்தது பொருளாதார பிரச்சினைக்கான தீர்வும் அல்ல என இலங்கை செங்கொடி சங்கத்தின் ஆலோசகர் மேனகா கந்தசாமி தெரிவித்தார்.

இலங்கை செங்கொடி சங்கத்தின் மேதின நிகழ்வும் வருடாந்த மகா நாடும் நேற்று (01) திகதி மஸ்கெலியாவில் நடைபெற்றது. அதில் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.


அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

சர்வதேச நாணய நிதி என்பது கட்டாயமாக தாம் வழங்கும் கடனுக்கு பின்னால் ஒரு பெரிய பொதியை சுமக்க அனுப்பி வைக்கும். அதாவது இந்த நாட்டில் வழங்கப்படும் கடனை மீண்டும் பெற்று எடுப்பதற்காக எவ்வகையான துறைகளில் எமது செலவைக்குறைத்து வருமானத்தை எவ்வாறெல்லாம் அதிகரிக்கலாமோ அதை செய்யும். அதுதான் முதலாளித்துவக்கொள்கை. உச்ச இலாபத்தை அனுபவிக்கக்கூடிய வகையான விடயங்களை அது எங்களுக்கு அனுப்பும்.

அவ்வகையான ஒப்பந்தத்தில் நாம் கைச்சாத்திட்டால் மட்டுமே எமக்கு இந்த கடன் கிடைக்கும். எனவே நாம் இந்த கடனை எமது பொருளாதார தீர்வாக பார்க்க முடியாது.

எனவே இந்த மே தினத்தில் நாம் குறிப்பாக கூறுவது எந்தவொரு முறையான துறையோ அல்லது முறைசாரா துறையோ என்று இருக்கக்கூடாது. தொழிலாளர்கள் தலையிட்டு தொழிலாளர்களின் உழைப்பை வழங்கும் சகல துறைகளும் சட்ட ரீதிக்குள் உட்படுத்தப்பட வேண்டும் பாதுகாப்பு அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். இந்த நாட்டில் முறைசாரா துறை இல்லாது ஒழிக்கப்பட வேண்டும் இதுவே எமது செங்கொடி சங்கத்தின் வேண்டுகோளாகும் என்றார்.

இந்நிகழ்வில் செங்கொடி சங்கத்தின் தலைவர் சிவசுந்தரம் செல்லையா,பொதுச் செயலாளர் ஆனந்தி சிவசுந்தரம்,பொருளாளர் விசுவாசம் இராஜலெட்சுமி உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர்.




# ஊவா மாகாண பாடசாலைகளில் 306 பேருக்கு ஆசிரியர் நியமனம்

ஹாலிஎல விசேட நிருபர்

நாடளாவிய ரீதியில் 2017 – 2019 கல்வியாண்டுக்காகஆசிரியர் கல்விக் கல்லூரிகளில் கல்வி டிப்ளோமா முடித்த டிப்ளோமா பெற்றவர்கள் மற்றும் இளங்கலை பட்டதாரிகளுக்கு 2022 மே 04 முதல் அனைத்து மாகாணங்களிலும் இலங்கை ஆசிரியர் சேவைக்கான நியமனங்கள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இதன்படி ஊவா மாகாண பாடசாலை சேவைக்கு ஊவா மாகாண சபைக்கு உட்பட்ட பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக கல்வி டிப்ளோமா பெற்ற 281 பேரும் கல்விப் பட்டதாரி 25 பேரும் புதிய ஆசிரியர்களாக நியமிக்கப்படவுள்ளனர்.

ஊவா மாகாணத்தில் உள்ள சிங்கள மற்றும் தமிழ் மொழி மூல பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறைக்கு தீர்வாக இலங்கை ஆசிரியர் சேவையின் தரம் 1 (இ) தரம் 3 க்கு கற்பித்தல் விஞ்ஞான டிப்ளோமா பெற்ற 281 ஆசிரியர்களும் ஆசிரியர் சேவையின் தரம் 2 தரம் II க்கு 25 கல்வி பட்டதாரிகளும் நியமிக்கப்படவுள்ளனர்.

கல்வி அமைச்சின் செயலாளரால் அங்கீகரிக்கப்பட்ட பட்டியல்கள், நாட்டின் ஒவ்வொரு மாகாண சபையிலும் உள்ள கல்விச் செயலாளர்களுக்கு அனுப்பி வைக்கப்படும், மேலும் இந்த ஆசிரியர்கள் ஆசிரியர் பற்றாக்குறையை கண்டறிந்த பாடசாலைகளுடன் இணைக்கப்படுவார்கள். ஊவா மாகாண கல்வி அமைச்சும் ஊவா மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவும் ஊவா மாகாணத்தில் உள்ள பாடசாலைகளுக்கு நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு நாட்டில் நிலவும் நிலைமையை கருத்திற்கொண்டு வைபவங்கள் எதுவும் இன்றி அவர்களின் தனிப்பட்ட முகவரிக்கு தபால் மூலம் நியமனம் வழங்குவதற்கு ஏற்கனவே நடவடிக்கை எடுத்துள்ளது.



ஊடகவியலாளரான கனகாராச்சி எழுதிய 'நக்கிள்ஸ் வனப்பகுதியின் சுற்றாடலை பாதுகாப்போம்' எனும் நூலின் பிரதி ஒன்றை மாத்தளை எம்சி வீதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உள்ளூராட்சி மாகாண சபைகள் இராஜாங்க அமைச்சர் ரோஹன திசாநாயக்கவிடம் கையளித்த போது பிடிக்கப்பட்ட படம். (படம்: மாத்தளை சுழற்சி நிருபர்)

## புளத்சிங்கள மாணவர்களுக்கு புலமைப் பரிசில்







பல்கலைக்கழக மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வு புளத்சிங்கள ஹல்வத்துறை தமிழ் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. கொழும்பு 'கிறீன் செனல்' அமைப்பினரால் நடத்தப்பட்ட இந்த நிகழ்வில் ஹல்வத்துறை தமிழ் மகா வித்தியாலயத்திலிருந்து பல்கலைக் கழகத்துக்கு தெரிவாகியுள்ள 12 மாணவர்களுக்கு தலா 5000ரூபா, புலமைப் பரிசில் ஊக்கத் தொகை வழங்கப்பட்டது. இந்த ஊக்கத் தொகையானது அந்த மாணவர்கள் தமது பல்கலைக்கழக பட்டப் படிப்பை நிறைவு செய்யும் காலம் வரை மாதாந்தம் தலா 5000ரூபா வீதம் அவர்களின் வங்கி கணக்குக்கு வைப்பிடப்படவுள்ளது. ஹல்வத்துறை பாடசாலையின் அதிபர் எம். சந்திரமோகனின் ஒருங்கமைப்பில், பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளுடன் நடைபெற்ற இந்த நிகழ்வில், கிறீன் செனல் அமைப்பின் தலைவர் கரு.பத்மநாதன், தேசிய அமைப்பாளர் திருக்கேஷ் செல்லசாமி, களுத்துறை தமிழருவி மன்னறத்தின் தலைவர் பொன். சரவணராஜா உள்ளிட்ட பெருந்திரளானோர் கலந்து கொண்டிருந்தார்கள்.

# அந்நிய செலாவணி கையிருப்பு பாரியளவில் குறைவடைவு

## பொருளியல், நிதியியல் நிபுணர்கள் கருத்து

இலங்கை மத்திய வங்கியிடம் கையிருப்பில் இருந்த அந்நிய செலாவணி என்று இல்லாத வகையில் பெருமளவில் குறைந்துள்ளதாக தெரியவருகிறது.

கடந்த மார்ச் மாதம் அந்த செலாவணியின் மொத்த கையிருப்பு 1.9 அமெரிக்க டொலர்களாக இருந்தது. இதில் சீனா அந்நிய செலாவணி கைமாற்று வசதியாக வழங்கிய தொகையை கழித்தால் பயன்படுத்தக் கூடிய எஞ்சி இருக்கும் தொகையானது 200 மில்லியன் டொலர்கள் வரை குறைந்துள்ளது.

அத்துடன் நாட்டுக்கு தேவையான ஏனைய அத்தியாவசிய பொருட்களை இறக்குமதி செய்வதற்காக டொலர்கள் வெளியிடப்பட்டதால், 06

# உர இறக்குமதி நிறுவனங்களுக்கு விலை சூத்திர திட்டம் அறிமுகம்

## விவசாய அமைச்சர் ஜானக வக்கும்புர



உரங்களை இறக்குமதி செய்யும் நிறுவனங்களுக்கு விலை சூத்திரம் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக விவசாய அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்துள்ளார்.

பொலன்னறுவை மாவட்ட விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகளுடன் நேற்று முன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இதனைத் தெரிவித்தார். உரத்தை இறக்குமதி செய்து தனியார் அதிக விலைக்கு விற்பனை செய்வதனால் விவசாயிகள் எதிர்நோக்கும் பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில், உர இறக்குமதி விடயம் தொடர்பில் அரசாங்கம் தலையிட்டு பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு வழங்க முன்வந்துள்ளதாக விவசாய அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# இலங்கை மக்களுக்கு உதவ தயாராகும் தமிழக மீனவர்கள்

## நிவாரண பொருட்களை எடுத்து வர ஆர்வம்



இலங்கை மக்களுக்கு நிவாரணங்களை கொண்டு செல்ல தாம் தயாராகவே இருப்பதாக ராமேஸ்வரம் கடற்றொழிலாளர்கள் அறிவித்துள்ளனர்.

ராமேஸ்வரம் கடற்றொழிலாளர் சங்கத்தின் தலைவர் ஜேசுராஜா இதனை தெரிவித்துள்ளார்.

இலங்கை மக்களுக்கு உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களை அனுப்புவதற்கு மத்திய அரசாங்கம் 06



தொழிலாளர் தினமான நேற்று தொழிலாளர் தலைவர் ஏ.ஈ. குணசிங்கவின் 131ஆவது ஜன்ம தினத்தை முன்னிட்டு கொழும்பு குணசிங்கபுரவில் உள்ள அவரின் உருவச்சிலைக்கு கொழும்பு பிரதி மேயர் எம். டீ. எம் இக்பால் மாலை அணிவித்த போது பிடிக்கப்பட்ட படம். படம் சுதத் மலவீர

# மக்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்க வேண்டும்

## நிதியமைச்சரிடம் ரணில் விக்கிரமசிங்க வேண்டுகோள்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் பாரிய நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள மக்களுக்கு உடனடியாக நிவாரணங்களைப் பெற்றுக் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்க நிதியமைச்சர் அலி சப்ரி யிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இப்தார் நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டிருந்தபோதே முன்னாள் பிரதமரும், நிதியமைச்சரும் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இதன்போதே முன்னாள் பிரதமர் நிதியமைச்சரிடம் இவ்வாறு கேட்டுக்கொண்டுள்ளார். மாத்தளை மாநகர முன்னாள் மேயர் ஹில்மி மொகமட் ஏற்பாடு செய்திருந்த இப்தார் நிகழ்வில் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் நிதியமைச்சர் அலி சப்ரியும் கலந்து கொண்டுள்ளனர். இந்த நிகழ்வில் ஐக்கிய தேசிய கட்சியின் பிரதித் தலைவர் ருவன் விஜேவர்தன, தேசிய அமைப்பாளர் சாகல ரத்நாயக்க, பாராளுமன்ற உறுப்பினர்களான பைசல் காசிம், எச்.எம்.எம். ஹரீஸ், எஸ். எம். மரிக்கார், சுசில் பிரேமஜயந்த ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். (ஸ)











மறைந்த ஜனாதிபதி பிரேமதாசவின் 29ஆவது வருட நினைவு தினம் நேற்று (01) அனுஷ்டிக்கப்பட்டது. புதுக்கடை நீதிமன்ற வளாகத்திற்கு அருகில் உள்ள மறைந்த ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் உருவப்படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, ஹேமா பிரேமதாச, குடும்ப உறுப்பினர்கள் மற்றும் பலர் நிகழ்வில் கலந்து கொண்டனர். (படங்கள்: நசார்)

# இந்தியாவில் அகதிகளாக 90,000 இலங்கைத் தமிழர்கள்

## தமிழகத்தில் 108 முகாம்களில் 58, 843 பேர்



இந்தியாவில் சுமார் 90 ஆயிரம் இலங்கைத் தமிழர்கள் அகதிகளாக இருப்பதாக இந்திய உள்துறை அமைச்சு அறிக்கை ஒன்றின் மூலம் தெரிவித்துள்ளது.

இருப்பினும், சில அகதிகள் அவர்களாகவே இலங்கைக்கு திரும்பி விட்டனர் அல்லது சிலர் வேறு நாடுகளுக்கு சென்று விட்டனர் எனவும் குறிப்பிட்டுள்ளது.

அது தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

தமிழ்நாட்டில் உள்ள 108 அகதி முகாம்களில் 58,843 இலங்கைத் தமிழ் அகதிகளும், முகாம்களுக்கு வெளியே 34,135 இலங்கை அகதிகளும், ஒடிசாவில் 54 இலங்கை அகதிகளும் வாழ்ந்து வருவதாக இந்திய உள்துறை அமைச்சகம் 202021 ஆண்டு அறிக்கையில் தெரிவித்துள்ளது.


அத்துடன் இந்தியாவில் 72,312 திபெத்திய அகதிகள் வாழ்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய உள்துறை அமைச்சகத்தின் தகவல்படி, 06

# 'உண்மைத்தன்மையை சமூகத்திற்கு தெளிவுபடுத்த வேண்டும்

## ஹக்கீமை பகிரங்க விவாதத்திற்கு அழைத்தார் நசீர் அஹமட்





ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீமை தன்னுடன் பகிரங்க விவாதத்திற்கு வருமாறு அமைச்சர் நசீர் அஹமட் அழைப்பு விடுத்துள்ளார்.

அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ள அமைச்சர் நசீர் அஹமட் இவ்வாறு பகிரங்க விவாதத்திற்கு அழைப்பு விடுத்துள்ளார்.

நடந்தவற்றை உரியவாறு சமூகத்திடம் ஒப்புவிக்கும் பொறுப்பிலிருந்து தாமும் கட்சியின் தலைவரும் நழுவி விட முடியாது என குறித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் யார் குற்றவாளி அல்லது சுத்தவாளி என்பதையும் எவரது பொறுப்புகள் சமூகக் கட்டமைப்பிலிருந்து நழுவியது என்பதையும் சமூகமே தீர்மானிக்க வேண்டும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். 20 ஆவது திருத்தத்திற்கு தான் உட்பட H.M.M.ஹாரிஸ், பைசல் காசிம், M.S. தௌஃபீக் ஆகியோர் ஆதரவளித்ததன் பின்புலத்தில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள், அவை இடம்பெற்ற இடங்கள் இன்றும் எழுந்தமானமான கதைகளாகவே உள்ளதாக நசீர் அஹமட் குறிப்பிட்டுள்ளார்.

இதன் உண்மைத்தன்மையை சமூகத்திற்கு தெளிவுபடுத்த வேண்டிய தேவை தனக்கு இருப்பதாகவும், அதனை ஆதாரபூர்வமாக முழு ஆவணங்களுடன் சமர்ப்பிக்க வேண்டிய கடப்பாடு இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரின் அனுமதியுடனேயே 20 ஆவது அரசியலமைப்பு 06

### மருந்துகளின் விலை அதிகரிப்பு;

# புதிய வர்த்தமானியை இரத்து செய்ய கோரிக்கை

## அரச மருந்தாளர் சங்கம் வேண்டுகோள்



அரசாங்கத்தினால் 60 வகையான மருந்து பொருட்களின் விலையை 40 சதவீதத்தினால் அதிகரிக்கும் வகையில் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தல் ரத்துச் செய்யப்பட வேண்டும் என அரச மருந்தாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

அநுராதபுரத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்து அதன் தலைவர் அஜித் திலகரத்ன இதனைக் குறிப்பிட்டுள்ளார். ஔடத கட்டுப்பாட்டு அதிகார சபை மற்றும் மருந்தக நிறுவனங்களின் ஊடாக தற்போது மருந்து பொருட்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளமையினால் மக்கள் வெகுவாக பாதிப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இதேவேளை தனியார் மருந்தகங்களில் சிறுவர்களுக்கு வழங்கப்படும் மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவிக்கப்படுகிறது.





136ஆவது மேதின ஊர்வலம் நேற்று லேக் ஹவுஸ் சுற்றுவட்டத்தில் இருந்து ஆரம்மாகி சென்றபோது பிடிக்கப்பட்ட படங்கள். அரச தாதியர் சங்கம், தொலைத்தொடர்புகள் சேவை சங்கம், ஐக்கிய தேயிலை, இறப்பர் மற்றும் தொழிலாளர் சங்க மேதின ஊர்வலங்கள் நேற்று நடைபெற்றன. (படங்கள்: விமல் கருணாதிலக்க, கெலும் லியனகே)

# மேடை நாடகக் கலைஞர்களுக்கு திடீர் விபத்து, மருத்துவ காப்புறுதி



மேடை நாடகத் துறையில் ஈடுபட்டுள்ள மேடை நாடகக் கலைஞர்களுக்கு டவர் மண்டப அரங்க மன்றம் அறக்கட்டளை ஒரு வருடத்திற்கான திடீர் விபத்து மற்றும் மருத்துவ காப்புறுதிகளை வழங்கவுள்ளது.

இதற்கான விண்ணப்பங்களை மேடை நாடகக் கலைஞர்களிடம் கோரியுள்ளது. இதற்கு விண்ணப்பிக்கும் மேடை நாடகக் கலைஞர்கள் உடனடியாக விண்ணப்பிக்கும் படி கேட்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரிகள் 35 வயதுக்கும் 75 வயதுக்கும் 06

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 238.54 | 249.41 |
| கனடியன் டொலர் | 256.80 | 267.07 |
| யூரோ | 340.83 | 352.42 |
| ஜப்பான் யென் | 2.5659 | 2.6696 |
| சிங்கப்பூர் டொலர் | 239.52 | 248.06 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 423.68 | 438.67 |
| சுவிஸ் பிராங்க் | 344.01 | 357.45 |
| அமெரிக்க டொலர் | 322.72 | 334.99 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 831.93 | கட்டார் ரியால் | 85.92 |
| குவைத் டினார் | 1,028.76 | சவூதி ரியால் | 83.64 |
| ஓமான் ரியால் | 814.75 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 85.39 |

தினகரன்
THINAKARAN
35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் சித்திரை மாதம் 19ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ரமழான் பிறை 30

## குறள் தரும் சிந்தனை



குடியாண்மை யுள்வந்த குற்றம் ஒருவன்
மடியாண்மை மாற்றக் கெடும்

தன்னை ஆட்கொண்டுள்ள சோம்பலை ஒருவன் அகற்றி விட்டால், அவனது குடிப்பெருமைக்கும், ஆண்மைக்கும் சிறப்பு தானே வந்து சேரும்.

# இலங்கையின் நெருக்கடி வேளையில் தமிழகத்தின் மனிதாபிமான உதவி

இலங்கையில் நிலவி வரும் பொருளாதார நெருக்கடி காரணமாக மக்கள் பல்வேறு விதமான அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். இந்நெருக்கடி நிலைக்கு விரைவாகவும் வேகமாகவும் தீர்வு காணவென அரசாங்கத்தினால் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இந்த நிலையில் இந்தியா உள்ளிட்ட நேசநாடுகளும், சர்வதேச அமைப்புகளும் இந்நெருக்கடியிலிருந்து இலங்கை மீண்டெழுவதற்கு உதவும் வகையில் உதவி ஒத்துழைப்புகளை நல்கி வருகின்றன. நெருக்கடிக்கு உள்ளாகியுள்ள இலங்கை மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை அனுப்பி வைக்கவும் பல நாடுகள் முன்வந்துள்ளன. அவற்றில் இந்தோனேசியா 3.1 மெற்றிக் தொன் மனிதாபிமான உதவிகளை விமானம் மூலம் சில தினங்களுக்கு முன்னர் அனுப்பி வைத்தது. உயிர் காக்கும் மருந்துப்பொருட்கள் உள்ளிட்ட மருத்துவ உபகரணங்கள் இவற்றில் அடங்கி இருந்தமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கதாகும். இலங்கைக்கான இரண்டாம் கட்ட மனிதாபிமான உதவி எதிர்வரும் 08 ஆம் திகதி வந்தடையும் என்று இலங்கைக்கான இந்தோனேசிய தூதுவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான சூழலில் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகியுள்ள இலங்கைக்கு இந்திய மத்திய அரசின் உதவி ஒத்துழைப்புகளுக்கு மேலதிகமாக, தமிழ்நாடு மாநில அரசு உணவு, அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் உயிர் காக்கும் மருந்துப் பொருட்கள் அடங்கலான மனிதாபிமான உதவிகளை விரைவாக அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. இதற்கென மத்திய அரசின் அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்காக விஷேட தீர்மானமொன்று தமிழ்நாடு சட்டப் பேரவையில் முதலமைச்சர் மு.க ஸ்டாலின் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை நிறைவேற்றப்பட்டது.

இந்தியாவும் இலங்கையும் தனித்தனி நாடுகளாகும். அதனால் இந்தியாவின் மாநில அரசு ஒன்றினால் ஒரு நாட்டுக்கு நேரடியாக மனிதாபிமான உதவிகளை அனுப்பி வைப்பதற்கு அந்நாட்டின் மத்திய அரசின் அனுமதி பெறப்பட வேண்டும். அந்த அடிப்படையில்தான் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது.

தமிழ்நாடு அரசின் மனிதாபிமான உதவித் திட்டத்தின் கீழ் 80 கோடி ரூபா பெறுமதியான 40 ஆயிரம் தொன் அரிசி, 28 கோடி ரூபா பெறுமதி மிக்க 137 வகையான உயிர் காக்கும் மருந்துப் பொருட்கள், 15 கோடி ரூபா பெறுமதியான குழந்தைகளுக்கான பால்மா என்பவற்றை முதற்கட்டமாக அனுப்பி வைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இப்பொருட்களை மனிதாபிமான அடிப்படையில் அனுப்பி வைப்பதற்கான அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்கான பிரேரணையை சபையில் சமர்ப்பித்து உரையாற்றிய முதலமைச்சர் ஸ்டாலின், 'தற்போது இலங்கை மக்கள் முகம் கொடுத்துள்ள பொருளாதார நெருக்கடிக்கு மனிதாபிமான அடிப்படையில் கைகொடுக்க வேண்டும் என்பதே எமது அரசின் நிலைப்பாடாகும். இதனை அண்டை நாட்டு பிரச்சினையாக எம்மால் பார்க்க முடியாது. அங்குள்ள மக்களுக்கு எம்மாலான உதவிகளை செய்தாக வேண்டும். அந்த அடிப்படையில் ஏற்கனவே பிரதமர் நரேந்திர மோடியை நேரடியாகச் சந்தித்து கலந்துரையாடியுள்ளேன். இது தொடர்பில் வெளிவிவகார அமைச்சருக்கும் தெரியப்படுத்தி உள்ளேன்' என்று குறிப்பிட்டார்.

அதேநேரம் இலங்கை மக்களுக்கான மனிதாபிமான உதவித் திட்டத்திற்கு தனது சொந்த நிதியிருந்து ஐம்பது இலட்சம் ரூபாவை வழங்கியுள்ள தமிழ்நாடு எதிர்க்கட்சி இணைத்தலைவர் ஓ. பன்னீர் செல்வத்துக்கு தமது விஷேட நன்றிகளையும் அவர் சபையில் தெரிவித்துக் கொண்டார்.

பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ள இலங்கை மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை அனுப்பி வைக்க தமிழ்நாடு மாநில அரசும், முதலமைச்சர் ஸ்டாலினும் முன்னெடுத்துள்ள நடவடிக்கைகள் என்றும் மெச்சிப் பாராட்டப்பட வேண்டியவையாகும். இந்நடவடிக்கை இலங்கைக்கும் தமிழ்நாட்டுக்கும் இடையிலான தொப்புள் கொடி உறவை மேலும் பலப்படுத்த வழிவகுக்கும். அத்தோடு இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவை மாத்திரமல்லாமல் தமிழகத்துடனான நட்புறவையும் மேலும் வலுப்படுத்திட இது ஒரு முக்கிய மைல்கல்லாக அமையும்,

தற்போதைய சூழலில் இலங்கை மக்களுக்கு மனிதாபிமான உதவியை அனுப்பி வைக்க தமிழ்நாடு அரசும் முதலமைச்சரும் முன்னெடுத்துள்ள நடவடிக்கைகள் வரலாற்றில் அழியாத்தடம் பதிக்கும். ஆகவே இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவை மாத்திரமல்லாமல் தமிழ்நாட்டுடனான நட்புறவை மேலும் மேம்படுத்திக் கொள்ள இந்த மனிதாபிமான உதவி பக்கபலமாக அமையும் என்றால் அது மிகையாகாது.

editor.tkn@lakehouse.lk

# தமிழக பா.ஜ.க தலைவர் அண்ணாமலை இன்று யாழ்ப்பாணத்தில் கூட்டமைப்பினருடன் சந்திப்பு

இலங்கை சென்றுள்ள தமிழக பா.ஜ.க தலைவர் அண்ணாமலை நேற்று மலையகப் பகுதியில் மேதின நிகழ்ச்சிகளில் பங்கேற்றார். இதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்துக்கு இன்று செல்லும் அண்ணாமலை, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர்களையும் சந்தித்து பேசுகிறார்.

பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காணும் வகையில் இந்தியா உள்ளிட்ட நாடுகளிடம் இலங்கை உதவிக் கரம் நீட்டியுள்ளது. இதன் ஒரு பகுதியாக தமிழ்நாடு அரசும் இலங்கையில் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் நிவாரணப் பொருட்களை மத்திய அரசு மூலம் அனுப்ப முடிவு செய்துள்ளது. இது தொடர்பான தனிநபர் தீர்மானம் சட்டசபையில் நிறைவேற்றப்பட்டது.

இந்நிலையில், தமிழக பா.ஜ.க தலைவர் அண்ணாமலை திடீரென இலங்கைக்கு பயணம் மேற்கொண்டுள்ளார். நான்கு நாட்கள் பயணமாக இலங்கைக்கு வருகை தந்த அண்ணாமலையை இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் கொழும்பு மாவட்ட தலைவர் திருக்கேஸ் செல்லச்சாமி, நிர்வாகிகள் ரகு, கோபி ஆகியோர் கொழும்பு விமான நிலையத்தில் வரவேற்றனர்.

இதனைத் தொடர்ந்து இலங்கைக்கான இந்திய தூதர் கோபால் பாக்லேவை அண்ணாமலை சந்தித்துப் பேசினார். இதனைத் தொடர்ந்து அங்கிருந்து கொட்டகலைக்கு அண்ணாமலை சென்றார். முன்னதாக நுவரெலியாவில் செந்தில் தொண்டமான், இராஜதுரை, வேலு யோகராஜா உள்ளிட்டோர் வரவேற்றனர். பின்னர் சீதையம்மன் கோயிலில் வழிபாடு செய்தார் அண்ணாமலை. நேற்று அண்ணாமலை இந்திய வம்சாவளித் தமிழர்களின் நிலைமையை ஆய்வு செய்தார். தொழிலாளர் தின நிகழ்ச்சியிலும் அண்ணாமலை பங்கேற்றார்.

இதன் பின்னர் இன்று யாழ்ப்பாணம் செல்லும் அண்ணாமலை அங்கு நல்லூர் கந்தசுவாமி கோயிலில் வழிபாடு நடத்துகிறார். பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களை அண்ணாமலை சந்தித்து ஆலோசனை நடத்த உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.



# சாதுலிய்யா தரீக்காவின் வளர்ச்சிக்கு உயிரூட்டிய செய்கு நாயகம் அஜ்வாத் அப்துல்லா அல்பாஸி (றஹ்)

உலக பாஸியதுஷ் ஷாதுலியா தரீக்காவின் ஆன்மீக தலைவர் சங்கைக்குரிய சேஹு நாயகம் நஜ்முல் உலமா அஷ் செய்ஹு அஜ்வாத் அப்துல்லாஹ் அல் பாஸி அல் மக்கி அஷ் ஷாதுலி (ரலி) அவர்கள் தமது 89 வயதில் 06.04.2022 அன்று சாதுலியா தரீக்காவின் தலைமையகமான புனித மக்காவில் உள்ள பைத்துல் பாஸியில் காலமானார். சேஹுநாயகம் அஜ்வாத் அல்பாஸி ரலி பல தடவை இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார். இறுதியாக 2004 ஆம் ஆண்டு செய்ஹுஸ் ஸஜ்ஜாதா செய்ஹ் அப்துல் காதர் இப்றாஹிம் அல் பாஸி ரலி வழிகாட்டலில் இலங்கைக்கு விஜயம் செய்து கிழக்கு மாகாணம் உட்பட நாட்டின் நாலா பகுதிகளுக்கும் சென்றிருந்தார்.



செய்ஹுஸ் ஸஜ்ஜாதா டொக்டர் செய்ஹ் முஹம்மத் அல் பாஸி நாயகம் ரலி அன்னவர்களின் மறைவிற்கு பிறகு (1997) சாதுலியா தரீக்காவின் செய்ஹுமார்களான செய்ஹ் அப்துல் வஹ்ஹாப் இப்றாஹிம் அல் பாஸி ரலி, செய்ஹ் அப்துல் காதர் இப்றாஹிம் அல் பாஸி ரலி போன்ற செய்ஹுமார்களின் காலப் பிரிவில் அவர்களது

ஆசிர்வாதத்தோடு சாதுலியா தரீக்காவை சர்வதேச ரீதியில் வழிநடத்தி வந்தார். 2017 இல் செய்ஹுஸ் ஸஜ்ஜாதா செய்ஹ் அப்துல் காதர் இப்றாஹிம் அல் பாஸி ரலி அவர்களது மறைவுக்குப் பின் 2017 ஆம் ஆண்டு

சாதுலியா தரிக்காவின் செய்ஹுஸ் ஸஜ்ஜாதாவாக செய்ஹ் அஜ்வாத் அல் பாஸி ரலி நாயகம் அவர்கள் சாதுலியா தரீக்காவின் தலைமையகமான புனித மக்காவில் உள்ள பைத்துல் பாஸி மூலம் நியமிக்கப்பட்டார்கள்.

அன்னார் தனது தள்ளாத வயதிலும் கூட சாதுலியா தரீக்கா இக்வான்களை வழி நடாத்தி வந்தார்கள். செய்ஹுஸ் ஸஜ்ஜாதா செய்ஹ் முஹம்மது அப்துல்லாஹ் பின் செய்ஹ் ஸம்ஸுத்தீன் அல் பாஸி ரலி அன்னவர்களின் புதல்வரான சேஹுநாயகம் இலங்கை இக்வான்கள் மீது மிக நேசம் வைத்தவராக இருந்தார்.

செய்ஹ் அஜ்வாத் பாஸி ரலி அன்னவர்களின் தகப்பன்,பெரிய தந்தை பாட்டன்,பூட்டன்மார் என பலர் சாதுலியா தரீக்காவின் செய்ஹுமார்களாக இருந்து நூற்றாண்டு காலமாக இலங்கைக்கு கஷ்டமான காலப்பகுதிகளில் பல தடவை விஜயம் செய்து தஃவா பணியாற்றி வந்துள்ளார்கள். செய்ஹு நாயகம் அவர்கள் ஆன்மீக தலைவராக, இராஜதந்திரியாக, தஃவா பணியாளராக, இஸ்லாமிய மார்க்க அறிஞராக பல துறைகள் மூலம் உலகளாவிய ரீதியில் சன்மார்க்க பணி செய்தவராவார்.

2015 ஆம் ஆண்டு சீனன்கோட்டை வாலிபர் ஹழரா ஜெமாத்தின் 35 வது வருட மீலாதுன் நபி மற்றும் 40 வருட பூர்த்தி விழா நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொள்ளுமாறு சேஹுநாயகதுக்கு ஹழரா ஜெமாஅத் அழைப்பு விடுத்தது. 2014 ஆம் உம்ராவிற்கு பள்ளி சங்க தலைவர் மர்ஹூம் ராமிஸ் ஏ.கபூர் தலைமையில் சீனன் கோட்டையிலிருந்து சென்ற குழுவில் ஹலரா ஜமாஅத் இனைப் பொருளாளர் ஜனாப் இஹ்திபாத் கைஸர் அவர்கள் இந்த அழைப்பு கடிதத்தை கையளிதார்.

2004ஆம் ஆண்டுக்கு பின் பைதுல் பாஸியில் இருந்து எந்தவொரு சேஹுமார்களும் இலங்கைக்கு விஜயம் செய்யாத போது 2015 இல் சுமார் 11வருட காலத்திற்கு பின் ஹழரா ஜெமாஅத்தின் அழைப்பை ஏற்று தமது புதல்வர் செய்ஹ் முஹம்மத் அஜ்வாத் அல் பாஸி ஹபிழவுல்லாஹ் நாயகம் அவர்களை இலங்கைக்கு அனுப்பி வைத்து சாதுலியா தரீக்காவுக்கு புத்துயிர் அளித்தார். ஹழரா ஜெமாஅத்தின் நற்பணிகளுக்கு அதன் மூலம் அங்கீகாரம் அளித்தார்.

இலங்கை வரலாற்றில் சாதுலிய்யா அமைப்பொன்றின் மூலம் செஹுநாயகத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டு வருகை தந்த முதல் சந்தர்ப்பம் இதுவாகும். இலங்கையிலிருந்து புனித ஹஜ்ஜுக்காக, உம்ராவுக்காக செல்வோர் சேஹுநாயகத்தை புனித மக்கா ஆமிராவில் உள்ள பைத்துல் பாஸியில் சந்தித்து வந்தனர். நாயகம் அவர்கள் அனைவரையும் வரவேற்று உபசரித்து நாட்டு, ஊர் நிலமைகளை கேட்டறிந்து வந்தார்.

2007 ஆம் ஆண்டு புனித உம்ரா கடமைக்காவும் எகிப்திலுள்ள ஹுமைஸராவுக்கு சாதுலியா தரீக்கா ஸ்தாபகர் இமாம் அபுல் ஹஸன் அலியுஷ்ஷாதுலி ரலியல்லாஹு அன்ஹு அன்னவர்களின் புனித ரவழா ஸியாரத்துக்காகவும் சீனன்கோட்டையிலிருந்து சென்ற நமது இக்வான்கள் குழு புனித மக்கா பைதுல் பாஸியில் செய்ஹ் அஜ்வாத் அல் பாஸி நாயகம் ரலியல்லாஹ் அன்னவர்களை சந்திக்கும் பாக்கியம் பெற்றோம்.

பைதுல் பாஸியில் அன்னார் ஹழரா மஜ்லிஸையும் நடாத்தி எமது ஹுமைஸரா விஜயத்துக்காக துஆவும் செய்தார்கள். சீனன்கோட்டய ஹழரா ஜெமாஅத்துடன் நெருங்கிய தொடர்புள்ளவராக இருந்த சேஹு நாயகம் ஹழரா ஜெமாஅத்தின் தஃவா பணிக்கு என்றும் உறுதுனையாகவும், துஆ செய்பவராகவும் திகழ்ந்தார். சவூதி அரேபிய தீப கண்டத்தில் புனித மக்காவில் பாரம்பரிய அல் பாஸி குடும்பத்தில் மூத்தவராக தற்காலத்தில் வாழ்ந்த அன்னார் சவூதியில் நஜ்ம உல் உலமா என்ற சிறப்பு பட்டம் பெற்றவராக திகழ்ந்தார்.சூபி அறிஞராகவும், சன்மார்க்க மேதையாகவும் திகழ்ந்த அன்னார் ஊடகங்கள் மூலம் சூபியாக்களின் கருத்துக்களை பிரசாரம் செய்பவராகவும் திகழ்ந்தார்.

2013 ஆம் ஆண்டு சங்கைக்குரிய செய்ஹுஸ் ஸஜ்ஜாதா அஷ் செய்ஹ் அப்துல் காதர் அல் பாஸி (ரலி) அவர்களின் அங்கீகாரத்துடன் இலங்கைக்கான கலீபதுல் குலபா, கலீபாக்கள், நாடளாவிய ரீதியில் ரயீஸுல் முகத்தமீன்கள், முகத்தமீன்களை உம்மு ஸாவியாவின் பங்களிப்போடு செய்ஹ் அஜ்வாத் பாஸி நாயகம்( ரலி) நியமித்தார். அந்த நியமனத்தில் ரயீஸுல் முகத்தமாக நானும் ஆன்மீகத் தந்தை செய்ஹ் அஜ்வாத் பாஸி நாயகம் அவர்களினால் நியமிக்கப்பட்டேன்.

அல்ஹாஜ்
பர்ஸான் முர்ஸி
ரயீஸுல் முகத்தமுஷ்ஷாதுலி
சீனன்கோட்டை

# ஆலையடிவேம்பு தமிழ் இலக்கிய பேரவை ஏற்பாட்டில் சித்திரை புத்தாண்டு கலைவிழா

ஆலையடிவேம்பு தமிழ் இலக்கிய பேரவை ஏற்பாடு செய்திருந்த சித்திரைப் புத்தாண்டு கலைவிழா நிகழ்வு ஆலையடிவேம்பு பிரதேச கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. மட்டக்களப்பு உளவியல் ஆலோசனை மையத்தின் உளவள ஆலோசகரும் தமிழ் இலக்கிய பேரவையின் தலைவருமான க.கிருஷ்ணமூர்த்தி தலைமையில் இடம்பெற்ற கலைவிழாவில் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி.ஜெகதீசன், அம்பாறை மாவட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் ஆகியோர் அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் அருளாளராக அக்கரைப் பற்று ஸ்ரீவம்மியடிப்பிள்ளையார் ஆலய சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் எஸ்.அகிலன், தமிழ் இலக்கிய பேரவையின் ஆலோசகர்களான தென்கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் அனுசியா சேனாதிராஜா, இந்து இளைஞர் மன்ற தலைவர் த.கயிலாயபிள்ளை, கவிஞர் பாவணர் அக்கரைப்பாக்கியன் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

கௌரவ அதிதிகளாக மாவட்ட கலாசார உத்தியோகத்தர்களான ஏ.எல்.தௌபீக், கு.ஜெயராஜ் உள்ளிட்ட அரச அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், சமய சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், அறநெறி பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள்,







பிரதமகுரு சிவஸ்ரீ ப.கேதீஸ்வரக்குருக்கள் கலந்து கொண்டதுடன் சிறப்பு அதிதிகளாக பிரதேச சபை தவிசாளர் த.கிரோஜாதரன், ஆலையடிவேம்பு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி திருமதி அகிலன், அட்டாளைச்சேனை பிரதேச பெற்றோர், கலைஞர்கள் கலந்து கொண்டனர். நிகழ்வில் கிராமிய நடன நாட்டிய நிகழ்வுகள் நடைபெற்றன. கவியரங்கில் கவிஞர்கள் கலந்து கொண்டு 'புதுமைகள் மலரட்டும்' எனும் கருப்பொருளில் தங்களது படைப்புக்களை முன்வைத்தனர். அத்தோடு ஆனந்தியின் புதுக்கவிதையும், 'புத்தாண்டும் புது மாற்றமும்' எனும் நகைச்சுவை நாடகமும் அனைவரது கவனத்தையும் ஈர்த்தன.

பல்வேறு இலக்கியப் போட்டிகளிலும் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ்களும் அதிதிகளினால் வழங்கி வைக்கப்பட்டன.

அத்தோடு நீண்டகாலம் ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்தில் கடமையாற்றி மாற்றம் பெற்றுச் சென்ற கலாசார உத்தியோகத்தர் நிசாந்தினி தேவராஜ் பொன்னாடை போர்த்தி வாழ்த்துப்பா வழங்கி கௌரவிக்கப்பட்டார். நிறைவாக நிகழ்வில் கலந்து கொண்ட அதிதிகள் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர். தமிழ் இலக்கியப் பேரவையின் செயலாளரும் சட்டத்தரணியுமான செல்வி லி.சிந்துஜாவின் நன்றியுரையுடன் நிகழ்வு நிறைவுற்றது.

O
(வாச்சிக்குடா விஷேட நிருபர்)

# மூன்று வருட காலத்துக்கு பின்னர் காத்தான்குடி கடற்கரையில் இம்முறை பெருநாள் தொழுகை

## கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகள் குறித்து ஏற்பாட்டுக்குழு அறிவித்தல்

நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக கடந்த மூன்று ஆண்டுகளாக நோன்புப் பெருநாள் திடல் தொழுகை நடைபெறாத நிலையில் இம்முறை காத்தான்குடி கடற்கரை வளாகத்தில் பெருநாள் திடல் தொழுகை நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. தொழுகைக்காக வருகை தரவுள்ளவர்களுக்கு காத்தான்குடி இஸ்லாமிய நிலையம் அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது.

நோன்புப் பெருநாள் தொழுகைக்காக வருகை தரவுள்ள ஆண்கள், பெண்கள் பெருநாள் தொழுகையன்று கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்குவிதிகள் குறித்தும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

நபி ( ஸல் ) அவர்களின் ஸுன்னாவை நடைமுறைப்படுத்தும் நோக்கில் இப்பெருநாள் தொழுகைகளை ஏற்பாடு செய்து நடத்தி வருகின்றோம். இதன் மூலம் மக்கள் நபிகளாரின் வழிகாட்டுதலைப் பின்பற்றி இத்தொழுகைகளை நிறைவேற்றிட வேண்டும் என்பது எமது எதிர்பார்ப்பாகும். எனவே அதற்கு மாற்றமான செயல்பாடுகளில் ஈடுபடுவதை முழுமையாக தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

காத்தான்குடி கடற்கரை பொழுதுபோக்குவதற்கான பிரதான தளமாக எம்மவர்களால் பார்க்கப்பட்டாலும் பெருநாள் தினத்தில் நீங்கள் அங்கு சமுகமளிப்பது அல்லாஹ்வைப் புகழ்ந்து அவன் கடமையாக்கிய ஓர் வணக்கத்தை நிறைவேற்றுவதற்காக என்பதை மனதில் நிறுத்தி அதற்கான பேணுதலுடன் வருகை தருவதே பொருத்தமானது. பாதுகாப்பு மற்றும் வீதி ஒழுங்கமைப்புக்காக நியமிக்கப்பட்டுள்ள சமூக மேம்பாட்டுக்கான மக்கள் ஒன்றிய பிரதிநிதிகளின் அறிவித்தல்களை முழுமையாக பின்பற்றி செயல்படுங்கள். குடும்பமாக வாகனங்களில் வருபவர்கள் நூறாணிய்யா மையவாடி வீதி அல்லது ஏ.எல்.எஸ் மாவத்தை வீதி வழியாக வருகை தர வேண்டும்.



இவ்வாறு வருபவர்கள் ஆண்கள் பகுதிக்குள் செலுத்த அனுமதிக்கப்பட மாட்டார்கள். ஆண்கள் மாத்திரம் வருகை தரும் வாகனங்களில் வருவோர் கடற்கரை வீதியினால் அனுமதிக்கப்படுவர் . இவ்வீதியினூடாக திடலுக்கு வருகை தருகின்ற ஆண்கள் பெண்கள் பகுதிக்கு வாகனங்களைச் செலுத்த எக்காரணம் கொண்டும் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

தொழுகை காலை 06:15 மணிக்கு நடத்தப்படும். சிரமங்களை தவிர்த்துக் கொள்வதற்காக 05:30 மணி தொடக்கம் 06.00 மணிக்குள் திடலுக்கு வருகை தர முயற்சியுங்கள். திடலில் பெண்கள் பகுதிக்குச் சென்று செல்பி, போட்டோ மற்றும் வீடியோ எடுப்பது முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது. கமராக்களை ஆகாயத்தில் செலுத்தி வீடியோ செய்பவர்கள் ஏற்பாட்டாளர்களிடம் முன் அனுமதி பெற்றுக் கொள்ள வேண்டும்.

தங்களது அழகை வெளிக்காட்டுமுகமாக ஆடை அணிந்து வருகின்ற அனைத்துப் பெண்களும் வீடுகளுக்கு திருப்பி அனுப்பி வைக்கப்படுவர். நறுமணங்களைப் பூசிக் கொண்டு ஆண்களுக்கு இடையில் குறுக்கிடும் பெண்கள் குறித்து ஹதீஸ்களில் கடுமையான எச்சரிக்கைகள் உள்ளதால் பெண்கள் இது விடயத்தில் கவனமாக நடந்து கொள்ள வேண்டும். ஒரே குடும்ப அங்கத்வர்களாக இருந்தாலும் திடலில் தங்கள் எது குடும்ப ஆண், பெண்களுக்கு இடையில் நாகரிகமாக நடந்து கொள்ள வேண்டும். தங்களது வீடுகளைப் போன்று சேட்டைகளில் ஈடுபடக் கூடாது. வுளு செய்து கொண்டு தொழுகை விரிப்புக்களுடன் வருவது தொழுகையை நிறைவேற்ற உதவியாகவிருக்கும்.

பிரசுரங்கள் விநியோகிப்பதற்கோ வசூல்கள் மேற்கொள்வதற்கோ எவருக்கும் அனுமதியளிக்கப்பட மாட்டாது.

சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு ஏற்ப ஏற்பாட்டுக் குழுவினால் திடலில் விடுக்கப்படுகின்ற அறிவித்தல்களை முழமையாக பின்பற்றுங்கள். தெழுகைக்கு வந்து வீடு செல்லும் வரை இறை கட்டளைக்கும் நபியின் போதனைக்கும் மாற்றமான செயற்பாடுகளில் ஈடுபட வேண்டாம் என அன்பாக வேண்டிக் கொள்கின்றோம்.

காத்தான்குடி இஸ்லாமிய நிலைய ஏற்பாட்டுக் குழு தனது அறிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளது.



மௌலவி
எஸ். எம். எம். முஸ்தபா...
(காத்தான்குடி விசேட நிருபர்)

# நெருக்கடியில் இருந்து இலங்கை மீள்வதற்கு இந்தியா தொடர்ச்சியாக வழங்கும் உதவிகள்

## இலங்கை தனது முன்னைய கடன்களை மீளச்செலுத்துவதற்கான காலஅவகாசத்தை வழங்குவதற்கு சீனா தயாரில்லை. ஆனால் புதிய கடன்களை வழங்குவதற்கு சீனா தயாராக உள்ளது

பொருளாதார நெருக்கடி மற்றும் அதனால் ஏற்பட்டுள்ள அரசியல் ஸ்திரத்தன்மையால் இலங்கை தற்போது அசாதாரண நிலைமைக்கு முகங்கொடுத்து வருகின்றது. கொழும்பு காலிமுகத்திடலில் சுயாதீனமாக ஒன்றிணைந்த குழுவினர் ஜனாதிபதி செயலகத்தின் முன்பாக மூன்றாவது வாரத்தினைக் கடந்து தொடர்ச்சியான போராட்டத்தினை முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

அவர்கள் அரசாங்கத்தை மாத்திரம் எதிர்க்கவில்லை. பாராளுமன்றத்தில் அங்கத்துவம் வகிக்கும் அத்தனை உறுப்பினர்களும் பதவி விலக வேண்டுமென்று கோருகின்றனர். அத்துடன் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காணுமாறும் அவர்கள் வலியுறுத்துகின்றனர்.

இந்தத் தொடர்போராட்டத்திற்கு ஆதரவாக நாடாளவிய ரீதியில் பல்வேறு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இவ்விதமான போராட்டங்களின் போது வன்முறை சம்பவங்களும் நடந்துள்ளன. பொதுமகன் ஒருவரும் உயிரிழந்துள்ளார்.

அதேநேரம், தொழிற்சங்கங்களும் போராட்டங்களையும் ஹர்த்தாலையும் முன்னெடுத்துள்ளது. எதிர்வரும் நாட்களில் இந்தப்போராட்டங்கள் இன்னமும் தீவிரமடையாலம் என்றும் அத்தொழிற்சங்கள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

இவ்விதமான நிலையில், இலங்கை அரசாங்கம் தனது முன்னைய கொள்கையை மாற்றி சர்வதேச நாணய நிதியத்திடம் அவசர மற்றும் நீண்டகால உதவியை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. தற்காக, இலங்கையிலிருந்து சென்ற நிதியமைச்சர் அலி சப்ரி, மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க மற்றும் திறைசேரியின் செயலாளர் எம் சிறிவர்தன ஆகியோர் சர்வதேச நாணயநிதியத்தின் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவா, பிரதிப் பணிப்பாளர் கீதா கோபிநாத் உள்ளிட்ட பல முக்கியஸ்தர்களை சந்தித்துப் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளனர். இந்தப் பேச்சுவார்த்தைகளின் போது, இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் மற்றும் துறைசார்ந்த நிபுணர்களும் கலந்து கொண்டிருந்தனர். இவர்கள் இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியம் நிதி உதவி வழங்குவதை உறுதி செய்வதற்கான பணிகளில் ஈடுபட்டிருந்தனர்.

இலங்கையானது சர்வதேச நாணய நிதியத்திடம், 4 பில்லியன் டொலர்களை கடன்களாக பெறுவதற்கு எதிர்பார்த்துள்ளது. எனினும், இலங்கை சர்வதேச நாணய நிதியத்தின் உறுப்பு நாடாக இருப்பதால் அதற்கான கோட்டாவாக 800 மில்லியன் டொலர்கள் உள்ளன.

அதனை எப்போதும் இலங்கை கடன் உதவியாக பெற்றுக் கொள்ள முடியும். எனவே இலங்கை உடனடியாக கடனுதவியை சர்வதேச நாணய நிதியத்திடம் கோரிய நிலையில், அதற்கு சர்வதேச நாணய நிதியம் இலங்கையின் கோட்டாவில் அரைவாசியான 400 மில்லியன் டொலர்களை வழங்குவதாக அறிவித்துள்ளது.

அதேநேரம், சர்வதேச நாணயநிதியத்தின் நிதியுதவி கிடைப்பதற்கு இலங்கை அரசாங்கம் மீளச் செலுத்தலுக்கான வரைபடமொன்றை தயாரிக்க வேண்டியுள்ளது. தற்போதைய நிலையில் இலங்கை அரசாங்கம் கடன்களை மீளச் செலுத்துவதை நிறுத்தியுள்ள நிலையில், இந்த வரைபடம் மிகவும் முக்கியமானதாகின்றது.




அத்துடன் கடன்கள் பற்றிய ஆலோசகர், சட்ட ஆலோசகர் உள்ளிட்ட முக்கிய பதவிகளையும் நியமிக்க வேண்டிய தேவையும் இலங்கை அரசாங்கத்திற்கு உள்ளது. அந்தப் பணிகளை அரசாங்கம் முன்னெடுத்துள்ளது.

இவ்வாறிருக்கையில், உலக வங்கி 300 மில்லியனில் இருந்து 600 மில்லியன் வரை இலங்கைக்கு உதவி வழங்குவதாக அறிவித்து இருக்கின்றது. அதேபோன்று ஆசிய அபிவிருத்தி வங்கியும் இலங்கைக்கு உதவுவதாக அறிவித்திருக்கிறது. சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து நிதியுதவி கிடைக்கும் வரையிலும் ஏனைய தரப்புக்கள் நிதியை வழங்கும் வரையிலும் நாட்டின் பொருளாதார நிலைமைகளை சமாளிக்க வேண்டிய தேவை இலங்கை அரசாங்கத்துக்கு உள்ளது.



### இந்தியாவிடம் 2 பில்லியன் டொலர் மேலதிக கடனாக கோருகின்றது இலங்கை: இந்தியா சாதகமாக பரிசீலனை

தற்போதைய நிலையில் அரசாங்கத்துக்கு ஏற்கனவே இணங்கியதன் பிகாரம் இந்திய அரசாங்கம் அரிசி, எரிபொருள், மருந்து வகைகளை தொடர்ச்சியாக அனுப்பி வருகின்றது. ஏப்ரல் மாதத்தில் மாத்திரம் 27ஆயிரம் தொன் அரசி, எரிபொருட்களை இந்தியா அனுப்பி வைத்துள்ளது. அத்துடன் உடனடித் தேவைக்கான மருந்துகளையும் அடுத்து வரும் நாட்களில் இலங்கைக்கு அனுப்புவதற்கு ஏற்பாடுகள் பூர்த்தியாகியுள்ளன. இந்நிலையில், உள்நாட்டு நிலைமைகளைச் சமாளிப்பதற்காக இலங்கை அரசாங்கம் சீனாவிடத்தில் நிதி உதவியைக் கோரியிருந்தது. குறிப்பாக 2.5 பில்லின் டொலர்களை சீனாவிடத்தில் கோரியிருந்தது.

அத்துடன் ஏற்கனவே பெறப்பட்ட கடன்களை மீளச் செலுத்துவதற்கான கால அவகாசத்தினை நீடிக்குமாறும் கோரியிருந்தது. ஆனால், சீனா, தனது முன்னைய கடன்களை மீளச் செலுத்துவதற்கான கால அவகாசத்தினை வழங்குவதற்குத் தயாரில்லை. ஆனால் புதிய கடன்களை வழங்குவதற்கு தயாராக உள்ளது.

(13ஆம் பக்கம் பார்க்க)

# CINEMA எனது அனுபவங்கள்



இலக்கியம் தவிர சினமா (இந்தியாவில் இதனை 'சினிமா' என்கிறார்கள்), நாடகம், நாட்டியம், ஓவியம் போன்ற கலைகளிலும் எனக்கு ஈடுபாடு உண்டு. இருந்தபோதிலும், இப்பொழுது வயது தளர்ந்த நிலையில் தீவிரமாக இவற்றை நுகர்வதற்கு வாய்ப்பும், விருப்பும் இல்லாமற் போகிறது.

திரைப்படம் என்பதைப் பொறுத்தவரை நான் ஆரம்பத்தில் காட்டிய தேடல் முயற்சிகளும், இரசனை மட்டமும் வரவரத் தேய்ந்து போகின்றன. இக்கட்டுரையில் 'சினமா' பற்றிய எனது அனுபவங்கள் சிலவற்றை பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.


எனது அறிவு உணர்ச்சிபூர்வமாக வெளிப்படத் தொடங்கியது ஐந்து வயதிலாகும். எனது பெற்றோருடன் பார்த்த முதல் தமிழ்ப் படம் எம்.கே.தியாகராஜபாகவதர் பாடி நடித்த 'திருநீலகண்டர்' என்ற படமே. அந்தப் படத்தை முழுமையாகப் பார்த்து பகுத்தாராயும் பக்குவம் எனக்கு அப்போது இருக்கவில்லை. ஒரு சில காட்சிகளும் பாட்டுகளும் நினைவில் நின்றன.

அதற்குப் பின்னர் பி. கண்ணாம்பா நடித்த 'கண்ணகி', 'மஹாமாயா', 'ஜகதலப் பிரதாபன்' போன்ற படங்களின் சில காட்சிகள் மாத்திரமே நினைவில் நின்றன. அக்காலத்தில் ஒரு திரைப்படத்தில் வரும் சில சில அம்சங்களை மாத்திரம், அதாவது பாட்டு, ஹாஸ்யம், சண்டைக் காட்சிகள், இசை (வாத்தியக் கருவி, மெட்டுகள்) போன்றவற்றை மாத்திரம் ரசித்து மகிழ்ந்த காலமது.

1948 ஆம் ஆண்டு அளவில் 'சந்திரலேகா' என்ற படத்தை, மறைந்த அரசியல்வாதியான ஜோசப் பரராஜசிங்கத்துடன் பார்த்தேன். அப்பொழுதுதான் திரைப்படம் என்ற ஊடகத்தை வெறுமனே உதிரி உதிரியாக ரசிப்பது போதுமானது இல்லை என்றும், அதில் கதை, நடிப்பு, நெறியாள்கை, பொருத்தமுடைமை போன்றவை எல்லாம் கவனிக்கப்பட வேண்டும் என்றும் அறிவு ஏற்பட்டது. ஆங்கிலப் படங்கள் பார்ப்பதில் அவ்வளவு நாட்டம் இருக்கவில்லை. ஆங்கிலமொழி மூலம் கல்வி கற்றதனால், 'Secrets of Life' என்ற கல்வி சார்ந்த,ஆண்பெண் உறவு சம்பந்தமான ஒரு விவரணப் படத்தைப் பார்த்ததும் ஞாபகத்திற்கு வந்தது.

எஸ்.எஸ்.ஸி வகுப்பில் 1953 இல் படித்த பொழுது, ஆங்கில இலக்கியம் படிப்பித்த பி.டி.சின்னையா என்ற ஆசிரியர், 'A Tale of Two Cities' என்ற நாவலைப் படிப்பிக்கத் தொடங்கும் முன்னர் சிவாஜி கணேசன் நடித்த முதல் படமாகிய 'பராசக்தி' படம் பற்றிய தமது பார்வையை வெகு சுவாரஸ்யமாக விளக்கிக் கூறி, சார்ல்ஸ் டிக்கின்ஸின் நாவலுடன் ஓரளவு ஒப்புவமை இருப்பதை விளங்கப்படுத்தினார். அதன் பின்பே திரைப்படம் தொடர்பாக நிறைய அறிய வேண்டும் என்ற ஆவல் பிறந்தது.

1953 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் எனது தந்தையார் கொழும்புக்கு இடம்மாறி வந்ததனால் மட்டக்களப்பில் 11 வருடங்கள் வாழ்ந்த நான், கொழும்பிலேயே இற்றைவரை வசிக்கும் வசதி ஏற்பட்டது. கொழும்பு வந்ததும், திரைப்படம் தொடர்பாக நிறைய அறியக் கூடிய சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. அக்காலத்தில் Colombo Film Siciety, Cinema 16 Society என்று சில சங்கங்கள் மேலை நாட்டு படங்களைக் காட்டி வந்தன. பிரிட்டிஷ் கவுன்சில், அமெரிக்க மத்திய நிலையம் போன்ற இடங்களில் நிறைய சினமா தொடர்பான நூல்களை ஆங்கிலமொழி மூலம் வாசித்தும் பயனடையும் வாய்ப்பு கிட்டியது. Sight and Sound, Film 10 Filming போன்ற உயர்தர திரையேடுகளையும் பார்த்துப் பயனடையும் வாய்ப்புக் கிடைத்தது.



திறனாய்வாளர்
கே. எஸ். சிவகுமாரன்
எழுதுவது...

இது இப்படியிருக்க, 1953 ஆம் ஆண்டு முதல் நான் பத்திரிகைகளில் ஆங்கிலத்தில் பல விடயங்களைப் பற்றி எழுதத் தொடங்கினேன். இலங்கை வானொலி நிகழ்ச்சிகளிலும் பங்கெடுத்தேன். 1950 களில் இலங்கை வானொலியில் தமிழ்ப் பகுதியில் அருள்தியாகராஜா என்ற நிகழ்ச்சி அமைப்பாளர், ஒருவாரம் திரைப்படம் பற்றியும் மற்றொரு வாரம் இலக்கிய சொற்பொழிவுகளையும் ஒலிபரப்புமாறு சந்தர்ப்பம் தந்தார். அதேபோல விவியன் நமசிவாயமும் கிராம சஞ்சிகை நிகழ்ச்சிகளில் மொழிபெயர்ப்புகளைத் தருமாறு கேட்டுக் கொண்டார்.

அந்நாட்களில் Cinema 16 Society என்ற சங்கத்தின் தலைவர் முரளிதரன், தமிழ்ச் சேவையில் திரைப்பட விமர்சனங்களை ஒலிபரப்பி வந்தார். அவர் ஒரு வாரம் திறனாய்வு செய்தால், அடுத்த வாரம் நான் படங்களை பற்றியும் திறனாய்வைச் செய்யும் சந்தர்ப்பம் கிடைத்தது.

இதனாலேயே திரைப்படத் திறனாய்வாளர் என்ற அங்கீகாரம் எனக்குத் தரப்பட்டது. மேற்கூறப்பட்ட திரைப்படச் சங்கங்களுடன், கொழும்பிலுள்ள பிற நாட்டுத் தூதரகங்களும் தத்தமது நாட்டுப் படங்களை கொழும்பில் திரையிட்ட போது அவை பற்றி அறிந்து கொள்ள வாய்ப்பு ஏற்பட்டது.

Film Critics and Journalists Association என்ற சங்கம் உருவாகிய போது, அதன் ஸ்தாப உறுப்பினர்களான நானும், மறைந்த சில்லையூர் செல்வராசனும் சேர்ந்து கொண்டோம். அப்பொழுதுதான் சிங்களப் படங்கள் பற்றிய அறிவும், உலக சினமாக்கள் பற்றிய அறிவும் எமக்கு விசாலமாகின. திரைப்பட விழாக்களையும் இச்சங்கம் நடத்தியது.








தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் மேதினக் கூட்டம் மட்டக்களப்பு தேவநாயகம் மண்டபத்தில் (O1) நடைபெற்றது. இராஜாங்க அமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையில் நடை பெற்ற இம் மேதின கூட்டத்தில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளர் ரி.பிரசாந்தன் உட்பட அக் கட்சியின் உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள் உறுப்பினர்கள் கட்சி முக்கியஸ்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

## அந்நிய செலாவணி கையிருப்பு... (03ஆம் பக்கத் தொடர்)

கையிருப்பில் இருக்கும் 200 மில்லியன் டொலர்களும் குறைந்துள்ளன.

இந்த நிலையில் இலங்கையின் அந்நிய செலாவணி கையிருப்பானது பாரியளவில் குறைந்துள்ளதாக பொருளியல் மற்றும் நிதியியல் தொடர்பான நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான நிலைமையில் தினமும் மதிப்பிழந்து வரும் இலங்கை ரூபாயை ஸ்திரமான நிலைக்கு கொண்டு வருவதில் சிரமங்கள் ஏற்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

## மேடை நாடகக் கலைஞர்களுக்கு... (03ஆம் பக்கத் தொடர்)

இடைப்பட்டவர்களாக இருக்க வேண்டும். விண்ணப்பதாரி நாடக எழுத்து, ஒப்பனை, ஒளியூட்டல், நாடக இசை, நாடகத் தயாரிப்பு, நடன அமைப்பு, ஆடை வடிவமைப்பு, அரங்கு முகாமைத்துவம், இயக்கம், பின்னணி தயாரிப்பு, நடிப்பு ஆகிய துறைகளில் ஏதாவது ஒரு துறையில் ஈடுபட்டவராக இருக்க வேண்டும்.

இவர் மேடை நாடகத்துறையில் குறைந்தது 10 ஆண்டுகளாக ஈடுபட்டவராக இருக்க வேண்டும்.இவர் மேடை நாடகத் துறைக் கலைஞர் என்பதை கிராம உத்தியோகத்தர், கலாசார உத்தியோகத்தர் மற்றும் பிரதேச செயலாளர் உறுதிப்படுத்த வேண்டும்.

பூர்த்தி செய்த விண்ணப்பங்களை, பணிப்பாளர் நாயகம், டவர் மண்டப அரங்க மன்றம், சௌசிறிபாய, இல. 123, விஜேராம மாவத்தை, கொழும்பு 07 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும் அல்லது நேரில் கொண்டு வந்து ஒப்படைக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. ஒரு ஆண்டுக்கு மட்டும் பெற்றுத் தரும் இந்த காப்புறுதிக்கு பயனாளிகளிடம் இருந்து எந்தவித கட்டணமும் அறவிடப்படமாட்டாது. இது தொடர்பான மேலதிக தகவல்களை 0112682134/ 0112682324 என்ற இலக்கத்துடன் தொடா்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பத்தை இடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் "டவர் திடீர் விபத்து, மருத்துவ காப்புறுதி 2022/23" என்று குறிப்பிடுதல் வேண்டும். தகமைகளை உறுதி செய்வதற்கு சான்றிதழின் பிரதிகளை இணைத்து அனுப்புமாறும் கோரப்பட்டுள்ளது.

## இலங்கை மக்களுக்கு... (03ஆம் பக்கத் தொடர்)

அனுமதிக்கவேண்டும் என்று கோரி, தமிழக சட்டப்பேரவையில் முதலமைச்சர் ஸ்டாலின் தீர்மானம் முன்மொழிந்து அது நிறைவேற்றப்பட்டுள்ளது. முதலமைச்சரின் யோசனைப்படி, 80 கோடி மதிப்பிலான 40,000 தொன் அரிசி, 28 கோடி ரூபாய் மதிப்புள்ள மருந்துகள், 15 கோடி ரூபாய் மதிப்பிலான குழந்தைகளுக்கான 500 தொன் பால் மா மற்றும் பிற பொருட்களை அனுப்ப தமிழக அரசாங்கம் முடிவு செய்துள்ளது. இலங்கையில் உள்ள இந்திய உயர் ஸ்தானிகரகம் மூலம் இந்த பொருட்கள் அனுப்பப்படவுள்ளன. இந்தநிலையில் முதலமைச்சரின் திட்டத்துக்கு ஆதரவு வெளியிட்டுள்ள ராமேஸ்வரம் கடற்றொழிலாளர் சங்க தலைவர் ஜேசுராஜா, தமிழகத்தின் நிவாரணப்பொருட்களை தங்கள் இயந்திர படகுகள் மூலம் இலங்கைக்கு எடுத்துச் செல்ல தயாராக இருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

## நீண்ட காலத்தின்...

கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகத்தில் (30) நடைபெற்ற குழுக் கூட்டத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது தொடர்ந்து கருத்து தெரிவித்த கட்சியின் தலைவரும் சட்டத்தரணியுமான சிறீதரன் ,

தமிழர் விடுதலைக்கூட்டணிக்குள் கடந்த நாட்களாக இருந்த குழப்பகரமான நிலை மாற்றப்பட்டுள்ளது. நடைபெற்ற கூட்டத்தில் ஏகமனதாக புதியவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். தமிழர் விடுதலைக் கூட்டணி 1979ம் ஆண்டுகளில் கொண்ட கொள்கையில் பயணிக்கும். தனி நாடல்ல. தமிழர்களிற்கான தனி அரசைப் பெற்றுக் கொடுப்பதில் உறுதியுடன் செயற்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களிற்கு கருத்து தெரிவித்த மகளிர் பேரவைத் தலைவி கருத்து தெரிவிக்கையில், தமழர் விடுதலைக் கூட்டணியில் நிர்வாக செயற்பாடுகளிற் பங்கெடுத்துள்ள நாம் எதிர்வரும் மே 18ம் திகதி தமிழர் விடுதலை கூட்டணி முள்ளிவாய்க்காலில் அஞ்சலி செலுத்திய பின்னர் மக்களிற்கான அரசியல் பணியை முன்னெடுத்துச் செல்லவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதில் குறித்த கூட்டத்தில் சிரேஷ்ட தலைவராக சட்டத்தரணி ப. சிறீதரனும், செயலாளர் நாயகமாக மீண்டும் வீ ஆனந்தசங்கரியும் ஏகமனதாக தெரிவானார்கள். நிர்வாகச் செயலாளராக க. பூலோகரட்ணமும், பொருளாளராக தி.சஞ்சயனும், இணைப்பொருளாளராக வேதாரணியனும் தெரிவாகினர். இளைஞர் பேரவைத் தலைவராக க. சபேசனும், மகளிர் பேரவைத் தலைவராக சூரியபிரதீபா வாசவனும், சட்டம் மற்றும் ஒழுங்கு தலைவராக ஐயம்பிளை யசோதரனும், தொழிற் சங்கத் தலைவராக சி.தயாபரனும் தெரிவாகியுள்ளனர்.

## ஊடகவியலாளர்கள்...

வேப்பங்குளம் பகுதியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் நிரப்புவதற்காக வவுனியாவை சேர்ந்த இரு ஊடகவியலாளர்கள் சென்றுள்ளனர்.

இதன்போது அதிகமான பொது மக்கள் வரிசையில் நின்றமையால் அந்த நெரிசலை கட்டுப்படுத்துவதற்கு ஊடகவியலாளர்களால் சில ஆலோசனைகள் வழங்கப்பட்டது. இதனையடுத்து எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கடமையில் இருந்த ஊழியர்களுக்கும், அவர்களுக்கும் இடையில் கருத்து முரண்பாடு ஏற்பட்டது.

கருத்து முரண்பாடு முற்றிய நிலையில் தாம் ஊடகவியலாளர்கள் என அவர்களிடம் அறிமுகம் செய்து வைத்தனர்.

அதனை பொருட்படுத்தாத ஊழியர்கள் கடந்த முறையும் எமது நிரப்பு நிலையம் தொடர்பான செய்தியினை நீதானே பிரசுரித்தாய் என கூறி கடுமையாக தாக்கியுள்ளனர். குறித்த சம்பவத்தில் ஊழியர்களுடன் இணைந்து நிரப்பு நிலையத்தின் முகாமையாளரும் தாக்கியிருந்தார்.

அத்துடன் அவர்களது மோட்டார் சைக்கிளும் பறிமுதல் செய்யப்பட்டு அடித்து துரத்தப்பட்டனர். சம்பவத்தில் காயமடைந்த ஊடகவியலாளர் ஒருவர் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பாக பொலிசாருக்கு தெரியப்படுத்தப்பட்டது. சம்பவ இடத்திற்கு சென்ற நெளுக்குளம் பொலிசார் நிரப்பு நிலையத்தின் முகாமையாளர் உட்பட மூன்று பேரை கைது செய்துள்ளதுடன் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். இதேவேளை குறித்த நிரப்பு நிலையத்தின் கண்காணிப்பு கமரா பதிவுகளை வழங்குமாறு ஏனைய ஊடகவியலாளர்களால் அதன் நடத்துனருக்கு கோரிக்கை விடுக்கப்பட்டது.

எனினும் மின்சாரம் இல்லை என்பதால் இரகசிய கமரா இயங்கவில்லை என குறித்த நிலைய முகாமையாளரால் தெரிவிக்கப்பட்டது. நாட்டில் எரிபொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் வவுனியாவில் அமைந்துள்ள பிரதான நிரப்பு நிலையங்களில் எரிபொருளை பெற்று கொள்வதில் பொதுமக்களுக்கும், நிரப்பு நிலையத்தின் ஊழியர்களுக்கும் இடையில் தொடர்ச்சியாக முரண்பாடுகள் ஏற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ரஞ்சித் சியம்பலாபிட்டிய ...

செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர், அனைத்துக் கட்சி ஆட்சி அமைக்கப்பட வேண்டுமானால், அனைத்து அரசியல் கட்சிகளையும் ஒன்றிணைக்கும் குறுகிய கால அரசாங்கமாக அது இருக்க வேண்டும் என்றார்.

அனைத்துக் கட்சி அரசாங்கம் ஒன்றுபட்டாலேயொழிய நாட்டின் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்க முடியாது என்றார். "இரண்டு நிபந்தனைகளின் கீழ் நான் துணை சபாநாயகராக தொடர்வேன் என்று இந்த மாத தொடக்கத்தில் பாராளுமன்றத்தில் தெரிவித்தேன். ஏப்ரல் இறுதி வரை நான் துணை சபாநாயகராக பணியாற்றுவேன். ஏப்ரல் 5, 2022 முதல் துணை சபாநாயகர் பதவியை ஏற்க மாட்டேன். எனது ராஜினாமாவை அவர் அறிவித்துள்ளார். இந்த கடிதத்தின் பிரதி நேற்று ஜனாதிபதி மற்றும் சபாநாயகர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார். மேலும், இலங்கையின் மொத்த கடன் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 170% ஆகும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## இளம் மாணிக்க வியாபாரி..

முன்தினம் சக நண்பர்களுடன் பேருவளை பிரதேச 'Futsal' உள்ளக விளையாட்டு திடலில் உதைபந்தாட்டம் விளையாடிக் கொண்டிருந்தபோது, திடீரென மயக்கமுற்று கீழே விழுந்துள்ளார். இவரை சக நண்பர்கள் உடனடியாக அருகிலுள்ள தனியார் வைத்திய நிலையத்திற்கு கொண்டு சென்றனர். இருந்த போதிலும் அவரின் உயிரை காப்பாற்ற முடியவில்லை. அவர் திடீர் மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழந்ததாக அவரை பரிசோதித்த வைத்தியர் டொக்டர் முஸ்தபா தெரிவித்தார். நண்பனின் மரணச்செய்தியை கேள்விப்பட்டதும் நூற்றுக்கணக்கான நண்பர்கள், உறவினர்களும் வைத்திய நிலையத்தில் குழுமியிருந்ததோடு ஒருசிலர் நண்பனின் துயரம் தாங்காது கதறி அழுதனர்.

ஒரு பெண் குழந்தைக்கு தந்தையான மொஹமட் ஸஜான், களுத்துறையைச்சேர்ந்த பிரசித்திபெற்ற சிரேஷ்ட கணக்காளர் (KP) காலஞ்சென்ற அஹமட் ஸரூக் அவர்களின் புதல்வரும் சீனன்கோட்டையைச்சேர்ந்த முகத்தமுஷ்ஷாதுலி அஹமட் ஸரூக் ஹாஜியாரின் மருமகனும் EGL நிறுவன முகாமைத்துவ பணிப்பாளர் அல்ஹாஜ் ஹாரிஸ் மற்றும் சீனன்கோட்டை ஜாமியதுல் பாஸிய்யாவின் உப தலைவர் டொக்டர் நூருல் இஸ்லாமின் மைத்துனருமாவார்.

அன்னாரின் ஜனாஸா நேற்று (01) அஸர் தொழுகையின் பின் சீனன்கோட்டை பாஸிய்யா பெரிய ஜும்ஆ பள்ளிவாசல் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

ஜனாஸா நல்லடக்கத்தில் உலமாக்கள், ஊர் பிரமுகர்கள், அரசியல்வாதிகள் உட்பட பெருந்திரளானோர் கலந்து கொண்டனர். நேற்றைய தினம் கடுமையான மழையிலும் சீனன்கோட்டை பிரதேசம் இளம் வியாபாரியின் திடீர் மறைவினால் சோகமடைந்து காணப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## பிரதான கட்சிகளின் மேதின..

மக்களின் பங்கேற்புடனேயே நடைபெற்றன.

சர்வதேச தொழிலாளர் தினத்தையொட்டி சில அரசியல் கட்சிகள் மற்றும் தொழிற்சங்கங்கள் நேற்று கூட்டங்கள் மற்றும் ஊர்வலங்களை நடத்தியபோதும் அவற்றில் மக்கள் பங்கேற்பு மிகவும் குறைவாகவே காணப்பட்டதுடன் ஊர்வலங்களும் மிகவும் குறைவாகவே காணப்பட்டன.

பொது ஜன பெரமுனவுடன் இணைந்த தொழிற்சங்கங்கள் நடத்திய மே தின கூட்டம் நேற்றைய தினம் பிற்பகல் நுகேகொடை ஆனந்த சமரக்கோன் வெளியரங்கில் நடைபெற்றது. மக்கள் ஆணையை பாதுகாப்போம், சவால்களை வெற்றி கொள்வோம் என்ற தொனிப்பொருளில் அந்த மேதினக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நாட்டில் நிலவும் எரிபொருள் நெருக்கடி மற்றும் பொருளாதார நெருக்கடியை கவனத்திற்கொண்டு உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள் மற்றும் தொழிற்சங்க உறுப்பினர்கள் உள்ளிட்ட மட்டுப்படுத்தப்பட்டவர்களின் பங்கேற்புடனேயே அந்த கூட்டம் நடைபெற்றதாக பொது ஜன பெரமுன கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

ஐக்கிய மக்கள் சக்தியின் மே தினக் கூட்டம் நேற்று பிற்பகல் கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் நடைபெற்றது. அந்தக் கட்சி கடந்த 26 ஆம் திகதி கண்டியிலிருந்து ஆரம்பித்த ஆர்ப்பாட்டப் பேரணி நேற்று கொழும்பு கெம்பல் பூங்காவில் நிறைவடைந்தது. அதனையடுத்து அங்கிருந்து மே தின ஊர்வலம் சுதந்திர சதுக்கம் வரை சென்று அங்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் தலைமையில் சுதந்திரத்திற்கான போராட்டம் என்ற தொனிப்பொருளில் மேதினக் கூட்டம் நடைபெற்றது. அதேவேளை லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்ட அரசியல் கட்சிகளின் மேதினக் கூட்டம் நேற்று பிற்பகல் 3 மணிக்கு கொழும்பு ஹைட் பார்க் விளையாட்டரங்கில் நடைபெற்றது.

அத்துடன் பெரட்டுகாமி சமாஜவாதி கட்சியின் மேதினக் கூட்டம் கொழும்பு விகாரமாதேவி பூங்கா வெளியரங்கில் நடைபெற்றது. தேசிய சுதந்திர முன்னணியின் மேதினக் கூட்டம் பத்தரமுல்ல அபே கம பகுதியில் நடைபெற்றது.

அதற்கிணங்க ஐக்கிய தேசியக் கட்சியின் மேதினக் கூட்டம் நேற்று பிற்பகல் கொழும்பு புதிய நகர மண்டபத்தில் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நடைபெற்றதுடன் மிகவும் குறைந்த அளவிலானவர்களே அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டுள்ளனர். ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் மேதினக் கூட்டம் கட்சியின் தலைமையகத்தில் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் நடைபெற்றது. அத்துடன் மக்கள் விடுதலை முன்னணியின் மேதினக் கூட்டங்கள் கொழும்பு, மாத்தறை, அனுராதபுரம் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய நகரங்களில் நேற்று நடைபெற்றுள்ளன. யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மேதின கூட்டம் அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வாவின் தலைமையில் நடைபெற்றுள்ளது.

அதேவேளை, அரசாங்கத்துக்கு எதிராக காலிமுகத்திடலில் நடத்தப்படும் மக்கள் போராட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் நாட்டின் முக்கிய நகரங்கள் சிலவற்றிலும் நேற்று எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.(ஸ)

## இந்தியாவில் அகதிகளாக... (03ஆம் பக்கத் தொடர்)

ஜூலை 1983 முதல் ஒகஸ்ட் 2012 வரையிலான காலப்பகுதியில் 3,04,269 இலங்கை அகதிகள் இந்தியாவில் தஞ்சமடைந்திருக்கின்றனர்.

இவ்வாறு இந்தியாவுக்குள் வரும் இலங்கை அகதிகளை மீண்டும் இலங்கைக்கு திருப்பி அனுப்பும் இறுதி நோக்கத்துடன் மனிதாபிமான அடிப்படையில் அவர்களுக்கு நிவாரணம் வழங்குவதே இந்திய அரசின் அணுகுமுறை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 'உண்மைத்தன்மையை... (03ஆம் பக்கத் தொடர்)

திருத்தத்திற்கு வாக்களித்ததாக அமைச்சர் நசீர் அஹமட் அண்மையில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சலுகை விலையில்...

அதில் சிவப்பரிசி, நாட்டரிசி மற்றும் சம்பா அரிசியும் உள்ளடங்குவதாக அமைச்சர் தெரிவித்தார்.

சதொச ஊடாக மாத்திரம் வழங்கப்படும் அரிசியை பல்பொருள் அங்காடிகளுக்கு வழங்கும் பட்சத்தில் சலுகை விலையில் அரிசியை விற்பனை செய்ய முடியும் என பல்பொருள் அங்காடிகளின் உரிமையாளர்கள் உறுதியளித்துள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

இதுவரை 7900 மெட்ரிக் தொன் சமையல் எரிவாயு கிடைத்துள்ளதுடன், சர்வதேச நாணய நிதியம் வழங்கும் கடனுதவியின் கீழும் சமையல் எரிவாயுவை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சர் ஷெஹான் சேமசிங்க மேலும் குறிப்பிட்டார்.

லிட்ரோ நிறுவனத்தை போன்று, லாஃப்ஸ் நிறுவனத்திற்கும் சமையல் எரிவாயுவை இறக்குமதி செய்வதற்கான வசதிகளை ஏற்படுத்தி கொடுக்கவுள்ளதாக வர்த்தக அமைச்சர் மேலும் கூறினார்.

## பிரதமர் பதவி குறித்து...

செய்யுமாறு கோரிய மகாநாயக்க தேரர்களின் பிரேரணையை உடனடியாக அமுல்படுத்துமாறு பௌத்த பிக்குகள் குழு நேற்று ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ள நிலையிலேயே பிரதமர் இந்த அறிவிப்பை விடுத்துள்ளார். இந்நிலையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் அனைத்துக் கட்சி அரசாங்கத்தில் அங்கம் வகிப்பதாக எதிர்க்கட்சிகள் அனைத்தும் தயாராக உள்ளதாக அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 40.000 மெ....

மருந்துப் பொருட்கள், குழந்தைகளுக்கான பால்மா 500 மெற்றிக் தொன் ஆகியவையும் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடி நிலையில் இலங்கை அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்ற நிலைப்பாட்டுடனேயே தமிழ்நாடு அரசாங்கம் இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஸ)

## மக்கள் போராட்டத்தை...

நாட்டை மேலும் சீர்குலைக்கும் எனத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், இவ்வாறான மோசடியான அரசாங்கத்துடன் இணைவதை விட பதவிகளை இராஜினாமா செய்வதே தனக்கு மகிழ்ச்சியானது எனவும் தெரிவித்தார்.

இந்நாட்டு மக்களின் புனிதமான போராட்டத்தை மோசடியான முறையில் காட்டிக்கொடுக்க மாட்டோம் என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், மறைந்த ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் உருவச்சிலைக்கு முன்னால் இருந்து இந்த உறுதியை வழங்குவதாகவும் தெரிவித்தார்.

மறைந்த ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் 29 ஆவது நினைவேந்தல் நிகழ்வு நேற்று (01) புதுக்கடையில் உள்ள ரணசிங்க பிரேமதாச உருவச்சிலைக்கு முன்பாக நடைபெற்றது.

## சட்டவிரோதமாக Gas...

சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போதே குறித்த இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அங்கு லிட்ரோ எரிவாயுவுடன் கூடிய 12 தாங்கிகள் கண்டுபிடிக்கப்பட்டதுடன், குறித்த எரிவாயு தாங்கிகள் மேலதிக விசாரணைக்காக நுகர்வோர் விவகார அதிகார சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

## நாடு முழுவதும் இராணுவம்...

வந்தடைகின்றனவா என்பதைப் பரிசோதிப்பதற்காகவே இந்த கண்காணிப்பு வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் விசேட பணிப்புரைக்கு அமைய இராணுவம் இந்த வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

## அலரி மாளிகைக்கு ...

காலி முகத்திடலில் ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பாகவும், அலரி மாளிகைக்கு முன்பாகவும் தொடர்ச்சியாக போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்தநிலையில், அலரி மாளிகைக்கு முன்பாக நடத்தப்பட்டு வரும் போராட்டக் களத்தில் நேற்று அதிகாலை ஐந்து மணியளவில் அங்கு அமைக்கப்பட்டுள்ள கூடாரங்கள் அகற்றப்பட்டுள்ளன. இதன் காரணமாக போராட்டக் களத்தில் அமைதியின்மை ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் வீதியோரத்தில் இருந்து அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தை நடத்தி வந்த ஆர்ப்பாட்டக் காரர்கள் தற்போது நடுவீதியை மறித்து அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

## 130 k.g கேரள கஞ்சா ...

குறித்த பொதிகள் ஜெயபுரம் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில் மேலதிக விசாரணைகளை பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

## சிங்கப்பூரில் புதிய ....

உடனேயே, அவா்கள் தனிமைப்படுத்தப்பட்டனா். பிஏ.2.12.1 துணை ரகம் கவலைக்குரியது என்றோ, கண்காணிக்கப்படவேண்டியது என்றோ உலக சுகாதார அமைப்பு இதுவரை அறிவிக்கவில்லை என்று அதிகாரிகள் தெரிவித்தனர். தீவிர தொற்றும் தன்மை கொண்ட ஒமிக்ரோன் ரகமான பிஏ.2வின் துணை ரகமான பிஏ.2.12.1, மார்ச் மாத மத்தியில் உலகம் முழுவதும் அதிகம் பேருக்கு பரவியமை குறிப்பிடத்தக்கது.

## பஸ்ஸும் ஆட்டோவும் ...

முச்சக்கரவண்டி மற்றுமொரு பஸ்ஸை முந்திச் செல்லும்போது எதிரே வந்த பஸ்ஸுடன் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானமை ஆரம்பக்கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. விபத்துடன் தொடர்புடைய பஸ் சாரதி கைது செய்யப்பட்டுள்ள நிலையில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.








பொதுஜன முன்னேற்ற தொழிற்சங்கத்தின் மேதின ஊர்வலமும் கூட்டமும் நேற்று நுகேகொடையில் நடைபெற்றது. இதில் பெரும் திரளான மக்கள் கலந்து கொண்டனர்.

சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையில்

# மார்பு சிகிச்சை நிலையம் புதிதாக திறந்து வைப்பு!

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் அதிகரித்துவரும் காச நோயாளர்களின் எண்ணிக்கை கட்டுப்படுத்துவதற்கு கல்முனை பிராந்திய மார்பு சிகிச்சை நிலையம் துரித நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஐ எல் எம் றிபாஸ் வழிகாட்டலுக்கு அமைய பிராந்திய மார்பு சிகிச்சை நிலைய பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஏ எச் திலிப் மபாஸ் இதற்கான திட்டங்களை முன்னெடுத்துள்ளார். இதற்கமைய சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையில் மார்பு சிகிச்சை நிலையத்தின் பிரிவு ஒன்று புதிதாக திறந்து வைக்கப்பட்டுள்ளது. இங்கு நீண்டகால சுவாச நோய்களால் பாதிக்கப்பட்ட அனைத்து நோயாளிகளும் ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு 3 வது வாரத்தில் விஷேட சிகிச்சைக்கு உட்படுத்தப்பட உள்ளன குறிப்பிடத்தக்கதாகும்.

உள்ளூர் அதிகாரசபைத் தேர்தல் கட்டளைச் சட்டத்தை திருத்துவதற்கான பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி பிரேமநாத் சி தொலவத்தவின் சட்டமூலம் அமைச்சர் தினேஷ் குணவர்தனவிடம் நேற்று கையளிக்கப்பட்ட போது பிடிக்கப்பட்ட படம்.

# மூதூர் மனிதாபிமான சங்கத்தின் இப்தார் நிகழ்வு

(மூதூர் தினகரன் நிருபர்)

மூதூர் மனிதாபிமான சமூக அமைப்பின் 10 வது ஆண்டு கால நிறைவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ரமழான் இப்தார் நிகழ்வு இன்று திங்கள் கிழமை (02) மூதூர் கிளைக் காரியாலயத்தில் இடம்பெற உள்ளது.

கடந்த 10 ஆண்டு காலமாக சமூக நல பொது விடயங்கள், மனிதாபிமான உதவிகள், நோயாளர்களுக்கான உதவிகள் மற்றும் வறிய மாணவர்களுக்கான உதவிகளை அமைப்பினர் நல்கி வருகின்றனர். இந்நிலையில் 10 ஆண்டு கால நிறைவை முன்னிட்டு இவ்இப்தார் நிகழ்வும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

# ஆலோசகர் நியமனம் வழங்கல்

பாலமுனை தினகரன் நிருபர்

அக்கரைப்பற்று கல்முனை மாவட்ட சாரணர் சங்கத்தின் பிரதம ஆலோசகர்களாக உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஏ.ஏ.வாஹிட், பிரதம பொலிஸ் பரிசோதகர், எஸ்.எம்.சதாத் ஆகியோர் நியமிக்கபட்டுள்ளனர். மாவட்ட சாரணர் சங்கத்தின் விஷேட நிகழ்வு அண்மையில் அக்கரைப்பற்று "கிங் ஏசியா செப்"ஹோட்டலில் சங்கத்தின் தலைவரும், பிரதேச செயலாளருமான எஸ்.எல்.எம்.ஹனிபா தலைமையில் நடைபெற்ற போது ஆலோசகர்களுக்கான நியமனக் கடிதங்கள் தலைவரினால் வழங்கி வைக்கப்பட்டன. மாவட்ட சாரணர் சங்கத்தின் வளர்ச்சி கடந்த காலங்களை விட சாரணர்களின் தொகையும் அதிகரித்து காணப்படுவதுடன் அதிகமான சாரணர் தலைவர்களும் சாரணர் உயர் பயிற்சியினையும் பெற்றுள்ளனர்.





அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியத்தின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக தெரிவும் கொழும்பு பழைய நகர மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. இதில் அங்கத்தவர்களுக்கு அடையாள அட்டைகளும் வழங்கப்பட்டன. இங்கு ஒன்றியத்தின் தலைவர் வீஜயராஜ், அதிபரும் பாடகருமான அசோகன், கலைஞர் முனிவர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(படங்கள்: எம்.நசார்)







மாத்தளை திருநாவுக்கரசு நாயனார் சபையினால் கந்தேநுவர மா/கணபதி ஆரம்பப் பாடசாலையில் சபையின் உபத்தலைவர் "நித்திய அர்ச்சகர்" பிரம்மஸ்ரீ பு. இரமேஷ்குமார் சர்மாவின் தலைமையில் சபையின் போஷகர் "தற்புருஷச் சிவாசாரியார் "சிவஸ்ரீ.யோகேஷ்வரக்குருக்களின் முன்னிலையில் கந்தேநுவர, உணுகல, பிட்டகந்த, தம்பலகல, சின்னச் செல்வகந்த, பெரியச் செல்வகந்த ஆகிய பிரதேசங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான இலவசக் கருத்தரங்கு நடாத்தப்பட்டது. இக்கருத்தரங்கின் வளவாளராக சபையின் பொதுச்செயலர் சைவப்புலவர் இரா. ஜீவன்பிரசான் கலந்து கொண்டார்.


திகதி 29.04.2022 வெள்ளிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம்: 4747
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.10,212,420.00
ஆங்கில எழுத்து M வெற்றி இலக்கங்கள் 4 6 1 0 6 4
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.15,097,617.00

ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம்: 0056
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,151,260.00
இலக்கினம் சிம்மம் வெற்றி இலக்கங்கள் 09 37 48 55
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.3,036,197.20

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் : 777
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,081,980.00
வெற்றி இலக்கினம் W வெற்றி இலக்கங்கள் 09 20 44 51
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 109,405,678.80

கோடி 24+ Mega POWER மெகா பவர் — சீட்டிழுப்பு இலக்கம் 1095
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.5,030,740.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.249,562,402.00
H 24 04 15 17 51
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00 அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board தொலைபேசி: 011-4607000, 011-4607001-2 பெக்ஸ்: 011-4669475 Email: info@nlb.lk Web: www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01



திகதி 30.04.2022 சனிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம்: 4748
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.9,862,730.00
ஆங்கில எழுத்து D வெற்றி இலக்கங்கள் 3 8 7 7 5 8
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.15,797,283.00

ஜாதிக சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 1240
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,978,700.00
வெற்றி இலக்கினம் ரிஷபம் வெற்றி இலக்கங்கள் 0 1 2 1 8 3
அடுத்த சீட்டிழுப்பின சுப்பர் பரிசு ரூ.11,105,832.40

ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம்: 0057
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.4,510,240.00
இலக்கினம் துலாம் வெற்றி இலக்கங்கள் 05 09 18 41
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.3,090,719.00

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் : 778
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,160,260.00
வெற்றி இலக்கினம் F வெற்றி இலக்கங்கள் 09 13 21 59
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 109,405,678.80

கோடி 24+ Mega POWER மெகா பவர் — சீட்டிழுப்பு இலக்கம் 1096
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,333,560.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.249,887,430.00
H 12 47 48 53 76
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00 அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board தொலைபேசி: 011-4607000, 011-4607001-2 பெக்ஸ்: 011-4669475 Email: info@nlb.lk Web: www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

இலங்கை மக்களின் சார்பாக

# தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலினுக்கு வட மாகாண ஆளுநர் நன்றி தெரிவிப்பு

**திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது**

கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இலங்கை மக்களுக்கு உதவி செய்ய முன்வந்த தமிழக முதல்வருக்கு இலங்கை மக்களின் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்" என வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்துள்ளார்.



கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவித்து வரும் அண்டை நாடான இலங்கைக்கு ரூ.123 கோடி மதிப்பில் அரிசி, கோதுமை, பால்மா, மருந்து உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை தமிழக அரசு சார்பில் வழங்கிட சட்டப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதனை கொண்டு சேர்க்கும் வகையில் அனுமதி வழங்கிட மத்திய அரசுக்கு தமிழக அரசு கோரிக்கையும் விடுத்துள்ளது. இந்த நிலையில், இலங்கை வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோயிலுக்கு வந்து சுவாமி தரிசனம் செய்தார்.

பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த அவர், ``தமிழக அரசு, இலங்கை மக்களுக்கு உதவி செய்ய முன் வந்தமைக்கு தமிழக அரசுக்கும் தமிழக முதல்வருக்கும் இலங்கை மக்கள் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இலங்கையில் நிலவக்கூடிய இந்த கஷ்ட காலத்தில் மத்திய அரசு மூலமாக உதவி செய்ய முன்வந்த தமிழக முதல்வரை நேரில் சந்தித்து நன்றி தெரிவிக்க உள்ளேன்.

இந்தியாவிடமிருந்து தற்போது மருத்துவ உதவிகள் கிடைத்துள்ளது. தொடர்ந்து எந்த மாதிரி நடவடிக்கைகள் தேவை என்பதை அரசு பரிசீலனை நடத்தி வருகிறது. தற்போதைய சூழலில் இலங்கை மக்களுக்கு இந்திய அரசு உணவுகளை தடையின்றி வழங்குவதே சிறந்த உதவியாக இருக்கும். இந்தியா தவிர்த்து மற்ற நாடுகளும் இலங்கை மக்களுக்கு உதவி செய்ய இலங்கை அரசு பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது" என்றார்.

யாழ். பல்கலைக்கழகத்தில்

# விரிவுரையாளர்கள் மூவர் பேராசிரியர்களாக பதவி உயர்வு

**யாழ். விசேட நிருபர்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளர்கள் மூவர் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

மருத்துவ பீடத்தைச் சேர்ந்த ஒருவரும், வணிக முகாமைத்துவ பீடத்தைச் சேர்ந்த இருவருமாக மூன்று சிரேஷ்ட விரிவுரையாளர்களைப் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்துவதற்குப் பல்கலைக்கழகப் பேரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் நேற்று முன்தினம் சனிக்கிழமை துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்றது.அதன் போது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை நியமங்களுக்கு அமைய திறமை அடிப்படையில் பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பித்தவர்களின் மதிப்பீடு, நேர்முகத் தேர்வு முடிவுகள் பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

அவற்றின் படி, மருத்துவ பீடாதிபதியும், சமுதாய மருத்துவ மற்றும் குடும்ப மருத்துவத் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளருமான மருத்துவர் இ. சுரேந்திரகுமாரன் சமுதாய மருத்துவத் துறையில் பேராசிரியராகவும், வணிக முகாமைத்துவ பீடத்தின் கணக்கியல் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பி. பிரதீப்காந் கணக்கியலில் பேராசிரியராகவும் , மனித வள முகாமைத்துவத் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஜே.றொபின்சன் மனித வள முகாமைத்துவத்தில் பேராசிரியராகவும் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

# புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளில் தென்மராட்சிக் கல்வி வலயம் சாதனை

**சாவகச்சேரி விசேட நிருபர்**

அண்மையில் வெளியான புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் தென்மராட்சிக் கல்வி வலயம் இலங்கையின் முதலாவது தமிழ் வலயமாகக் காணப்படுவதாக தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

அண்மையில் வலயக்கல்வி அலுவலகத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்;

வெளியான புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் இலங்கையில் உள்ள 100 கல்வி வலயங்களில் தென்மராட்சி கல்வி வலயம் 16ஆவது வலயமாக காணப்படுகிறது. அதிலும் முதலாவது தமிழ் வலயமாக தென்மராட்சி மிளிர்கிறது. வெட்டுப்புள்ளிக்கு மேல் பெறுபேறு பெற்ற மாணவர்களின் அடிப்படையில் எமது வலயம் இலங்கையில் ஆறாவது வலயமாக காணப்படுகின்றது. இது ஓர் சாதனையாக கருதப்படுகிறது. தென்மராட்சி கல்வி வலய ஆரம்பப் பிரிவு கற்றல், கற்பித்தல் செயற்பாடு மிகச்சிறந்த நிலையில் உள்ளமையை இது எடுத்துக்காட்டுகிறது.

இம்முறை ஆரம்பப் பிரிவில் சில பிரதேசங்களை முன்னுருமைப்படுத்தி அதில் வெற்றி பெற்றுள்ளோம். நாம் பின்தங்கிய பிரதேச பாடசாலைகளுக்கு கூடுதலான பங்களிப்பாற்றி வருகிறோம்.பின்தங்கிய பாடசாலை மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை நாம் கண்காணிக்காது விட்டால் அவர்களது எதிர்காலம் பாதிப்படையும். எமது கல்வி வலய கிராமிய பாடசாலைகளின் ஆரம்பப்பிரிவு மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு அடைவு மட்டம் அதிகரிக்கப்பட்டுள்ளமையை எம்மால் காணக்கூடியதாக உள்ளது என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

தொழிலாளர்களின் பட்டினி நிலைக்கு பதில் சொல்

# மே தினத்தில் பள்ளிமுனை கிராம மக்கள் கவனயீர்ப்பு போராட்டம்

**மன்னார் குறூப், தலைமன்னார் விஷேட நிருபர் கள்**

சர்வதேச தொழிலாளர் தினத்தை முன்னிட்டு மன்னார் பள்ளிமுனை கிராம மக்கள் பள்ளிமுனை கடற்கரைக்கு அருகில் நேற்று ஞாயிற்றுக்கிழமை(1) காலை கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

தொழிலாளர்களின் உரிமை மதிக்கப்பட வேண்டும், நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு உடனடியாக தீர்வு காணப்பட வேண்டும், இலங்கையில் தீர்க்க முடியாமல் காணப்படும் இனப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு எட்டப்பட வேண்டும் போன்ற பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து பள்ளிமுனை மக்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர்.




இந்த போராட்டத்தில் பள்ளிமுனை பங்குத்தந்தை, அருட்சகோதரிகள் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் தலைவர் ஜாட்சன் பிகிறாடோ, மன்னார் நகர சபை உப தலைவர் ஜான்ஸன் உட்பட நூற்றுக்கணக்கான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

ஆட்சியாளர்களே அப்பாவி பொது மக்களின் வாழ்க்கையை நசுக்காதீர்கள்,குழந்தைகளுக்கான பால்மா எங்கே?, தொழிலாளர்களின் பட்டினி நிலைக்கு பதில் சொல், பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கு, விலை உயர்வு உனக்கு என்ன விளையாட்டு, கடற்றொழிலாளர்களுக்கு எரிபொருளை வழங்க ஆவனம் செய்,திட்டமிட்ட சிங்கள குடியேற்றத்தை நிறுத்து, மன்னார் வளைகுடாவில் கடல் வளங்களை அழிக்காதே,வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட எங்கள் உறவுகள் எங்கே? போன்ற பல்வேறு உணர்ச்சி ரீதியாக எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு மக்கள் கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

# தொழிலாளர் உரிமைகளை வலியுறுத்தி வவுனியாவில் விழிப்புணர்வு பேரணி

**ஓமந்தை விஷேட நிருபர்**

தொழிலாளர்களின் உரிமைகளை வலியுறுத்தியும் அரசுக்கு எதிராகவும் பெண்கள் மஸ்தியஸ்தானத்தால் வவுனியாவில் நேற்று விழிப்புணர்வு ஊர்வலம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா பழைய பேருந்து நிலையத்திற்கு முன்பாக ஆரம்பித்த பேரணி மணிக்கூட்டு சந்தியை அடைந்து அங்கிருந்து மீண்டும் பழைய பேருந்து நிலையப்பகுதிக்கு சென்றது.



ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கருத்து தெரிவிக்கையில்,

நாம் ஆடைத் தொழிலில் ஈடுபடுகின்ற பெண் தொழிலாளர்கள் ஆவோம். நாட்டுக்கு வெளிநாட்டு செலாவணியை கொண்டு வருவதற்கான உழைப்பை நாமே வழங்குகின்றோம். ஆடைத் துறையின் படையணியில் 85வீதமானவர்கள் நாமே. தனியார் பிரிவையும் ஊழியர் படையணியையும் ஊக்குவிக்கவும் பலப்படுத்துவதற்காக அரசாங்கம் வசதிகளை வழங்கியது முதலாளிமாருக்கு தவிர எமக்கு அல்ல.

அதற்காக எமக்கு வழங்கப்பட்ட நிவாரணங்கள் எவை என நாம் அரசிடம் கேள்வியெழுப்புகின்றோம். ரூபாவை மிக மோசமான முறையில் இழிவுபெறச் செய்து, டொலரின் பெறுமதி உயர்ந்து சென்றதற்கு நிதி முகாமைத்துவத்தின் அரிச்சுவடி கூடத் தெரியாதவாறு செயலாற்றிய தற்போதைய அரசாங்கத்தின் திறமையே காரணம்.

இன்று விலைவாசி உயர்வையடுத்து நாடுமுழுதும் மக்கள் போராட்டங்கள் எழுச்சிபெற்று வருகின்றன. காலிமுகத்திடலில் எழுச்சி பெற்று வருகின்றன., அவற்றை அரசு செவிமடுத்ததாக தெரியவில்லை. இவற்றின் அடிப்படை நோக்கமானது 21ம் திருத்தத்தின் மூலம் நிறைவேற்று ஜனாதிபதிப் பதவியை இரத்துச் செய்வது மட்டுமல்ல. விலைவாசியை கட்டுப்படுத்தி தொடர்ச்சியான ஜனநாயக ஆட்சியொன்றை நிறுவக்கூடிய 13வது திருத்தச் சட்டத்தை பூரணமாக அமுல்படுத்துவதன் மூலம் புதிய பிரதிநிதித்துவமொன்றுடனான பாராளுமன்றம் ஒன்றை அமைப்பதுமாகும்.

சர்வதேச தொழிலாளர் தினத்தை இந்தப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான கவனத்தை செலுத்துவதற்கு பாவிக்கப்பட வேண்டும் என பெண்கள் குழுவொன்றாக நாம் உறுதியாக நம்புகின்றோம்.

நிகழ்கால ஏகாதிபத்திய ஆட்சியைத் தோற்கடித்து, கட்டமைப்பு ரீதியான மாற்றங்களுக்கு இடமளித்து அடிமைத் தனமற்ற இலங்கையை கட்டியெழுப்புவதற்காக ஆண் பெண், கட்சி, நிறம், இனம், சாதி, மத பேதங்களின்றி அனைத்து தொழிலாளர் சக்திகளையும் ஒன்றிணைத்து கொண்டு ஏகோபித்த குரலெழுப்புவதற்கு உறுதிபூண்டு அணிதிரள்வோம் என்றனர்.

# கடற்படை படகு மோதி மீனவர் வள்ளம் சேதம்



**யாழ். விசேட, கரவெட்டி தினகரன் நிருபர்கள்**

வடமராட்சி கடற்பரப்பில் கடற்படைப் படையினரின் படகு மோதி கடற்தொழிலாளர் சங்கத் தலைவரின் படகு சேதமடைந்துள்ளது.

நேற்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இச் சம்பவத்தில் கடற்தொழிலாளிகள் இருவர் தெய்வாதீனமாக உயிர் தப்பியதுடன், சங்கத் தலைவரின் படகு மற்றும் இயந்திரம் மீளப் பயன்படுத்த முடியாதவாறு சேதமடைந்துள்ளன என தெரிவிக்கப்படுகிறது.

பருத்தித்துறை சுப்பர்மடம் கடற்தொழிலாளர் சங்கத்தின் தலைவர் தேவராசா தேவகுமார் என்பவரது படகே சேதமடைந்துள்ளது. படகு சேதடைந்ததால் நடுக்கடலில் தத்தளித்த கடற்தொழிலாளிகள் இருவரையும் சில நிமிடங்கள் கழித்து கடற்படையினர் படகுடன் இழுத்து வந்து கரை சேர்த்துள்ளனர். சம்பவத்தில் கடற்படையின் படகு மோதியதனால் தனது படகு மீளப் பயன்படுத்த முடியாதவாறு சேதமடைந்துள்ளதாகவும் 10 இலட்சம் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் கடற்தொழிலாளர் பருத்தித்துறை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

# முள்ளிவாய்க்கால் பகுதியில் வெடிபொருட்கள் மீட்பு

முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் பகுதியில்நேற்றையதினம் (30 ) வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.



விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இவை மீட்கப்பட்டுள்ளன. எட்டு ஆர்.பி.ஜி குண்டுகளே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன.

# கிளிநொச்சியில் சமத்துவ கட்சியின் மே தின கூட்டம்

சர்வதேச தொழிலாளர் தினத்தை முன்னிட்டு சமத்துவக் கட்சியின் ஏற்பாட்டில் சமத்துவ மே தினம் கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.

இதன் போது பெண்கள் அமைப்பின் பிரதிநிதிகள், கடற்றொழிலாளர்கள் அமைப்பு, விவசாய அமைப்பு, கல்விச் சமூகம், உள்ளிட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டு உரையாற்றினார்கள்.

இங்கு உரையாற்றிய சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார்,

வரலாறு சந்தித்திராத பொருளாதார நெருக்கடியை நாட்டு மக்களின் மீது ஆளும் வர்க்கம் சுமத்தியுள்ளது. இதனால் தங்கள் அளப்பரிய பங்களிப்பை நாட்டுக்காகச் செலுத்துகின்றபோதும் உழைக்கும் மக்கள் அநியாயமாகத் தண்டிக்கப்படுகிறார்கள்.

உணவுக்கே வழியற்ற ஆபத்தான நிலையை நோக்கி நாடு சென்று கொண்டிருக்கிறது. ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்குப் பொருத்தமான, நிலையான தீர்வைக் காண்பதற்கு நீண்டகால வேலைத் திட்டத்தை முன்னெடுப்பதற்கு அரசாங்கம் இதுவரை பெரிதாக முயற்சிக்கவில்லை எனவே புதிய மாற்றமொன்றைக் கோரும் வகையில் மாற்றத்துக்கான சமத்துவ மேதின நிகழ்வை நடாத்துகின்றோம் எனக் குறிப்பிட்டார்.



# குரு பகவானின் அருளைப் பெற உகந்த வியாழக்கிழமை விரதம்





குரு பகவானின் அருளை பெறுவதற்குரிய ஒரு சிறந்த விரதம் தான் வியாழக்கிழமை விரதம். இந்த விரதத்தின் மகிமை பற்றியும், அதனால் ஏற்படும் பலன்கள் என்ன என்பதையும் இங்கு அறிந்து கொள்ளலாம். வாரத்தில் வரும் ஏழு நாட்களில் வியாழக்கிழமை பிரகஸ்பதி எனப்படும் குரு பகவான் வழிபாட்டிற்குரிய தினமாக இருக்கிறது. எந்த ஒரு மாதத்திலும் சுக்ல பட்சம் எனப்படும் வளர்பிறையில் வரும் வியாழக்கிழமைகளில் இந்த விரதத்தை மேற்கொள்ளலாம். ஒரு வருடத்தில் தொடர்ந்து 16 வளர்பிறை வியாழக்கிழமைகளில் இந்த வியாழ விரதம் மேற்கொள்வது மிகுந்த நன்மைகளை தரும்.

3 ஆண்டு காலம் இந்த விரதத்தை சரியான படி அனுஷ்டிப்பவர்களுக்கு குரு பகவானின் பூரண அருள் வாழ்நாள் முழுவதும் கிடைக்கும்.பிரகஸ்பதி எனும் குரு பகவானை குறித்து மேற்கொள்ளப்படும் இந்த வியாழக்கிழமை விரத தினத்தன்று அதிகாலையிலே எழுந்து தலைக்கு ஊற்றி குளித்து முடித்து விட வேண்டும்.

பிறகு மஞ்சள் நிற ஆடைகளை அணிந்து கொண்டு, எதுவும் உண்ணாமல், அருந்தாமல் அருகிலுள்ள கோயிலின் நவகிரக சந்நிதிக்கு சென்று குரு பகவானுக்கு மஞ்சள் நிற பூக்கள் சாற்றி, மஞ்சள் நிற இனிப்புகள் நைவேத்தியம் செய்து, சந்தனம், மஞ்சள் போன்றவற்றை கொண்டு குரு பகவானுக்கு அபிஷேகம் செய்ய வேண்டும். பின்பு குங்குமப்பூ கலந்த பசும்பாலை கொண்டு குரு பகவானுக்கு அபிஷேகம் செய்து வழிபட வேண்டும். விரதம் இருக்கும் நாள் முழுவதும் உணவேதும் அருந்தாமல் இருப்பது விரதத்தின் முழுமையன பலன்களை தரும். அன்றைய தினம் குரு பகவானுக்குரிய மந்திரங்கள், ஸ்தோத்திரங்கள் போன்றவற்றை படிப்பது நல்லது.

மாலையில் மஞ்சள் நிற இனிப்புகள், ஆடைகள் போன்றவற்றை ஏழ்மையில் இருப்பவர்களுக்கு தானமளிப்பது நல்லது.

இரவில் உப்பு சேர்க்காத உணவை சமைத்து சாப்பிட்டு வியாழக்கிழமை விரதத்தை நிறைவு செய்யலாம். குரு பகவானுக்குரிய இந்த வியாழக்கிழமை விரதத்தை முறையாக மேற்கொள்பவர்களுக்கு வாழ்வில் பல யோகங்கள் ஏற்படும். சரியான காலத்தில் திருமணம் நடக்கும். ஜாதகத்தில் குரு கிரக தோஷம் இருப்பவர்களுக்கு இந்த விரதம் அனுஷ்டிப்பதால் அவை நீங்கும்.

தொழில், வியாபாரங்களில் சரியான வருமானம் இல்லாதவர்கள், குடும்ப பொருளாதார நிலை சிறப்பாக இல்லாதவர்கள் இந்த விரதம் மேற்கொள்வதால் குரு பகவானின் அருள் கிடைக்கப்பெற்று தொழில், வியாபாரங்களில் சிறந்து செல்வ வளம் பெருகும். மேலும் எதிர்பார்க்காத சிறந்த வாழ்க்கை உண்டாகும் என்பது நம்பிக்கை .

ஓம் சைவ மஞ்சரி

## மானுடவியல்

(தொடர்)

### கழற்சிங்க நாயனார்



71

**பெயர்:** கழற்சிங்க நாயனார்
**குலம்:** குறுநில மன்னர்
**பூசை நாள்:** வைகாசி பரணி
**அவதாரத் தலம்:** திருக்கச்சி
**முக்தித் தலம்:** திருக்கச்சி
**வரலாற்று சுருக்கம்:**

"கடல் சூழ்ந்த உலகெலாம் காக்கின்ற பெருமான்
காடவர்கோன் கழற்சிங்கன் அடியார்க்கும் அடியேன்"
திருத்தொண்டத்தொகை.

காடவர்குலத்திலே, பரமசிவனுடைய திருவடிகளையேயன்றி மற்றொன்றையும் அறியாத கழற்சிங்கநாயனாரென்பவர் ஒருவர் இருந்தார். அவர் பரமசிவனது திருவருள் வலிமையினால் வடபுலத்தரசர்களைப் போரிலே வென்று, அவர்கள் நாடுகளைக் கவர்ந்து எங்குஞ் சைவசமயந் தழைத்தோங்கும்படி அரசாண்டார்.

இப்படி யொழுகுநாளிலே மாதேவியோடு சிவஸ்தலங்கடோறுஞ் சென்று, சுவாமிதரிசனம் பண்ணித் திருத்தொண்டு செய்வாராகி,



திருவாரூரை அடைந்து திருக்கோயிலிலே பிரவேசித்துச் சுவாமியை வணங்கினார். அப்பொழுது அவருடைய மாதேவி திருக்கோயிலை வலஞ்செய்து, அங்குள்ள சிறப்புக்களெல்லாவற்றையுந் தனித்தனியே பார்த்துக்கொண்டு வந்து, திருமாலைகட்டும் மண்டபத்தின் பக்கத்திலே விழுந்து கிடந்த ஒரு புதுப்பூவை எடுத்து மோந்தாள். அங்கே வந்த செருத்துணைநாயனார் அதை கண்டார்.

உடனே செருத்துணைநாயனார் இதனைப் புஷ்பமண்டபத்துள் எடுத்து மோந்தாள் என்று நினைத்து, விரைந்து ஓடி வந்து, அவளைக் கூந்தலிலே பிடித்து இழுத்து வீழ்த்தி, அவளுடைய மூக்கைப் பிடித்துக் கத்தியினாலே அரிந்தார்.அவள் சோர்ந்து புலம்பினாள்.

அப்பொழுது கழற்சிங்கநாயனாரும் சுவாமி தரிசனஞ்செய்து கொண்டு, அவளுக்குச் சமீபத்தில் வந்து, அவளைப் பார்த்து, மிகக் கோபித்து, 'சிறிதும் அஞ்சாமல் இந்தக் கொடுஞ்செய்கையைச் செய்தவர்யாவர்" என்று வினாவினார்.

செருத்துணை நாயனார் "இவள் சுவாமிக்குச் சாத்தற்பாலதாகிய புஷ்பத்தை எடுத்து மோந்தமையால் நானே இப்படிச் செய்தேன்" என்றார். **(தொடரும்)**

கலாநிதி சிவஸ்ரீ
கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்



உடப்பூரின் வருடாந்த சித்திரைச் செவ்வாய் நிகழ்வு மிகவும் பக்தியாக புதன்கிழமை காலை(27) நடைபெற்றது. மாரியம்மன் அம்பாளின் அருளைப் பெற்றுக் கொள்ளும் முழு நோக்குடனும், இந்த நிகழ்வு காலம் காலமாக நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கதாகும். இந்த வெப்ப காலத்தில் மக்களுக்கு அம்மை நோய் வருவதை நிவர்த்தி செய்யும் முகமாகவும், மழையை வேண்டியும் இது நடைபெறுகின்றது. (படங்கள்: உடப்பு குறூப் நிருபர்)

## அறநெறி அறிவுநொடி



**கே. ஈஸ்வரலிங்கம்**
**தமிழர் நற்பணி மன்றத் தலைவர்**

**19016) திருவண்ணாமலையில் கார்த்திகை தீபத்திருநாளன்று காலயில் ஏற்றப்படுவது என்ன தீபம் ?**
அணையா தீபம்
**19017) இந்த அணையா தீபத்தை என்ன பெயர் கொண்டு அழைப்பார்கள்?**
பரணிதீபம்
**19018) ஆறாதாரங்களில் திருவண்ணாமலையில் ஆதாரமாகத் திகழ்வது எது?**
மணிபூரகத் தலம்
**19019) திருவண்ணாமலையில் பவனி வரும் சோமஸ்கந்தரின் பெயர் என்ன?**
பக்தானுக்ரக சோமாஸ்கந்தர்
**19020) "கார்த்திகை அகல் தீபம்" என்னும் அஞ்சல் முத்திரை வெளியான ஆண்டு எது?**
1997 டிசம்பர் 12
**19021) அருணகிரிநாதர் கிளிவடிவில் முக்தி பெற்ற இடம் எது?**
திருவண்ணாமலை
**19022) இதனால் திருவண்ணாமலைக்கு ஏற்பட்ட பெயர் என்ன?**
கிளி கோபுரம்
**19023) கார்த்திகை நட்சத்திரம் எந்தெந்த தெய்வங்களுக்கு உரியது?**
சிவபெருமான், முருகப்பெருமான், சூரியன்
**19024) அருணாசலம் என்பதன் பொருள் என்ன?**
அருணம்+ அசலம் சிவந்த மலை
**19025) சிவாம்சமாகப் போற்றப்படும் ராம பக்தர் யார்?**
அனுமன்
**19026) நமசிவாய' என்று தொடங்கும் சிவபுராணம் எதில் இடம்பெற்றுள்ளது?**
திருவாசகத்தில்
**19027) தர்ம தேவதை நந்தி என்னும் பெயர் தாங்கி ஈசனைத் தாங்கி வருவதை எப்படி குறிப்பிடுவர்?**
அறவிடை
**19028) அறவிடை என்பதன் பொருள் என்ன?**
(அறம் தர்மம், விடைகாளை வாகனம்)
**19029) மனிதப் பிறவியில் அடைய வேண்டிய நான்கு உறுதிப் பொருள்கள் எவை?**
அறம், பொருள், இன்பம், வீடு (மோட்சம்)
**19030) சிவபெருமான் ஆடிய நாட்டியங்கள் எத்தனை?**
108 (நூற்றி எட்டு)
**19031) சிவபெருமானின் நடனத்தை காணும் பேறு பெற்ற பெண் அடியவர் யார்?**
காரைக்காலம்மையார்
**19032) "மனித்தப் பிறவியும் வேண்டுவதே இம்மாநிலத்தே' என்று நடராஜரிடம் வேண்டியவர் யார்?**
அப்பர் (திருநாவுக்கரசர்)
**19033) நடராஜரின் காலடியில் கிடக்கும் முயலகன் எதன் அடையாளம்?**
ஆணவம்
**19034) ஆணவம் அடங்கினால் என்ன நடக்கும்?**
ஆனந்தம் உண்டாகும்
**19035) மீனாட்சியம்மனை சியாமளா தண்டகம் என்னும் நூலில் போற்றிப் பாடியவர்....** மகாகவி காளிதாசர்
**19036) பஞ்ச சபையில் சித்திரசபையாகத் திகழும் தலம் எது?**
குற்றாலம்

## நாதப் பிரம்ம யோகம் - 17



முற்காலத்தில் போர்க்களத்தில் வீரத்துடனும், உற்சாகத்துடனும் சண்டையிடும் போர்வீரர்களை உருவாக்கும் உற்சாகமூட்டும் பாடகர்கள் இருந்தார்கள். இப்படியான இசையின் பயன்பாடுகள் மெதுவாக இந்திய வரலாற்றில் சமூகத்திலிருந்து வழக்கொழிந்து போயின. பிற்காலத்தில் இசை தாழ் உணர்ச்சிகளை உருவாக்குகிறது என்று சில மன்னர்களால் ஒதுக்கப்பட்டு இசைக் கலைஞர்கள் அவர்களின் இசைக் கருவிகளுடன் வெளியேற்றப்பட்டனர். இன்றும் இசை பயில்வதும், பயிற்சிப்பதும் சமூகத்தின் உயர்ந்த நிலையில் இருப்பவர்களுக்கு உரிய கலை இல்லை என்ற எண்ணம் இருக்கிறது. மிகச் சில இசைப் பள்ளிகளே உண்மையான சாஸ்திரீய சங்கீதத்தினை கற்பிக்கின்றன. இந்திய கலாசாரத்திலும், மெய்யியலிலும் இசையின் மகத்துவத்தை புரிந்து கொள்ள சாஸ்திரீய சங்கீதத்தினை முறையாக பயில்வது அவசியமாகின்றது.

இசையின் சூக்ஷ்ம சக்திகளையும், அது ஏற்படுத்தக்கூடிய பௌதிக நன்மைகளையும் உணர்ந்து கொண்ட ஒருவன் மிகக் கவனமாக தனது பயிற்சிக்கும் கேட்பதற்குமுரிய இசையினை சங்கீதத்தினை, மெல்லிசையுடன் தூய இசையாக சாஸ்திரீய (கர்நாடக, இந்துஸ்தானி) இசையாக தேர்ந்தெடுப்பது அவசியம்.

ஏற்கனவே கூறப்பட்டது போல சாஸ்திரீய சங்கீதம் நாதப் பிரம்மத்திலிருந்து இயற்கையாகத் தோன்றிய ஒன்று. சாஸ்திரங்கள் நாதபிரமம் வெளிப்பட்ட நிகழ்வினை நடராஜரின் பேரதிர்வுடன் கூடிய தாண்டவத்திலிருந்து வெளிப்பட்ட அதிர்விலிருந்து தோன்றிய நாதமாக குறிப்பிடுகிறது. நாரதரின் பக்தியினை வீணையின் ஸ்வரத்துடன் அதிகரிப்பதாக கூறப்படுகிறது. புராதன காலத்தில் இசையானது ஸ்வரயோகம், நாதயோகம் ஆகிய இரண்டினதும் அடிப்படையிலேயே உருவாக்கப்பட்டது.

இடைக்காலத்தில் சமூகம் உயர் யோக உணர்விலிருந்து நழுவி இலக்கியம், கலைகள், இசை என்பவை தாழ் உணர்ச்சி பொழுதுபோக்காகவும், காம எண்ணங்களை வெளிப்படுத்துவதாகவும், சுய நலத்திற்காக பயன்படும் ஒன்றாகவும் மாறியது.

நவீன கால அறிவியல் வளர்ச்சி இசையினைப் பற்றிய புதிய பரிணாமத்தைப் புரிந்து கொள்ள உதவியுள்ளது. பலவிதமான பரிசோதனைகள் இசை எப்படியான தாக்கத்தை தாவரங்களில், விலங்குகளில், பூச்சிகளில், மனிதர்களில் ஏற்படுத்துகிறது என்ற விபரங்களைத் தந்துள்ளது. இசையினால் தாவரவியல் உலகில் புற்களின் வளர்ச்சி வீதம், பெரிய, அதிக நிறையுடைய மரக்கறி, பழங்களை தாவரங்கள் உற்பத்தி செய்கின்றன, தாவரங்கள் ஆரோக்கியமாக வளர்கின்றன போன்ற அறிவியல் உலகினால் முறையான பரிசோதனை மூலம் அவதானிக்கப்பட்டுள்ளன. சில தாவர இனங்களில் இசையினை தொடர்ந்து கேட்கும் தாவரங்களின் மரப்பட்டை, வைரம் என்பவை மிகத் தடிப்பாக உறுதியாக வளர்கின்றன என்ற முடிவுகள் பெறப்பட்டுள்ளன.

**(தொடரும்)**

பண்டிட் ஸ்ரீ ராம் சர்மா ஆச்சார்யா
தமிழில்: ஸ்ரீ ஸக்தி சுமனன்



கொழும்பு முகத்துவாரம் ஸ்ரீ வெங்கடேஸ்வர ஆலயத்தின் வசந்தோற்சவ இரதபவனி (26.04.2022) ஆலய வெளிவீதியில் வலம் வருகையில் பெண் பக்தர்கள் வடம் பிடித்து இரதத்தை இழுப்பதை படத்தில் காணலாம். (படம்: வடகொழும்பு தினகரன் நிருபர் )

# சர்வதேச செய்திகள்

## பாகிஸ்தானில் மற்றுமொரு போலியோ சம்பவம் பதிவு



பாகிஸ்தானில் இரண்டாவது போலியோ தொற்று சம்பவம் வடக்கு வசிரிஸ்தானில் இரண்டு வயது சிறுமி ஒருவரிடம் பதிவாகியுள்ளது. இதனை சுகாதார அமைச்சின் பேச்சாளரும் உறுதி செய்துள்ளார்.

கடந்த ஏப்ரல் 22 ஆம் திகதி முதல் சம்பவம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் நிலையிலேயே மற்றொரு தொற்று சம்பவம் பதிவாகியுள்ளது. நாட்டில் மேலும் போலியோ வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டிருப்பது குறித்து சுகாதார அமைச்சு கவலையை வெளியிட்டுள்ளது.

போலியோ தொற்றை ஒழிப்பதற்காக அவசர அடிப்படையில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக சுகாதார அமைச்சர் அப்துல் காதிர் படேல் தெரிவித்துள்ளார். அண்மைய ஆண்டுகளில் போலியோ வேகமாக குறைந்து வந்த நிலையில் அண்டைய நாடான ஆப்கானுடன் உலகில் போலியோ பாதிப்பு உள்ள நாடாக பாகிஸ்தான் தொடர்ந்து நீடிக்கிறது.

## சீன கட்டட இடிபாட்டில் பலரும் சிக்கித் தவிப்பு



மத்திய சீனாவில் இடிந்துவிழுந்த கட்டடத்தில் பலடஜன் பேர் சிக்கி இருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். உயிர் தப்பியோரைத் தேடி மீட்புப் பணிகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.

எட்டு மாடிகள் கொண்ட இடிந்த கட்டடத்தில் ஹோட்டல் ஒன்று, அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் திரையரங்கு ஒன்று இருந்துள்ளது. ஹுனான் மாகாணத்தின் சங்ஷா நகரில் இருக்கும் இந்தக் கட்டடம் கடந்த வெள்ளிக்கிழமை மாலை இடிந்து விழுந்தது.

தொடர்ந்து 23 பேர் சிக்கி இருப்பதோடு மேலும் 39 பேரின் தொடர்பு துண்டிக்கப்பட்டிருப்பதாக சங்ஷா மேயர் தெரிவித்துள்ளார். இதுவரை எந்த உயிரிழப்பும் பதிவாகாத நிலையில் இடிபாடுகளில் இருந்து ஐவர் மீட்கப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் ஒன்பது பேர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருப்பதாக பொலிஸார் நேற்று தெரிவித்தனர். கட்டடத்தின் உரிமையாளரும் கட்டடத்தின் வடிவமைப்பு, கட்டுமானம் ஆகியவற்றுக்கு பொறுப்பான மற்ற மூவரும் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டதாகச் சங்ஷா பொலிஸார் தெரிவித்தனர்.

## கொவிட்-19: பீஜிங்கில் கடும் கட்டுப்பாடு அமுல்



சீனத் தலைநகர் பீஜிங்கின் குடியிருப்பாளர்கள் பொது இடங்களுக்கு நுழைய கொவிட் இல்லை என்பதை உறுதி செய்யும் சோதனை முடிவை காண்பிக்க வேண்டும் என கடும் கட்டுப்பாடு கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்தக் கட்டுப்பாடு எத்தனை காலம் நீடிக்கும் என்பது உறுதி செய்யப்படாதபோதும் நகரில் ஐந்து நாள் பொது விடுமுறை ஆரம்பிக்கப்படும் நிலையிலேயே இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இதன்படி வரும் மே 5 ஆம் திகதியில் இருந்து பொது போக்குவரத்தை பயன்படுத்த கொரோனா இல்லை என்பதை உறுதி செய்ய வேண்டி உள்ளது.

கொரோனா பரவல் அதிகரித்து வரும் நிலையில் அதனை கட்டுப்படுத்த சீனா போராடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. வேறு நாடுகளை போலன்று கொரோனாவை முழுமையாக துடைத்தொழிக்கும் கொள்கையை சீனா பின்பற்றி வருகிறது. எனினும் கடுமையான பொது முடக்கம் போன்ற நடவடிக்கைகள் பொதுமக்களிடையே நீர்வாகத்தின் மீது கோபத்தை ஏற்படுத்தியுள்ளது.

பீஜிங்கில் கடந்த ஏப்ரல் 22 தொடக்கம் 295 புதிய நோய்த் தொற்று சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

## பாராளுமன்றில் ஆபாச படம் பார்த்த எம்.பி இராஜினாமா



பிரிட்டன் பாராளுமன்ற கீழவை அமர்வின்போது இரண்டு முறை கைபேசியில் ஆபாச படத்தை பார்த்ததாக எம்.பி நீல் பாரிஷ் ஒப்புக்கொண்ட நிலையில், கன்சர்வேட்டிவ் கட்சி அவரை நீக்கியுள்ளது. இதையடுத்து, எம்.பி பதவியிலிருந்து விலகியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற நிலைக்குழு ஆணையரிடம் ஆபாச படத்தை பார்த்ததாக ஒப்புக்கொண்ட நிலையிலேயே, நீல் பாரிஷை கன்சர்வேட்டிவ் கட்சி நீக்கியது. விசாரணை நடைபெறும் வரை, எம்.பி பதவியில் தொடர்வேன் என அவர் கூறியிருந்த நிலையில், சனிக்கிழமை தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

"இறுதியில், எனது குடும்பம், தொகுதி மக்கள் ஆகியோர் என்னால் கோபமடைந்திருப்பதையும் காயமடைந்திருப்பதையும் காண முடிந்தது. பதவியில் தொடரத் தகுதியற்றவன் என்பதையும் உணர்ந்தேன்" என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

விவசாயியான பாரிஷ் ஆபாச படம் பார்த்தது குறித்து விளக்குகையில், "ஒரு இணையதளத்தில் டிராக்டர்கள் குறித்து தேடிக் கொண்டிருக்கும்போது தற்செயலாக தடை செய்யப்பட்ட ஆபாச படத்தை பார்க்க நேர்ந்தது. பார்க்க கூடாது தான், ஆனால், அதை சிறிது நேரம் பார்த்தேன்" என்றார்.

## உக்ரைனின் முற்றுகை நகரில் இருந்து மக்கள் வெளியேற்றம்



உக்ரைனின் தெற்கு நகரான மரியுபோலில் உக்ரைனிய துருப்புகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் கடைசி பகுதியான அசொவ்ஸ்டால் உருக்கு ஆலையில் இருந்து சுமார் 20 பொதுமக்கள் வெளியேறியுள்ளனர்.

இந்த பாரிய கைத்தொழில் வலயத்தை முடக்குவதற்கு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் கடந்த வாரம் உத்தரவிட்ட நிலையில் அந்தப் பகுதியில் இருந்து வெளியேறும் முதல் குழு இதுவாகும்.

அங்கு தொடர்ந்து சிக்கி இருப்பதாக கூறப்படும் சுமார் 1,000 பொதுமக்களை விடுவிப்பது தொடர்பான பேச்சுவார்த்தை தொடர்ந்து இடம்பெற்று வருகிறது.

இதேநேரம் கிழக்கு உக்ரைனில் தமது தாக்குதல்களை தொடர்ந்து முன்னெடுத்து வருவதாக ரஷ்யா குறிப்பிட்டுள்ளது.

மரியுபோல் நகரை கைப்பற்றியதாக ஒரு வாரத்திற்கு முன் ரஷ்யா அறிவித்த நிலையில் "விமானங்கள் பறக்க முடியாத வகையில் இந்த கைத்தொழில் வலயத்தை முடக்கும்படி", புட்டின் தனது துருப்புகளுக்கு உத்தரவிட்டார்.

எனினும் இந்த உருக்கு ஆலையில் இருந்து ஆறு சிறுவர்கள் உட்பட 25 பொதுமக்கள் வெளியேறியதாக ரஷ்ய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. எனினும் இவர்கள் எங்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள் என்பது பற்றி கூறப்படவில்லை.

எனினும் 20 பெண்கள் மற்றும் சிறுவர்களே வெளியேறியதாக அந்த உருக்காலைக்குள் இருக்கும் உக்ரைன் படையினர் குறிப்பிட்டுள்ளனர்.

மரியுபோல் நகரை கைப்பற்றுவது உக்ரைனின் ஒட்டுமொத்த தெற்குக் கடற்கரையையும் கைப்பற்றும் ரஷ்யாவின் திட்டத்திற்கு உதவியாக உள்ளது. இது 2014 ஆம் ஆண்டு ரஷ்யா கைப்பற்றிய கிரிமியாவுடன் கிழக்கு உக்ரைனில் உள்ள டொனட்ஸ்க் மற்றும் லுஹன்ஸ் போன்ற ரஷ்ய ஆதரவு பிரிவினைவாதிகளை ஒன்றிணைப்பதாக அமையும். அதேபோன்று மொடோவாவில் உக்ரைனிய மேற்கு எல்லை பகுதியில் இருக்கும் ரஷ்ய ஆதரவு பகுதியை அணுக முடியுமானதாக இது அமையும்.

## ஈரான்–ஆப்கானிய உறவில் முறுகல்



ஈரானில் புனித சன்னதி ஒன்றில் ஆப்கானிய குடியேறி ஒருவரால் ஈரானிய மதத் தலைவர்கள் மூவர் கத்திக்குத்து தாக்குதலுக்கு இலக்காகி இருவர் கொல்லப்பட்டு மற்றையவர் படுகாயம் அடைந்த நிலையில் ஈரான் மற்றும் ஆப்கான் இடையே எல்லை பதற்றத்திற்கு மத்தியில் இனரீதியான மோதலும் வெடித்துள்ளது.

வடகிழக்கு நகரான மஷ்ஹாதில் உள்ள இமாம் ரேசா சன்னதியில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. இரு நாடுகளுக்கும் இடையே இராஜதந்திர பதற்றம் தீவிரம் அடைந்திருக்கும் நிலையிலேயே இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

இரு நாடுகளும் தமது பொது எல்லையில் துருப்புகளை குவித்திருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

நிலைமையை தணிக்க இரு நாடுகளும் பேச்சுவார்த்தை நடத்துவதாக ஈரான் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## கினியாவில் சிவில் ஆட்சியை அமைக்க இராணுவம் உறுதி



கினியாவில் 39 மாத நிலைமாற்றக் காலத்துக்குப் பின் சிவில் அரசை கொண்டுவரப்போவதாக அந்நாட்டு இராணுவ அரசு அறிவித்துள்ளது.

இந்த பிரேரணை கினிய பாராளுமன்றத்திற்கு விடப்படுவதாக இராணுவ அரசின் தலைவர் கர்னல் மமாடி டவும்போயா தொலைக்காட்சியில் உரையாற்றும்போது தெரிவித்துள்ளார். அவரது இராணுவம் கடந்த ஆண்டு ஜனநாயக முறையில் தேர்வான ஜனாதிபதியை பதவி கவிழ்த்தார். இதனை ஆரம்பத்தில் பல கினிய நாட்டவர்களும் வரவேற்றனர். எனினும் ஆட்சியை சிவில் அரசுக்கு கையளிக்கத் தவறியது குறித்து இராணுவ ஆட்சியின் மீது அதிருப்தி வலுத்து வருகிறது.

இந்நிலையில் சிவில் அரசை அமைப்பதற்கு மேற்கு ஆபிரிக்க நாடுகளின் கூட்டணி கடந்த திங்கட்கிழமை கெடு விதித்ததை அடுத்தே கினிய இராணுவம் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

### இரண்டாம் உலகப்போர் விவகாரம்:

## இத்தாலிக்கு எதிராக சர்வதேச நீதிமன்றில் ஜெர்மனி வழக்கு



நாஜி காலத்து போர் குற்றங்களுக்காக இத்தாலி இழப்பீடு கோர முயற்சிப்பது தொடர்பில் இத்தாலிக்கு எதிராக ஜெர்மனி ஐ.நா உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்துள்ளது.

இத்தாலி இழப்பீடு கோருவது ஏற்க முடியாதது என்று 2012 இன் தீர்ப்பு ஒன்று கூறுகின்றபோதும் அந்த நாடு உள்நாட்டில் தொடர்ந்து வழக்குகளை தொடுத்து வருவதாக சர்வதேச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில் ஜெர்மனி குறிப்பிட்டுள்ளது.

இந்தத் தீர்ப்புக்கும் பின்னரும் இத்தாலியில் 25க்கும் அதிகமான வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருப்பதாக அதில் கூறப்பட்டுள்ளது. சில வழக்குகளில் ஜெர்மனி இழப்பீடு வழங்கவும் தீர்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. இதில் தற்போது இடம்பெற்று வரும் வழக்குகளில் இத்தாலியில் உள்ள ஜெர்மனிக்கு சொந்தமான சொத்துகள் பறிமுதல் செய்யப்பட வாய்ப்பு உள்ள நிலையிலேயே ஜெர்மனி ஐ.நா நீதிமன்றம் சென்றுள்ளது. வரும் மே 25 ஆம் திகதி இத்தாலி நீதிமன்றம் ஒன்று வழங்கவுள்ள தீர்ப்பில் ஜெர்மனியின் கலாசார, வரலாற்று மற்றும் கல்வி நிறுவனங்கள் இருக்கும் கட்டிடங்கள் உட்பட சில கட்டடங்களை வலுக்கட்டாயமாக விற்பது பற்றி தீர்ப்பு வழங்கப்படவுள்ளது.

இந்தப் பிரச்சினை தொடர்பில் 2008 ஆம் ஆண்டு இத்தாலி உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் 1944 இல் டுகானியில் ஜெர்மனி படையால் கொல்லப்பட்ட 203 பேரில் ஒன்பது பேரின் உறவினர்களுக்கு சுமார் 1 மில்லியன் யூரோக்களை ஜெர்மனி செலுத்த வேண்டும் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. எனினும் 1945 இல் இரண்டாம் உலகப் போர் முடிந்தது தொடக்கம் நாடுகளுக்கு ஏற்கனவே பல பில்லியன் யூரோக்களை வழங்கி இருப்பதாக ஜெர்மனி வாதிடுகிறது.

## தலிபான் ஆட்சி: ஆப்கானில் மனித உரிமைகளில் வீழ்ச்சி



தலிபான்கள் ஆப்கானிஸ்தானின் ஆட்சியை ஏற்ற பின்னர் அந்நாட்டில் மனித உரிமைகள் மிக மோசமாக வீழச்சியடைந்துள்ளதாக அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அந்தோனி பிளிங்கன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் இராஜாங்கத் திணைக்களம் 2021 ஆம் ஆண்டுக்கான மனித உரிமைகள் அறிக்கையை வெளியிட்டுள்ளது. இவ்வறிக்கை தொடர்பில் கருத்து தெரிவித்துள்ள இராஜாங்கச் செயலாளர் பிளிங்கன், "ஆப்கானிஸ்தானில், தலிபான்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதைத் தொடர்ந்து அந்நாட்டில் தீவிர மனிதாபிமான நெருக்கடி ஏற்பட்டுள்ளதோடு மனித உரிமைகளும் அங்கு பெரிதும் வீழச்சியடைந்துள்ளன. குறிப்பாக ஆர்ப்பாட்டக்காரர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் பெண்கள் தன்னிச்சையாக தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். முன்னாள் அரசாங்கத்தின் பாதுகாப்புப் படையினருக்கு எதிரான பழிவாங்கல்களும் தொடர்ந்த வண்ணமுள்ளன. பெண்களும் சிறுமிகளும் கல்வி கற்றல் அல்லது வேலை வாய்ப்புக்களில் ஈடுபடல் என்பன தொடர்பில் கட்டுப்பாடுகளும் தொடர்ந்தும் அதிகரித்து வருகின்றன என்று குறிப்பிட்டுள்ளார்.

## உக்ரைனுக்கு ஆயுங்கள் வழங்குவதை நிறுத்த அமெரிக்கா, நேட்டோவிடம் ரஷ்யா வலியுறுத்து



உக்ரைன் பிரச்சினையை தீர்ப்பதற்கு உண்மையில் விரும்பினால் உக்ரைனுக்கு ஆயுதம் வழங்குவதை நிறுத்தும்படி அமெரிக்கா மற்றும் நேட்டோவை ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்கெய் லவ்ரொவ் மீண்டும் ஒருமுறை வலியுறுத்தியுள்ளார். சீன அரச ஊடகத்திடமே இதனை அவர் தெரிவித்துள்ளார். "அமெரிக்கா மற்றும் நேட்டோ உண்மையில் உக்ரைன் பிரச்சினையை தீர்க்க விரும்பினால், எல்லவற்றுக்கும் முதல், அவர்கள் விழித்துக்கொள்ள வேண்டும் என்பதோடு உக்ரைன் அரசுக்கு ஆயுதம் மற்றும் வெடிபொருட்களை வழங்குவதை நிறுத்த வேண்டும்" என்று லவ்ரொவ் கூறினார். ரஷ்ய படையெடுப்புக்கு எதிராக போராடும் உக்ரைனுக்கு அமெரிக்கா மற்றும் பல ஐரோப்பிய நாடுகள் பல பில்லியன் டொலர் பெறுமதியான ஆயுதங்களை வழங்கி வருகின்றன. உக்ரைனுக்கு 33 பில்லியன் டொலர் உதவி அளிக்க அமெரிக்க பாராளுமன்றத்தை அந்நாட்டு ஜனாதிபதி கேட்டுக்கொண்டுள்ளார்.

உக்ரைனுக்கு தொடர்ச்சியாக இராணுவ உதவிகளை வழங்குவது பற்றி அமெரிக்காவை ரஷ்யா தொடர்ந்து எச்சரித்து வருகிறது. உக்ரைன் மீதான ரஷ்ய படையெடுப்பு மாதத்தை தாண்டி நீடிக்கும் நிலையில் தலைநகர் கியேவை கைப்பற்றும் ரஷ்யாவின் முயற்சி தோல்வி அடைந்த நிலையில், அது தற்போது கிழக்கில் டொன்பாஸ் பிராந்தியத்தை இலக்கு வைத்து தாக்குதல்களை தீவிரப்படுத்தியுள்ளது.

# கிழக்கின் குரல்









உடலாலும் மனத்தாலும் சேவை செய்து இறைவனை அடையலாம் என வழிகாட்டி சரியைத்தொண்டின் மூலம் முக்தியை அடைந்த அப்பர் சுவாமிகள் எமக்கு பல அற்புதமான தேவாரங்களை அருளிச் சென்றவர். இவ்வாறு அற்புதமான தேவாரங்களை அருளிச் சென்ற அப்பர் சுவாமிகளின் குரு பூஜை தினத்தை முன்னிட்டு ஆலையடிவேம்பு பிரதேச இந்துமாமன்றம் ஏற்பாடு செய்த விசேட பூஜை நிகழ்வுகள் ஆலையடிவேம்பு பிரதேச இந்துமாமன்ற கட்டடத்தில் நடைபெற்றது. மன்றத்தின் ஆயுட்கால தலைவர் வே.சந்திரசேகரம் தலைமையில் இடம் பெற்ற குரு பூஜை வழிபாடுகளில் அப்பர் சுவாமிகள் அருளிய தேவாரங்கள் பாடப்பட்டதுடன் அப்பர் சுவாமிகளின் அற்புதங்கள் பற்றிய சொற்பொழிவுகளும் சமயப்பெரியோர்களால் ஆற்றப்பட்டன. பின்னர் அப்பர் சுவாமிகளின் திருவுருவப்படத்திற்கு கூடியிருந்த அடியார்கள் பூச்சொரிந்து வழிபாடுகளில் ஈடுபட்டனர். இடம்பெற்ற வாழிபாட்டுக்கிரியைகளில் அம்பாறை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

வாச்சிக்குடா விஷேட நிருபர்

## காட்டு யானைகளின் தொல்லை

**ஒலுவில் விசேட நிருபர்**

ஒலுவில் அஷ்ரப் நகர் மீள் குடியேற்றக் கிராமத்தில் அதிகரித்து காணப்படும் காட்டு யானைகளின் தொல்லை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

திண்மக் கழிவு முகாமைத்துவ நிலையத்திற்கு வரும் யானைக் கூட்டம இரவு நேரங்களில் கிராமங்களுக்குள் உட்புகுந்து வீட்டுத் தோட்டங்களையும், சேனைப் பயிர்களையும் சேதப்படுத்தி வருவதால் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டடுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

தற்போது சிறுபோக வேளான்மைச் செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் நெற் பயிர்களை துவசம் செய்வதாகவும் தெரிவிக்கின்றனர்.

இக் ககிராமத்தில் வாழும் மக்கள் பீதியின் காரணமாக மாலை நேரங்களில் தங்கள் குடியிருப்பை விட்டு வெளியேறி பாதுகாப்பை தேடி தங்கள் குழந்தைகளுடன் பாதுகாப்பான இடங்களுக்கும் சென்று காலையில் வீடு திரும்பும் நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

பாடசாலை மாணவர்கள், பெண்கள், சிறுவர்கள், நோயாளர்கள் போன்றோர் வெகுவாக பாதிக்கப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டள்ளது. அத்துடன் எல்லைக்கிராமங்களான சம்புநகர், ஹிறாநகர், ஆலிம்நகர் ஆகிய பிந்தங்கிய பிரதேசங்களிலும் யானைத் தொல்லை அதிகரித்து காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அக்கரைப்பற்றில் ஒரு மாதத்தில் 30 டெங்கு நோயாளர்கள்

**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**

அக்கரைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட பிரதேசங்களில் இம்மாதம் 30 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டு வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதனால், எதிர்வரும் வாரத்தை டெங்கு அற்ற வாரமாக பிரகடனப்படுத்துவதுடன், இராணுவத்தினர், பொலிஸார், சுகாதார கள உத்தியோகத்தர்கள் அனைவரும் வீடுகளுக்கு சென்று பரிசோதனை செய்யவுள்ளதாக அக்கரைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எப்.எம். ஏ.காதர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

குறிப்பாக வீடுகளின் உள்ள பகுதியிலே டெங்கு உருவாகுவதனால், தங்களின் வீடுகளில் உள்ள கிணறுகள், சின்கிலிருந்து வடிந்தோடும் நீருக்கு வைக்கும் பாத்திரங்கள், தண்ணீர் தட்டுப்பாட்டினை நிவர்த்தி செய்யும் முகமாக நீரை சேமித்து வைத்துள்ள பாத்திரங்கள், குளிர் சாதனப்பெட்டியின் பின் புறத்தில் தேங்கி இருக்கும் நீர் என்பனவற்றில் அதிகமான நுளம்பின் குடம்பிகள் இருப்பதாக விசேடமாக அவதானிக்கப்பட்டுள்ளதாகவும் டாக்டர் தெரிவித்துள்ளார்.

எனவே, வீடுகள், சுற்றுப்புறச் சூழல்கள் அல்லது வளவுகளில் நுளம்பு பரவக்கூடிய இடங்கள் அல்லது நீர்க்குடம்பிகள் காணப்படுமாயின் உரியவர்களுக்கெதிராக பாரபட்சமின்றி சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் டாக்டர் காதர் தெரிவித்துள்ளார்.

## நன்னீர் மீன்வளர்ப்பு திட்டங்கள்

**வாச்சிக்குடா விஷேட நிருபர்**

எகெட் கரிஸ்தாஸ் நிறுவனத்தின் ஏற்பாட்டில் அம்பாரை மாவட்டத்திலும் நன்னீர் மீன்வளர்ப்பு திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் அதன் அறுவடையும் நடைபெற்றது.வறுமைக்கான காரணத்தை கவனத்தில் கொள்ளலும் உணவு பாதுகாப்பை உறுதி செய்தலும் எனும் தலைப்பின் கீழ் இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.இதன் ஒரு கட்டமாக ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவின் தீவுக்காலை பிரிவில் செபஸ்தியார் சமூக மட்ட அமைப்பின் வீட்டுத்தோட்ட பயனாளி இருவருக்கு வழங்கப்பட்ட தலாப்பியா இன வகையான நன்னீர் மீன்வளர்ப்பு திட்டத்தின் கீழான அதன் அறுவடையும் இடம் பெற்றது.

மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட எகெட் கரிதாஸ் நிறுவனத்தின் இயக்குனர் அருட் தந்தை ஏ.ஜேசுதாசன் தலைமையின் கீழ் இடம்பெற்ற நிகழ்வில் தீவுக்காலை செபஸ்தியன் அருட்தந்தை ஜெரிஸ் டன் வின்சன்ற் திட்டமிடல் பொறுப்பதிகாரி சுபாகரன் மற்றும் கள உத்தியோகத்தர் நியூட்டன் நன்னீர் மீன் வளர்ப்பு உத்தியோகத்தர் ரவிக்குமார் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

இங்கு அறுவடை செய்யப்பட்ட மீன் சிறந்த விலைக்கு விற்பனை செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.



## போக்குவரத்து சட்ட திட்டங்களை கடைப்பிடிக்க பணிப்பு

**ஒலுவில் விசேட நிருபர்**

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் போக்குவரத்து சட்ட திட்டங்களை கடைப்பிடித்து வாகனங்களை செலுத்துமாறு, அக்கரைப்பற்று பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, பிரதான பொலிஸ் பரிசோதகர் டபிள்யூ.எம்.எஸ்.பி. விஜயதுங்க அறிவித்துள்ளார்.

அக்கரைப்பற்று, ஆலையடி வேம்பு, அட்டாளைச்சேனை, பாலமுனை, ஒலுவில் ஆகிய பிரதேசங்களில் கடந்த 04 மாதங்களில் அதிகமான வீதி விபத்துக்களும் உயிர்ச் சேதங்களும் ஏற்பட்டுள்ளன.

வாகன ஓட்டுனர்கள் வீதி ஒழுங்கினையும், நாட்டின் சட்டதிட்டங்களையும் பேணி வாகனங்களை செலுத்துமாறு கேட்டுள்ளார்.

போக்குவரத்து நடைமுறைகளை மீறும் வாகன சாரதிகள் கைது செய்யப்பட்டு அவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவித்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் செல்பவர்கள் பாதுகாப்பு தலைக்கவசம் அணிந்து, சாரதி மற்றும் வாகன அனுமதிப்பத்திரங்களை தன்வசம் வைத்திருக்குமாறும் கேட்டுள்ளார்.

உள்வீதிகள் காபட், கொங்கிறீட் வீதி போடப்பட்டுள்ளதால் உள்வீதி என்று நினைத்துக் கொண்டு பாதுகாப்பு தலை கவசமில்லாமல் செல்ல வேண்டாம். உள்வீதியில் தான் அதிகமான விபத்துக்கள் ஏற்படும் மரணங்களும் ஏற்பட்டுள்ளது.

மதுபோதையில் மோட்டார் சைக்கிள் வாகனங்கள் ஓட்ட வேண்டாம். ஆபத்தை ஏற்படுத்தும், வாகன சாரதிகள் வீதி அருகில் வீதி சம்பந்தமான விளக்க குறியீடுகள் போடப்பட்டுள்ளது. அதை அவதானித்து வாகனத்தை செலுத்துமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

முச்சக்கர வண்டி சாரதிமார் பாடசாலை பிள்ளைகளை ஏற்றிச் செல்லும் போது மேலதிகமான பிள்ளைகளை ஏற்றிச் செல்ல வேண்டாம், பாத சாரிகள் வீதியைக் கடக்கும் போது அருகில் உள்ள பாதசாரி கடவை ஊடாக வீதியை கடக்க வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## கிண்ணியா உலமா சபை ஏற்பாடு செய்த சர்வமத இப்தார் நிகழ்வு

**கிண்ணியா மத்திய நிருபர்**

அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபையின் கிண்ணியா கிளையினால் ஏற்பாடு செய்யப்பட்ட வருடாந்த இப்தார் நிகழ்வு நேற்று கிண்ணியா ஜம்மியத்துல் உலமா சபை காரியாலயத்தில் நடைபெற்றது.

கிண்ணியா உலமா சபை தலைவர் மௌலவி அஷ் ஷெஹ்ஏ.எம். ஹிதாயத்துல்லா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், திணைக்கள தலைவர்கள், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள், சர்வமத தலைவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இதன்போது கிண்ணியா உலமா சபைத் தலைவர் கருத்து தெரிவிக்கையில்,

மனிதர்களுக்கு இறை அச்சம் ஏற்படவேண்டும் என அல்குர்ஆன் கூறுகின்றது. அதனூடாகவே உள்ளத்தில் மாற்றம் ஏற்பட்டு நாட்டையும் மனித சமூகத்தையும் நேசிக்க கூடிய உலகை நாம் காண முடியும். இதற்காக வேண்டித்தான் இந்த நோன்பு விதியாக்கப்பட்டது.

தற்போது நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற ஒரு கஷ்டமான நிலையில் மனிதநேயத்தோடு மற்றவர்களுக்கு உதவி செய்வதற்கு இந்த மாதத்தை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கலந்துகொண்டசீனக்குடா ஸ்ரீ போதிராஜ விகாராதிபதியும் திருகோணமலை மாவட்ட ஐக்கிய சமயங்களின் ஒன்றிய ஆலோசகருமான அலுத்ஒய சத்தா திஸ்ய கருத்துத் தெரிவிக்கையில்,

நோன்பு என்பது இஸ்லாமிய மார்க்கத்தில் மிகவும் புனிதமான ஒரு கடமையாக இருக்கின்றது. இந்த நோன்பு மனிதனை பாவங்களிலிருந்து பாதுகாப்பதற்கு சக்தியை அளிக்கின்றது. அத்தோடு அதிகளவான தர்மங்களை செய்வதற்கு இது வழிகாட்டுகின்றது.

இவ்வாறான இப்தார் நிகழ்வு நோன்பாளிக்கு பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்துகின்ற ஒரு சந்தர்ப்பமாக இன்று கண்டு கொண்டேன். நபி உடைய வாழ்க்கை முறை இன ஐக்கியத்திற்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகும்.

சமயங்கள் அனைத்தும் மனிதனுக்கு நேர்வழி காட்ட வந்தவையாகும். சமயங்கள் தோன்றியதன் உண்மையான அர்த்தங்களை மனிதன் உணர்வுபூர்வமாக அறிந்து கொள்ளும் போதுதான் சமூகங்களுக்கிடையே சகவாழ்வும் சமாதானமும் உருவாகும் என்று தெரிவித்தார்.




உப்புவெளி குருமட அதிபரும் திருகோணமலை மாவட்ட ஐக்கிய சமயங்களின் ஒன்றிய ஆலோசகருமான அருட்தந்தை எஸ்.எஸ். ஜோன் பிள்ளை இந்நிகழ்வில் கருத்து தெரிவிக்கும் போது,

அயலவர்களின் உணர்வுகளையும் தேவைகளையும் பிறர் அறிந்து கொள்வதற்கு சிறந்த ஒரு மாதமாக ரமழான் இருக்கின்றது. இந்த மாதம் சிறப்பான சமூக கட்டமைப்பு ஒன்று உருவாவதற்கு துணை செய்கின்றது. எனது துறைசார் கற்கையின் போது இஸ்லாமிய மார்க்கத்தைதான் நான் அதிகம் விரும்பிப் படித்திருக்கிறேன்.

மிக மோசமான யுத்த சூழ்நிலையின் போது, எனது வாழ்வின் பெரும் பகுதியை இஸ்லாமியர்களோடு கழித்து இருக்கிறேன். அதனால் நான் முஸ்லிம்களில் பண்பாடு, பழக்க வழக்கங்களை நன்கு அறிவேன். இஸ்லாமியர்கள் உடைய வாழ்க்கை முறை மார்க்கத்தோடு இணைந்து இருப்பதை அவதானித்து இருக்கிறேன். மனிதன் பரிசுத்தமாவதற்கு ரமலான் மாதம் ஒரு சிறந்த வழிகாட்டியாகும் என்று தெரிவித்தார்.

## மடத்தடி ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலய பால்குட பவனி





வரலாற்றுப் பிரசித்தி பெற்ற மடத்தடி ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலய மகா கும்பாபிஷேகத்தை அடுத்து (29.4.2022) வெள்ளிக்கிழமை ஆன்மிக கலாசார பவனியும் பால்குட பவனியும் இடம்பெற்றது. வெள்ளிக்கிழமை காலை காரைதீவு அட்டப்பள்ளம் பகுதிகளிலிருந்து புறப்பட்ட ஆன்மிக கலாசார நடைபவனி ஏழு மணி அளவில் மடத்தடி மீனாட்சி அம்மன் ஆலயத்தை வந்தடைந்தன. ஆலயத்தின் மேற்கே கும்பாபிஷேக மன்று பிரதிஷ்டை செய்யப்பட்ட சிவலிங்க பீடத்தில் பவனிக்கான பால் வழங்கப்பட்டு ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சண்முக மகேஷ்வர குருக்கள் தலைமையில் அங்கிருந்து வயல்வெளி ஊடாக ஆலய தலைவர் கி.ஜெயசிறில் முன்னே பிரதான பால்குடம் சுமந்து வர பால்குட பவனி இடம்பெற்றது. ஆலயத்தில் விசேட பூஜையும் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சண்முக மகேஷ்வர குருக்கள் முன்னிலையில் இடம்பெற்றது.

காரைதீவு குறூப் நிருபர்

## கல்முனையில் இம்முறை மேதினம் இடம்பெறவில்லை

**துறைநீலாவணை நிருபர்**

கல்முனையில் இவ்வாண்டுக்கான மேதின ஊர்வலங்கள். மற்றும் பகிரங்கப்படுத்தப்பட்ட முறையிலான மேதினக் கூட்டங்கள் எதுவும் இடம்பெறவில்லை.

இதே வேளை ஆண்டு தோறும் கல்முனையில் மேதினக் கூட்டம் மற்றும் மேதின ஊர்வலம் என்பவற்றை ஏற்பாடு செய்து நடாத்தும் தொழிற்சங்கம் மேதினத்தன்று மூடிய அறைக்குள் தமது தொழிற் சங்க நிருவாக கூட்டத்தை நடாத்தியதாகவும் இக் கூட்டத்தில் குறைந்த எண்ணிக்கையிலான அங்கத்தவர்கள் பங்குபற்றியதாக தொழிற் சங்க பிரதிநிதி ஒருவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தார்.

# நகர்வலம்



## இலங்கைக்கு உதவிக்கரம் நீட்டியுள்ள தமிழக முதலமைச்சர்

### எஸ்.ஆனந்தகுமார் நன்றி



எமது நாடு பொருளாதார ரீதியாக மிகவும் நெருக்கடியான சூழ்நிலையில் இருக்கும் தருணத்தில் கைகொடுக்க நடவடிக்கை மேற்கொண்ட தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு ஐக்கிய தேசிய கட்சியின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளர் எஸ்.ஆனந்தகுமார் நன்றி தெரிவித்துள்ளார்.

நெருக்கடியை எதிர்நோக்கியுள்ள இலங்கை மக்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் உதவிகளை வழங்குவதற்கு இந்திய மத்திய அரசிடம் அனுமதிகோரி தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், தமிழ்நாடு சட்டபேரவையில் தனிநபர் தீர்மானம் ஒன்றை முன்வைத்து நிறைவேற்றியுள்ளார்.

இதற்கமைய, 80 கோடி ரூபாய் பெறுமதியான 40,000 மெட்ரிக் தொன் அரிசி, 137 மருந்து பொருட்கள் (28 கோடி ரூபா) மற்றும் குழந்தைகளுக்காக 500 தொன் பால்மா (15 கோடி ரூபா) என்பவற்றை வழங்க தமிழக அரசு தீர்மானித்துள்ளதாக மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

இவற்றை தமிழக மாநில அரசினால் நேரடியாக வழங்க முடியாது என்பதால், இலங்கையில் உள்ள இந்திய தூதரகம் ஊடாக வழங்கிவைக்க இந்திய மத்திய அரச அனுமதி வழங்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இம்முறை சிறுபோகத்தில்

## ஹுருலுவெவ விவசாய திட்டத்தில் சுமார் 10,400 ஏக்கரில் நெற் செய்கை

### அநுராதபுரம் மாவட்ட செயலாளர் தெரிவிப்பு

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

இம்முறை சிறுபோகத்தின் போது ஹுருலுவெவ விவசாய திட்டத்தின் கீழ் 10,400 ஏக்கர் காணியில் நெல் செய்கை பண்ணப்படவுள்ளதாக அநுராதபுரம் மாவட்ட செயலாளர் ஜனக ஜயசுந்தர தெரிவித்தார்.

இங்கு 5400 ஏக்கரில் நெற் செய்கையினையும் மேலும் 5000 ஏக்கரில் இடைக்கால பயிர்களும் பயிரிடப்படும்.

அதற்கான நிலத்தயாரிப்பு வேலைகள் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் மே 15 ம் திகதிக்கு முன்னர் விதைப்பு வேலைகள் முடிவுற வேண்டும்.

விவசாய திணைக்களத்தின் பரிந்துறைகளின்படி இளம் வயது விதை நெல் சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. அதன்படி 300, 362 நெல் வகைகள் பயன்படுத்த ஏற்றது என விவசாய திணைக்கள உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

இடைக்கால பயிராக பச்சைப் பயறு, உழுந்து , கௌபீ மற்றும் சோயா என்பன பயிரிட திட்டமிடப்பட்டுள்ளன. இங்கு தேவையான சோயா விதைகள் விவசாய திணைக்களத்திடம் இல்லாமையினால் தேவையான 30,000 கிலோ கிராம் சோயா விதையினை பெற்றுக்கொள்வது தொடர்பில் சிறந்த திட்டமொன்றை மேற்கொண்டுள்ளதாகவும் விவசாய திணைக்கள உத்தியோகத்தர் மேலும் தெரிவித்தார்.

மாத்தறை மாவட்டம்; பச்சைக் கொழுந்து தேயிலைக்கு

## ரூ. 150 முதல் ரூ. 189 வரை கொள்வனவு விலை

**மாத்தறை தினகரன் நிருபர்**

மாத்தறை மாவட்டத்திலுள்ள சிறிய தேயிலைத் தோட்ட உரிமையாளர்களினால் உற்பத்தி செய்யப்படும் பச்சைக் கொழுந்து தேயிலை ஒரு கிலோவுக்கு ரூபா 150 முதல் ரூபா 189 வரை தேயிலைத் தொழிற்சாலைகள் வழங்கி வருவதாக மாத்தறை மாவட்ட உதவி தேயிலை ஆணையாளர் எல்.கே. அஜித் தெரிவித்தார்.

இதற்குமுன் சிறிய தோட்ட உரிமையாளர்களிடமிருந்து கொள்வனவு செய்யும் ஒரு கிலோ பச்சைக் கொழுந்து தேயிலைக்கு ரூபா 100 முதல் ரூபா 120 வரை வழங்கி வந்ததாக உதவி தேயிலை ஆணையாளர் மேலும் தெரிவித்தார். இந்த உயர்ந்த விலை தமக்கு திருப்தியளிப்பதாகவும் சிறுதேயிலைத் தோட்ட உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மேற்படி மாவட்டத்திலுள்ள 82 தேயிலைத் தொழிற்சாலைகளுள் 47 தொழிற்சாலைகள் மாத்திரமே இந்த உயர்ந்த விலையில் தேயிலையை கொள்வனவு செய்து வருவதாகவும் உதவி தேயிலை ஆணையாளர் தெரிவித்தார்.

ஆசிரியர்கள், அதிபர்கள் லீவு போராட்டம்;

## பிள்ளைகளின் கல்வி நிலை பாதித்துள்ளதாக பெற்றோர் புகார்

**மாத்தறை தினகரன் நிருபர்**

மாத்தறை கல்வி வலயத்திற்குட்பட்ட ஆசிரியர்களும் அதிபர்களும் சுகவீன லீவு பெற்று கடமைக்குச் சமுகமளிக்காததால் தமது பிள்ளைகளின் கல்வி நிலை பாதிக்கப்பட்டுள்தாக பெற்றோர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மாத்தறை கல்வி வலயத்தில் 4336 ஆசிரியர்களும் 116 அதிபர்களும் சேவை செய்கிறார்கள். இவர்களில் 186 ஆசிரியர்களும் 23 அதிபர்களும் கடமைக்கு சமுகமளித்திருந்தனர்.

மேற்படி கல்வி வலயத்தில் கடமையாற்றும் 1183 கல்விச் சேவை ஊழியர்களில் 323 ஊழியர்களே கடமைக்குச் சமுகமளித்திருந்தனர். இன்னும் சில மாதங்களே க.பொ.த சா/த பரீட்சைக்கு தமது மாணவர்கள் தோற்ற இருப்பதால் மாணவர்களின் கல்வி நிலை குறித்து பெற்றோர்களும் மாணவர்களும் பெரும் கவலை கொண்டுள்ளனர்.

கடந்த 25ம் திகதி கடமைக்குச் சமுகமளிக்காத அதிபர்கள், ஆசிரியர்கள் பற்றிய விபரங்களை மாத்தறை வலய கல்விப் பணிப்பாளர் திரு. முதலிகே திறட்டி வருகிறார்.

## அநுராதபுரத்தில்; பழைய விலையில் அதிக சவர்க்காரம் கொள்வனவு

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

சவர்க்காரத்தின் விலை 100 வீதத்திற்கும் அதிகமாக உயர்ந்துள்ளதால் கடைகளில் விடப்படும் பழைய விலை சவர்க்காரத்தை

பாவனையாளர்கள் அதிகளவில் கொள்வனவு செய்வதை அநுராதபுரம் பிரதேசத்தில் காணக்கூடியதாக உள்ளது.

அநுராதபுரம் நகரில் அமைந்துள்ள பல்பொருள் அங்காடிகள் கிராமங்களில் அமைந்துள்ள நடுத்தர மற்றும் சிறிய வியாபார நிலையங்களின் சோப்பு நிரம்பிய அலுமாரிகள் காலியாக விருந்ததை அவதானிக்க முடிகிறது.

இதன்படி 115 கிராம் எடையுள்ள சலவை சோப் ஒன்றின் புதிய விலை 75 ரூபாவாகவும் சிறியோர்களுக்கான சோப்பு ஒன்றின் புதிய விலை 135 மற்றும் 140 ரூபாவிற்கும் 74 ரூபாவாக இருந்த குழந்தைகளுக்கான சோப்பு ஒன்றின் புதிய விலையை 175 மற்றும் 180 ரூபாவிற்கும் அதிகரித்து அந்நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

மேலும் சோப்பு பவுடர் மற்றும் சோப்பு அடிப்படையிலான சோப்புக்களின் விலை இரண்டு மடங்கு உயர்த்தப்பட்டுள்ளன. டூத் பிரஷ், பற்பஷை மற்றும் ஷாம்புக்களின் விலையும் எதிர்காலத்தில் உயரும் என சந்தை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வட மத்திய மாகாணத்தில்

## மீன் உற்பத்திகளின் நுகர்வை அதிகரிக்க திட்டம்

**திறப்பனை தினகரன் நிருபர்**

முழு இலங்கையின் நன்னீர் மீன் நுகர்வுத் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் வடமத்திய மாகாணத்தில் மீன் உற்பத்திக்கான சாத்தியக்கூறுகள் காணப்படுவதாக வடமத்திய மாகாண விவசாய அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் செனரத் பத்திரன தெரிவித்தார்.

ஆனால் அந்த இலக்கை அடையப்போதுமான மீன் குஞ்சுகளை நீர்த்தேக்கங்களில் விட முடியாத நிலை உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மீன் குஞ்சுகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் நடவடிக்கையை துரிதப்படுத்துவதன் மூலம் இந்த இலக்கை அடைவதே மாகாண விவசாய அமைச்சின் நோக்கமாகும்.



தற்போது வடமத்திய மாகாணத்தில் உள்ள நீர் நிலைகளில் 25% மட்டுமே மீன் உற்பத்திக்காக பயன்படுத்தப்படுகிறது. இந்நிலையை மாற்றி மீன் உற்பத்தியை அதிகரிக்க பதவியவில் மீன் குஞ்சு வளர்ப்பு நிலையமும் அமைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மாகாணத்தில் உள்ள 5000க்கும் மேற்பட்ட மீன் கடல் உணவு உற்பத்தியாளர்களுக்கு பயிற்சி மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைகள் மற்றும் தேவையான உபகரணங்களும் வழங்கப்பட்டு வருகின்றன. இது அவர்களின் வேலைகளைப் பாதுகாப்பதையும், உயர்தர மீன் பொருட்களைப் பெறுவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## லிதுவேனியாவின் இலங்கை தூதுவருடன் சந்திப்பு

**ருஸைக் பாரூக்**

இளைஞர் பாராளுமன்றத்தின் வெளிவி வகார பிரதி அமைச்சர் அஹ்மத் சாதிக் மற்றும் இளைஞர் பா ராளுமன்ற உறுப்பினர் முப்தி முயீன் ஆகியோர் இலங்கைக்கான லிதுவேனியாவின் தூதுவர் திரு. ஜூலியஸ் பிரணவிசியஸ் மற்றும் இலங்கைக்கான லிதுவேனியாவின் பணிப்பாளர் திரு.கான்சன கொடிதுவக்கு ஆகியோர் அண்மையில் சந்தித்தனர்.

இச்சந்திப்பில், இலங்கை இளைஞர்களுக்கான உயர் கல்வி, விளையாட்டு, சிறு முயற்சியான்மை மற்றும் தலைமைத்துவ திறன்கள் விருத்திக்கான வாய்ப்புக்கள் பற்றி கலந்துரையாடப்பட்டது.

மேலும் லிதுவேனியா மற்றும் இலங்கைக்கிடையிலான இராஜதந்திர உறவானது 25 வருடங்களாக சிறந்த முறையில் பேணி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.



இக்கலந்துரையாடலின் பின்னர், இரு நாடுகளினதும் உறவு இளைஞர்களின் ஊடாகவும் மேலும் வலுப்படுத்த சிறந்த நடவடிக்கைகள் எதிர்காலங்களில் எடுக்கப்படும் என்றும் தூதுவர் குறிப்பிட்டார்.

## குப்பை கூளங்களை பிரித்தெடுத்தல் தொடர்பான தெளிவூட்டல் நிகழ்வு



**(புத்தளம் தினகரன் நிருபர்)**

திண்மக்கழிவு முகாமைத்துவம் சம்பந்தமான பிரச்சினைகளுக்குத் தீர்வாக புத்தளம் நகர சபையால் விரைவில் முன்னெடுக்கப்படவிருக்கின்ற குப்பை கூளங்களைப் பிரித்தெடுக்கும் வேலைத்திட்டம் சம்பந்தமான தெளிவூட்டல் கருத்தரங்கு (27) நகரபிதா எம்.எஸ்.எம். ரபீக் தலைமையில் சர்வமத குருமார்களுடன் நகரசபை காரியாலய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதன்போது நகரபிதா திண்மக்கழிவு முகாமைத்துவ செயற்பாட்டில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் அதற்கான தீர்வுகள் சம்பந்தமான விடயங்களை தெளிவுபடுத்தினார்.

இதன்போது மதகுருமார்களின் கருத்துக்களும் ஆலோசனைகளும் கலந்துரையாடப்பட்டன. குப்பை கூளங்களைப் பிரித்தெடுக்கும் செயற்பாடு சம்பந்தமான தெளிவூட்டல் மற்றும் கலந்துரையாடல்கள் பல தரப்புக்களுடனும் நடாத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் நகரசபை உறுப்பினர்கள் ரனீஸ் பதூர்தீன், விஜேதாச ராஜபக்ஷ,மொஹான் துமிந்த மற்றும் நகரசபை செயலாளர், உயரதிகாரிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## நோன்புப் பெருநாளை சிறப்பாக கொண்டாட தென் மாகாண மக்கள் தயார்

**வெலிகம தினகரன் நிருபர்**

ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாளை சிறப்பாக கொண்டாடுவதற்கு தென் மாகாண முஸ்லிம்கள் தயாராகி வருகின்றனர்.

அத்தியாவசியப் பொருட்கள், ஆடைகள், உணவுப் பண்டங்கள் போன்றவற்றை கொள்வனவு செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

பிந்திய இரவு வரை விற்பனை நிலையங்கள் திறக்கப்பட்டு வியாபாரம் நடைபெற்று வருகின்றது.

மேலும் பள்ளிவாசல்கள், தக்கியாக்கள், ஸாவியாக்களிலும் பெருநாள் தின நிகழ்ச்சிகளுக்காக தயாராகி வருகின்றன.

பெருநாள் தொழுகை, அல்குர்ஆன் தமாம் நிகழ்ச்சிகள், விஷேடபயான் நிகழ்ச்சிகள் மற்றும் இதர வணக்க வழிபாடுகளை மேற்கொள்ள நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த மூன்று வருடங்கள் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகளால் சிறப்பாக கொண்டாட முடியாமல் இருந்த பெருநாளை இம் முறை சிறப்பாகக் கொண்டாட எதிர்பார்க்கின்றனர்.

பொருளாதார நெருக்கடிக்கு உட்பட்டுள்ள எமது நாடு இதிலிருந்து விடுபட்டு சிறந்த சூழல் ஏற்படுவதற்கும் சௌபாக்கியமான நிலை ஏற்படுவதற்கும் பெருநாள் குத்பாக்களில் விஷேட துஆப் பிரார்த்தனைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.



சிவசேனை தலைவர் மறவன்புலவு க. சச்சிதானந்தன் இந்தியாவின் வட கிழக்கில் மணிப்பூர் மாநிலம் ஆளுநர் இல. கணேசன் அவர்களுக்கு அண்மையில் தலைநகர் இம்பால் ஆளுநர் மாளிகையில் வாழ்த்தும் பாராட்டும் தெரிவித்தார்.



வெலிகம, புஹாரிப் பள்ளிவாசலில் புனித ரமழான் மாதம் முழுவதும் நடைபெற்ற ஹிஸ்பு மஜ்லிஸில் சிறார்கள் கலந்து கொண்டுள்ளதையும் அவர்களுக்கு பள்ளிவாசல் நிர்வாகத்தினால் அன்பளிப்புகளும் வழங்கப்பட்டன. கலந்துகொண்ட சிறார்களுக்கு அன்பளிப்புப் பொதிகள் வழங்கப்பட்டன.

படம் வெலிகம தினகரன் நிருபர்

# கொழும்பு கலைமகள் வித்தியாலய கால்கோள் விழா







கொழும்பு கலைமகள் வித்தியாலயத்தின் கால்கோள் விழாவும் தமிழ், சிங்கள புத்தாண்டு விழாவும் அண்மையில் நடைபெற்றது. இதில் கொழும்பு கோட்டக்கல்வி பணிப்பாளர் குமுதினி, கலைமகள் வித்தியாலயத்தின் அதிபர் எம். முருகானந்தம், பிரதி அதிபர்களான எம். சிவப்பிரகாசம், ஆர். லிலிதா, உப அதிபர் சுகந்தி ரவிச்சந்திரன், பகுதி தலைவர் கே. சுப்பிரமணியம், தரம் 3 ஆசிரியர் டி. விஜயலட்சுமி, தரம் 5 ஆசிரியர் வீ. உமாபதி, ஆரம்பப் பிரிவு பொறுப்பாசிரியர் எஸ். ரவீந்திரன், எஸ். மஹிந்தகுமார் ஆகியோரும் பெற்றோர்களும் பழைய மாணவ சங்கத்தினரும் கலந்து கொண்டனர்.




தந்தை செல்வாவின் நினைவு தினத்தை முன்னிட்டு தந்தை செல்வா நற்பணி மன்றம் இலவச மூக்கு கண்ணாடி வழங்கும் நிகழ்வையும், தந்தை செல்வாவின் நினைவு கொடி அணிவிக்கும் நிகழ்வையும் நடாத்திய போது கொழும்பு மாநகர சபை உறுப்பினர்கள் சுதர்சன், சிவரஞ்சன் ஆகியோர் தந்தை செல்வாவின் படத்திற்கு மலர் மாலை அணிவிப்பதையும் கொழும்பு மாநகர சபை உறப்பினர் ஜெயசங்கர் மூக்கு கண்ணாடி வழங்கும் நிகழ்வை ஆரம்பித்து வைப்பதையும், அதிபர் முருகானந்தன், பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர் கணேஸ் மன்ற பொதுச்செயலாளர் எஸ்.கே. தளையரட்ணம், நிர்வாக செயலாளர் திருமதி புவனேஸ்வரி, பிரதி தலைவர் ரவிந்திரன், நிலாம், ராஜா, திருமதி மணிமேகலாதேவி ஆகியோர் அருகில் இருப்பதையும் காணலாம்.

## நெருக்கடியில் இருந்து இலங்கை... (05ஆம் பக்கத் தொடர்)

குறிப்பாக புதிய கடன்களை இலங்கைக்கு வழங்கி, அதன் மூலம் தனது முன்னைய கடன்களை தீர்க்குமாறு சீனா வலியுறுத்தியுள்ளது.

இதனால், இலங்கை அரசாங்கம் சீனாவிடத்தில் நிதியுதவியை எதிர்பார்க்கும் விடயத்தில் தடுமாறிப் போயுள்ளது. அதற்கான மாற்றுவழிகளைக் கண்டறிவதற்கு ஆரம்பித்துள்ளது. ஏற்கனவே இந்தியா பில்லியன் டெலர்கள் உதவிகளை வழங்கியுள்ளது. இந்நிலையில், தற்போது சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து உதவிகள் கிடைக்கும் வரையில் ஏற்படும் நெருக்கடிகளைத் தவிர்ப்பதற்காக நிதி அமைச்சர் அலி சப்ரி, இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனிடத்தில் 2 பில்லியன் டொலர்களை மேலதிக கடனாக கோரியுள்ளார்.

வொஷிங்டனில் நடைபெற்ற இந்தச் சந்திப்பின் போதே மேற்படி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ள நிலையில், இந்தியா அதனை சாதகமாக பரிசீலிப்பதாக தெரிவித்துள்ளது.

தற்போதைய தகவல்களின் பிரகாரம் ஒரு பில்லியன் டொலர்களை விரைவில் வழங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேநேரம், இலங்கைக்கு இந்தியா வழங்கும் பன்முகப்படுத்தப்பட்டதும் தாராளமானதுமான ஆதரவு தொடர்வதாக அறிவித்துள்ள புதுடில்லி, இலங்கை மத்திய வங்கிக்கான 400 மில்லியன் டொலர்கள் நாணயப்பரிமாற்ற கால எல்லை இந்த ஆண்டு ஜனவரியில் நிறைவடைந்த நிலையில், இந்திய ரிசர்வ் வங்கியினால் தற்போதைய நாணயம்சார் ஆதரவாக அக்கால எல்லையை நீடித்துள்ளது.

அதேநேரம், இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர்களும், நட்சத்திர வீரர்களுமான அர்ஜுண ரணதுங்க, சனத் ஜெயசூரிய போன்றவர்கள் 'பெரியண்ணனாக இந்தியா இலங்கைக்கு உதவுகின்றது' என்று 'நன்றி உணர்வுடன்' கூறியுள்ளார்கள்.

மேலும், இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி சுப்பிரமணியம் ஜெய்சங்கரும், 'இலங்கை விடயத்தில் இந்தியா கரிசனையுடன் இருக்கின்றது. பிரதமர் மோடியின் அயலுறவுக் கொள்கைக்கு அமைவாக நலத்திட்ட உதவிகள் தொடரும்' என்று அறிவித்துள்ளார்.

இந்நிலையில் இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடிகளை ஓரளவேனும் தீர்ப்பதில் இந்தியாவின் உதவிகளும், பங்களிப்புக்களும் அபரிதமானவை. இந்தப் புரிதல் இப்போது அனைத்து இலங்கையர்களின் மத்தியிலும் வேரூன்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.


**வரையறுக்கப்பட்ட தபால் மற்றும் டெலிகம் ஊழியர் கூட்டுறவு வங்கிச் சங்கம் லோட்டஸ் வீதி, கொழும்பு -01**

**2020 உயர் தரம் மற்றும் 2021 ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் சித்தியடைந்த மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்குதல்**

எமது நிறுவனத்தினால் சகல வருடங்களிலும் வழங்கப்படும் மேற்படி புலமைப்பரிசில் பெறுபவர்களை தேர்ந்தெடுப்பதற்காக 2022.05.02 முதல் 2022.05.20 வரை விண்ணப்பங்கள் விநியோகிக்கப்படும். 2020 ஒக்டோபர் மாதம் நடைபெற்ற க.பொ.த. (உ.த.) பரீட்சையில் சித்திபெற்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் உள்ளக மாணவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அங்கத்தவர்களின் பிள்ளைகள் மற்றும் 2022 ஜனவரியில் நடைபெற்ற 5ஆம் ஆண்டு பரீட்சையில் சித்தியடைந்த பிள்ளைகள் சார்பாக இப்புலமைப்பரிசில் வழங்கப்படும்.

- இப்புலமைப்பரிசிலுக்காக விண்ணபிக்க முடிவது குறித்த பரீட்சை நடைபெற்ற தினம் இக் கூட்டுறவுச் சங்கத்தில் அங்கத்துவம் பெற்றுள்ள அங்கத்தவர்களின் பிள்ளைகள் சார்பாக மட்டுமே
- 2022.05.02 முதல் 2022.05.20 வரை விண்ணப்பங்கள் விநியோகிக்கப்படுவதுடன் நிறுவனத்திற்கு எழுத்து மூலம் அறிவித்த பின்னர் குறித்த விண்ணப்பத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.
  சகல விண்ணப்பங்களும் 2022.06.03ம் திகதி நண்பகல் 12.00 இற்கு அல்லது அதற்கு முன் அலுவலகத்திற்கு கிடைக்குமாறு அனுப்புதல் வேண்டும்.
- இது பற்றி தனிப்பட்ட அறிவித்தல்கள் விடுக்கப்பட மாட்டாது. மேலதிக விபரங்களுக்கு இக் கூட்டறவுச் சங்க தலைமையகத்தில் தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

**கவனிக்கவும்:**

தபாலில் அல்லது வேறு காரணங்களால் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்கப்பட மாட்டாது அத்துடன் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் விண்ணப்பத்தை கோரி அனுப்பப்படும் கடிதங்களும் எந்த மேன்முறையீடுகளும் ஏற்கப்பட மாட்டாது என்பதையும் கவனத்தில் கொள்ளவும். சகல விண்ணப்பங்களும் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

**தலைவர்,**
**பல்கலைக்கழக மற்றும் ஐந்தாம் ஆண்டு பல்கலைக்கழகம் வழங்குதல்**
**வ/ப தபால் மற்றும் டெலிகொம் ஊழியர் கூட்டுறவு வங்கிச் சங்கம்,**
**த.பெ. 569, லோட்டர்ஸ் வீதி, கொழும்பு 01.**
**தொலைபேசி இல: 011 2325607, 2430470, 2380701-3**



**அற்றோணி அதிகார பத்திரத்தை இரத்துச் செய்தல்**

ருவன்வெல்ல அஞ்சல் கஹட்டகஸ்தென்ன ரோஹனமாலி எனும் முகவரியில் வசிக்கும் **பரணதலகே பிரேமச்சந்திர** ஆகிய என்னால் மஹகிரில்ல உடகிரில்லயில் வசிக்கும் **அத்தபத்து முதியன்சேலாகே சமன் திலக்கரத்ன** என்பவருக்கு வழங்கப்பட்ட பிரசித்த நொத்தாரிஸ் **T.M.H.P.B. தென்னகோன்** அவர்களினால் எழுதி சான்றுபடுத்தப்பட்ட 21637ஆம் இலக்கம் மற்றும் 2020.06.23ஆம் திகதிய அற்றோணி அதிகாரப் பத்திரம் இன்று முதல் இரத்துச் செய்யப்பட்டு வலுவிழக்கச் செய்யப்பட்டுள்ளதாக இலங்கை சனநாயகச் சோஷலிசக் குடியரசின் பொதுமக்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.



**அறிவித்தல்**

**நிக்கவரட்டிய பிரதேச சபை**

**2023ம் ஆண்டிற்காக வரவு செலவுத்திட்ட ஆலோசனைகளை பெற்றுக் கொள்ளல்**

2020.10.29ம் திகதி பிரசுரமான இல. 2199/15 எனும் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பிரதேச சபை வரவு செலவுத் திட்ட தயாரிப்பு மற்றும் அமுல்படுத்தும் விதியின் இல. 06 பிரிவின் பிரகாரம் நிக்கவரட்டிய பிரதேச சபையின் தலைவர் எம்.பீ.பீ. பத்திரன ஆகிய என்னால் 2023ஆம் ஆண்டிற்கான அபிவிருத்தி ஆலோசனைகள் அதிகாரப் பிரதேசத்தில் பொது மக்களிடம் கோரப்படுவதாக இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது. அதனடிப்படையில் உங்களது அபிவிருத்தி ஆலோசனைகளை 2022 ஜூன் 20ம் திகதிக்கு முன் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அல்லது கொண்டு வந்து ஒப்படைக்குமாறு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**எம்.பீ.பீ. பத்திரன,**
**தலைவர்.**

2022 ஏப்பரல் 22ம் திகதி **நிக்கவரட்டிய பிரதேச சபை.**



**இலங்கை முதலீட்டுச் சபை (BOI)**

**பெறுகை அறிவித்தல்**

2022 ஏப்ரல் 30ம் திகதி 'டெய்லி நியூஸ்' இல் பிரசுரிக்கப்பட்ட மற்றும் BOI இன் இணையதளம் (www.investsrilanka.com) இல் இடம்பெற்ற கீழ்க்காணும் பெறுகைக்கான விலைமனு அழைப்பு.

**இலங்கை முதலீட்டுச் சபைக்கு 80 Column Dot - Matrix Printer களை வழங்குதல், நிறுவுதல் மற்றும் பராமரிப்பதற்கான விலைமனுக்களுக்கான அழைப்பு**

**ஒப்பந்த இல. BOI/S&S/Q/44/2022**

இப் பெறுகையுடன் தொடர்புபட்ட விலைமனு ஆவணங்கள் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ளன. அத்துடன் ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 'டெய்லிநியூஸ்' இல் பிரசுரிக்கப்பட்ட விளம்பரம் மற்றும் BOI இன் உத்தியோகபூர்வ இணையத்தளம் (www.investsrilanka.com) இன் பிரகாரம் செயற்படலாம். விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை சிரேஷ்ட பிரதி பணிப்பாளர் (நிர்வாகம்) இடமிருந்து 011 2543041/074 1531432 ஊடாக பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**இலங்கை முதலீட்டு சபை.**



**பெறுகை அறிவித்தல்**

**போதனா வைத்தியசாலை – குருநாகல்**

2022/2023ஆம் ஆண்டிற்காக இவ் வைத்தியசாலையின் மருத்துவ அதிகாரிகளுக்கு உத்தியோகபூர்வ இல்ல வசதிகளை வழங்குவதற்கு வருடாந்த குத்தகை அடிப்படையில் வீடுகளை பெற்றுக் கொள்வதற்கு 2022.05.18ம் திகதி மு.ப. 10.00 வரை விலை மனுக்கள் கோரப்படுகின்றன. மேற்படி விலைமனுக்கள் திறத்தல் அன்றே அந்த நேரத்திலேயே இடம்பெறும். அவ்வேளையில் நீங்கள் அல்லது உங்கது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவர் சமுகமளிக்கலாம்.

கீழ்க்காணும் தேவைப்படுகளை பூர்த்தி செய்ய முடியும் எனில் மாத்திரம் விலை மனுக்களை சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

1. சகல அறையுடனும் இணைந்த குளியலறை இருத்தல் வேண்டும்.
2. பல வாகனங்களை நிறுத்தி வைக்கக் கூடிய வாகன நிறுத்துமிடம் இருத்தல் வேண்டும்.
3. குருநாகல் போதனா வைத்தியசாலைக்கு அருகில் இருத்தல்
4. அரச மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மதிப்பீட்டு பெறுமதிக்கு மாத்திரம் செலுத்தப்படுவதால் அதற்கு இணங்குதல் வேண்டும்.
5. வருடாந்த வரி உறுதிக்கு உட்படுவதற்கு விரும்புதல் வேண்டும்.

விண்ணபங்களை 2022.05.17 பி.ப. 3.00 வரை வைத்தியசாலையின் காசாளருக்கு மீளளிக்கப்படாத ரூ. 500.00 கட்டணத்தை செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை சமர்ப்பித்த பின்னர் கேள்விப் பத்திரங்களை தலைமையகத்தில் பெற்றுக் கொள்ளலாம் விலை மனுக்கள் உள்ளிட்டு அனுப்பப்படும் உறையின் இடது மூலையில் சமர்ப்பிக்கப்படும் விடயங்களை தெளிவாக குறிப்பிடப்படும் உங்களது விலைமனுக்கள் தலைவர், பிரதேச பெறுகைக் குழு போதனா வைத்தியசாலை, குருநாகல் என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம். அல்லது பிரதம கணக்காளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் கொண்டுவந்து உள்ளிடலாம். இது பற்றிய மேலதிக விபரங்கள் தேவைப்படின் இல. 037-2222261 அழைத்து அலுவலக நிர்வாக அதிகாரியிடம் பெற்றுக் கொள்ளலாம். இது பற்றி ஏதேனும் சிக்கல்கள் ஏற்படின் பெறுகைக் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும் என்பதை கவனிக்கவும்.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**போதனா வைத்தியசாலை,**
**குருநாகல்.**



**எல் பீ ஃபினான்ஸ் பி.எல்.சி**
**பகிரங்க ஏலவிற்பனை**

எல் பீ ஃபினான்ஸ் பி.எல்.சி நிறுவனத்தில் அடகு வைத்து தங்கக் கடன் பெற்று, உரிய காலத்தினுள் மீட்கப்படாத தங்க நகைகள் பின்வரும் இடங்களில் கீழ்க்காணும் திகதிகளில் மு.ப. 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| ஏலவிற்பனைத் திகதி | | முகவரி |
|---|---|---|
| 01/06/13/20 | ஜூன் 2022 | இல. 755/1, பன்னிபிட்டிய வீதி, பத்தரமுல்ல. |
| 01/06/13/20 | ஜூன் 2022 | இல. 91, ஹைலெவல் வீதி, கிருலப்பனை, கொழும்பு 06. |
| 01/06/13/20 | ஜூன் 2022 | இல. 92, ஸ்டான்லி திலகரட்ன மாவத்தை, நுகேகொடை. |
| 01/06/13/20 | ஜூன் 2022 | இல. 434, ஈ.டபிள்யு.பெரேரா மாவத்தை, கோட்டே வீதி, பிட்டகோட்டே. |
| 01/06/13/20 | ஜூன் 2022 | இல. 595, ஹைலெவல் வீதி, கங்கொடவில, நுகேகொடை. |
| 01/06/13/20 | ஜூன் 2022 | இல. 61/2, கண்டி வீதி, திஹாரிய. |
| 01/06/13/20 | ஜூன் 2022 | இல. 594/3, கண்டி வீதி, நிட்டம்புவ. |
| 01/06/13/20 | ஜூன் 2022 | இல. 19, பிரதான வீதி, கேகாலை. |
| 01/06/13/20 | ஜூன் 2022 | இல. 1B, பௌத்தாலோக மாவத்தை, கம்பஹா. |
| 01/06/13/20 | ஜூன் 2022 | இல. 81, கண்டி வீதி, வரகாபொல. |
| 01/06/13/20 | ஜூன் 2022 | இல. 282, அநகாரிக தர்மபால மாவத்தை, மாத்தறை. |
| 01/06/13/20 | ஜூன் 2022 | இல. 13, ஸ்டேசன் வீதி, மாத்தறை. |
| 01/06/13/20 | ஜூன் 2022 | இல. 66, திஸ்ஸ வீதி, தங்காலை. |
| 01/06/13/20 | ஜூன் 2022 | இல. 138 D/1, அம்பாந்தோட்டை வீதி, அம்பலாந்தோட்டை. |
| 01/06/13/20 | ஜூன் 2022 | இல. 83, தெனியாய வீதி, அக்குரெஸ்ஸ. |
| 01/06/13/20 | ஜூன் 2022 | இல. 2, எச்.வி.கட்டிடம், தெல்லாவ வீதி, நெலுவ. |
| 01/06/13/20 | ஜூன் 2022 | இல. 149, பிரதான வீதி, தெனியாய. |
| 01/06/13/20 | ஜூன் 2022 | இல. 65/A, ஸ்ரீ சத்தர்ம மாவத்தை, மாளிகாவத்தை, கொழும்பு 10. |
| 01/06/13/20 | ஜூன் 2022 | இல. 282, நாகலாகம் வீதி, கொழும்பு 14. |
| 01/06/13/20 | ஜூன் 2022 | இல. 52/17, கொதட்டுவ புதிய நகரம், கொதட்டுவ. |
| 01/06/13/20 | ஜூன் 2022 | இல. 21, புனித ஜோசப் வீதி, கொழும்பு 14. |
| 01/06/13/20 | ஜூன் 2022 | இல. 371/1, டாம் வீதி, கொழும்பு 12. |
| 01/06/13/20 | ஜூன் 2022 | இல. 551, தெமட்டகொட வீதி, கொழும்பு 09. |
| 01/06/13/20 | ஜூன் 2022 | இல. 66, ஜம்பட்டா வீதி, கொழும்பு 13. |
| 01/06/13/20 | ஜூன் 2022 | இல. 197, செட்டியார் தெரு, கொழும்பு 11. |
| 01/06/13/20 | ஜூன் 2022 | இல. 256, புதிய நகரம், தம்புத்தேகம. |
| 01/06/13/20 | ஜூன் 2022 | ரஜரட்ட கட்டிடம், பிரதான வீதி, கதுருவெல, பொலன்நறுவை. |
| 01/06/13/20 | ஜூன் 2022 | இல. 137, பிரதான வீதி, அனுராதபுரம். |
| 01/06/13/20 | ஜூன் 2022 | இல. 514/A, புதிய நகரம், அனுராதபுரம். |
| 01/06/13/20 | ஜூன் 2022 | இல. 26, கண்டி வீதி, மதவாச்சி. |
| 01/06/13/20 | ஜூன் 2022 | இல. 38, குருநாகல் சந்தி, தம்புளை. |
| 01/06/13/20 | ஜூன் 2022 | பிரதான வீதி, மெதிரிகிரிய. |
| 01/06/13/20 | ஜூன் 2022 | இல. 15, தலாவ வீதி, கெக்கிராவ. |
| 01/06/13/20 | ஜூன் 2022 | இல. 24, சிலாபம் வீதி, ஆனமடுவ. |
| 01/06/13/20 | ஜூன் 2022 | இல. 96, அகலவத்த வீதி, மத்துகம. |
| 01/06/13/20 | ஜூன் 2022 | இல. 87, பிரதான வீதி, பிட்டிகல. |
| 01/06/13/20 | ஜூன் 2022 | இல. 14, பிரதான வீதி, எல்பிட்டிய. |
| 01/06/13/20 | ஜூன் 2022 | இல. 48, இரத்தினபுரி வீதி, பதுரலிய. |
| 02/07/15/21 | ஜூன் 2022 | இல. 134, பிரதான வீதி, வென்னப்புவ. |
| 02/07/15/21 | ஜூன் 2022 | இல. 106C, குருநாகல் வீதி, புத்தளம். |
| 02/07/15/21 | ஜூன் 2022 | இல. 84, பிரதான வீதி கல்பிட்டிய. |
| 02/07/15/21 | ஜூன் 2022 | இல. 356, பிரதான வீதி, நீர்கொழும்பு. |
| 02/07/15/21 | ஜூன் 2022 | இல. 40A, கொழும்பு வீதி, சிலாபம். |
| 02/07/15/21 | ஜூன் 2022 | இல. 110, சிலாபம் வீதி, கொச்சிகடை. |
| 02/07/15/21 | ஜூன் 2022 | இல. 57, வெயாங்கொட வீதி, மினுவாங்கொட. |
| 02/07/15/21 | ஜூன் 2022 | இல. 229/1, கடவத்த வீதி, கனேமுல்ல. |
| 02/07/15/21 | ஜூன் 2022 | இல. 69, கிரஉல்ல வீதி, திவுலபிட்டிய. |
| 02/07/15/21 | ஜூன் 2022 | இல. 107, சென் ஜோசப் வீதி, நீர்கொழும்பு. |
| 02/07/15/21 | ஜூன் 2022 | இல. 75A, சிலாபம் வீதி, மாரவில. |
| 02/07/15/21 | ஜூன் 2022 | இல. 434, பேஸ்லைன வீதி, அவரிவத்த, கட்டுநாயக்க. |
| 02/07/15/21 | ஜூன் 2022 | இல. 661/A, தேவத்த வீதி, ராகம. |
| 02/07/15/21 | ஜூன் 2022 | இல. 6/1/1, பழைய நீர்கொழும்பு வீதி, ஜா-எல. |
| 02/07/15/21 | ஜூன் 2022 | இல. 39, கொழும்பு வீதி, கந்தானை. |
| 02/07/15/21 | ஜூன் 2022 | இல. 18, எலகந்த, ஹெந்தல, வத்தளை. |
| 02/07/15/21 | ஜூன் 2022 | இல. 17, ஸ்டேசன் வீதி, ஹெந்தல சந்தி, வத்தளை. |
| 02/07/15/21 | ஜூன் 2022 | இல. 350/16, கொழும்பு வீதி, தெல்கொட. |
| 02/07/15/21 | ஜூன் 2022 | இல. 484, அவிசாவளை வீதி, கடுவளை |
| 02/07/15/21 | ஜூன் 2022 | இல. 722, வராகொட வீதி, விஹாரை சந்தி, களனி. |
| 02/07/15/21 | ஜூன் 2022 | இல. 44, மாகொல வீதி, கிரிபத்கொட. |
| 02/07/15/21 | ஜூன் 2022 | இல. 175, கண்டி வீதி, கிரிபத்கொட. |
| 02/07/15/21 | ஜூன் 2022 | இல. 136/12H, கண்டி வீதி, கடவத்தை. |
| 02/07/15/21 | ஜூன் 2022 | இல. 145, மலே வீதி, கொழும்பு 02. |
| 02/07/15/21 | ஜூன் 2022 | இல. 66, காலி வீதி, கல்கிசை. |
| 02/07/15/21 | ஜூன் 2022 | இல. 11, கல்தெமுல்ல வீதி, மொரட்டுவ. |
| 02/07/15/21 | ஜூன் 2022 | இல. 20, தர்மபால மாவத்தை, கொழும்பு 03. |
| 02/07/15/21 | ஜூன் 2022 | இல. 245, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10. |
| 02/07/15/21 | ஜூன் 2022 | இல. 54, டி.எஸ்.சேனாநாயக்க மாவத்தை, பொரளை. |
| 02/07/15/21 | ஜூன் 2022 | இல. 197, டீன்ஸ் வீதி, கொழும்பு 10. |
| 02/07/15/21 | ஜூன் 2022 | இல. 556, 558, மருதானை வீதி, கொழும்பு 10. |
| 02/07/15/21 | ஜூன் 2022 | இல. 239, கிருல வீதி, நாரஹேன்பிட்டி. |
| 02/07/15/21 | ஜூன் 2022 | இல. 10, ஸ்டேசன் வீதி, மொரட்டுவ. |
| 02/07/15/21 | ஜூன் 2022 | இல. 68, ஹொரண வீதி, பிலியந்தலை. |
| 02/07/15/21 | ஜூன் 2022 | இல. 28, தெஹிவளை வீதி, பொரலஸ்கமுவ. |
| 02/07/15/21 | ஜூன் 2022 | இல. 227, டி சொய்ஸா வீதி, மொரட்டுமுல்ல, மொரட்டுவ. |
| 03/08/16/22 | ஜூன் 2022 | இல. 118A, கொழும்பு வீதி, குருநாகல். |
| 03/08/16/22 | ஜூன் 2022 | இல. 103A, கொழும்பு வீதி, குருநாகல். |
| 03/08/16/22 | ஜூன் 2022 | இல. 21, தம்புளை வீதி, குருநாகல். |
| 03/08/16/22 | ஜூன் 2022 | இல. 12, பிரதான வீதி, குளியாப்பிட்டி. |
| 03/08/16/22 | ஜூன் 2022 | இல. 31, குருநாகல் வீதி, கலேவெல. |
| 03/08/16/22 | ஜூன் 2022 | இல. 35, சரசவி கட்டிடம், பிரதான வீதி, நாரம்மல. |
| 03/08/16/22 | ஜூன் 2022 | இல. 835/2A, தலங்கம வடக்கு, மாலபே. |
| 03/08/16/22 | ஜூன் 2022 | இல. 365, ஹைலெவல் வீதி, கொட்டாவ. |
| 03/08/16/22 | ஜூன் 2022 | இல. 76, ஹைலெவல் வீதி, ஹோமகம. |
| 03/08/16/22 | ஜூன் 2022 | இல. 347A, கோட்டே வீதி, ராஜகிரிய |
| 03/08/16/22 | ஜூன் 2022 | இல. 69, தெஹிவளை வீதி, மஹாரகம. |
| 03/08/16/22 | ஜூன் 2022 | இல. 227/A, ஹைலெவல் வீதி, வத்தேகெதர, மஹாரகம |
| 03/08/16/22 | ஜூன் 2022 | இல. 124/A, துட்டுகெமுனு வீதி, கொஹுவல. |
| 03/08/16/22 | ஜூன் 2022 | இல. 165, தர்மபால மாவத்தை, கொழும்பு 07. |
| 03/08/16/22 | ஜூன் 2022 | இல. 50/12, கொடகம வீதி, அத்துருகிரிய. |
| 03/08/16/22 | ஜூன் 2022 | இல. 04, பாணந்துறை வீதி, பண்டாரகம. |
| 03/08/16/22 | ஜூன் 2022 | இல. 18, கெசெல்வத்த, பாணந்துறை. |
| 03/08/16/22 | ஜூன் 2022 | இல. 508, காலி வீதி, பாணந்துறை. |
| 03/08/16/22 | ஜூன் 2022 | இல. 103, பாணந்துறை வீதி, ஹொரண. |
| 03/08/16/22 | ஜூன் 2022 | இல. 534, காலி வீதி, வாத்துவ. |
| 03/08/16/22 | ஜூன் 2022 | இல. 334, பிரதான வீதி, களுத்துறை தெற்கு. |
| 03/08/16/22 | ஜூன் 2022 | இல. 358/D, மத்துகம வீதி, தர்கா நகர். |
| 03/08/16/22 | ஜூன் 2022 | இல. 175/A, காலி வீதி, பேருவளை. |
| 03/08/16/22 | ஜூன் 2022 | இல. 358, காலி வீதி, அளுத்கம. |
| 03/08/16/22 | ஜூன் 2022 | இல. 84A, காலி வீதி, தெஹிவளை. |
| 03/08/16/22 | ஜூன் 2022 | இல. 124, காலி வீதி, தெஹிவளை. |
| 03/08/16/22 | ஜூன் 2022 | இல. 224, காலி வீதி, வெள்ளவத்தை. |
| 03/08/16/22 | ஜூன் 2022 | இல. 269, பிரதான வீதி, அத்திடிய. |
| 03/08/16/22 | ஜூன் 2022 | இல. 275/75, பேராசிரியர். ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07. |
| 03/08/16/22 | ஜூன் 2022 | இல. 676, காலி வீதி, கொழும்பு 03. |
| 03/08/16/22 | ஜூன் 2022 | இல. 51A, டபிள்யூ.ஏ.சில்வா மாவத்த, கொழும்பு - 06 |
| 03/08/16/22 | ஜூன் 2022 | இல. 150, பிரதான வீதி, காலி. |
| 03/08/16/22 | ஜூன் 2022 | இல. 96/2, காலி வீதி, அம்பலாங்கொட. |
| 03/08/16/22 | ஜூன் 2022 | இல. 598 E, ஹிரிம்புர வீதி, கராபிட்டிய. |
| 04/09/17/23 | ஜூன் 2022<br>ஜூன் 2022 | இல. 56, 57, எட்வின் விக்ரமரட்ன சொப்பிங் கம்பிளெக்ஸ், புதிய நகரம், மஹியங்கனை. |
| 04/09/17/23 | ஜூன் 2022 | இல. 44/1, புதிய பேருந்து தரிப்பிட வீதி, மொனராகலை. |
| 04/09/17/23 | ஜூன் 2022 | இல.10/2, இலங்கை வங்கிக்கு எதிரே, புதிய நகரம், தெஹியத்தகண்டிய. |
| 04/09/17/23 | ஜூன் 2022 | இல. 226, டி எஸ் சேனநாயக்க வீதி, கண்டி |
| 04/09/17/23 | ஜூன் 2022 | இல. 153, மடவல வீதி, கட்டுகஸ்தோட்டை. |
| 04/09/17/23 | ஜூன் 2022 | இல. 251, பிரதான வீதி, மாத்தளை. |
